KALKI
.12.2006 ரூ.8.00
0 பக்கங்கள்

கல்கி

குடும்பத்துடன் படிக்க...



விஷாலுடன் சண்டையா?

– பதறும் இயக்குநர்



கடுகடுத்த வைகோ... கைகுலுக்கிய ஜெ!

எக்ஸ்சேஞ்ச் எக்ஸ்சேஞ்ச் எக்ஸ்சேஞ்ச் எக்ஸ்சேஞ்ச் எக்ஸ்சேஞ்ச்

மைலாப்பூர்

ஸ்ரீ காமாட்சி சில்க்ஸ் -ல்

8.12.2006 முதல்



புதிய காஞ்சிபுரம் பட்டுச் சேலைகள்

~~ரூ. 3,500~~	ரூ.1,750/-
~~ரூ. 5,800~~	ரூ.2,900/-
~~ரூ. 4,300~~	ரூ.2,150/-
~~ரூ.14,800~~	ரூ.7,400/-

சிறிய குறைபாடுள்ள பட்டுச்சேலைகளுக்கு

70% வரை தள்ளுபடி

பழைய காஞ்சிபுரம் பட்டுச்சேலைகள் எக்ஸ்சேஞ்ச் செய்யப்படும்.

காஞ்சிபுரம் பட்டுச் சேலைகளுக்கு

கிறிஸ்துமஸ், புத்தாண்டு மற்றும் திருமண கால சலுகை

ஸ்ரீ காமாட்சி சில்க்ஸ்

எண்.13/7, வடக்கு மாட வீதி, கபாலீஸ்வரர் கோயில் அருகில்,

மயிலாப்பூர், போன் : 044-24933097, 24610444

MASTER & VISA CARDS ACCEPTED



(மகப்பேறு மருத்துவர்): மாதவிலக்குத் தள்ளி போன முப்பத்திரண்டு அல்லது முப்பத்து மூன்ற வது நாளிலேயே பொதுவாக கர்ப்பத்தை யூரின் டெஸ்ட் மூலம் உறுதி செய்துவிடலாம். உறுதி யானதும் செய்து கொள்ள வேண்டி டெஸ்ட்டுகள், பிளட்பிரஷர், வெயிட் யூரினில் சர்க்கரை மற்றும் புரோட்டீ அளவு, ப்ளட் க்ரூப், ஆர்.ஹெச்.டெஸ்ட் ரத்தத்தில் சர்க்கரை மற்றும் ரத்த சோகை இருக்கிறதா என்று தெரிந்த கொள்ள ஹீமோகுளோபின் பரிசே தனை ஆகியவை தவிர. (எதற்கும்) செ ஷுவல் வியாதிகளைக் கண்டறியு வி.டி.ஆர்.எல். ஹெச்.ஐ.வி. மற்றும் HbsA (ஹெப்படைடீஸ்) டெஸ்ட்டுகளும் இன்ற நடைமுறை.

இவற்றைத் தவிர அல்ட்ரா சவுண்ட் ஸ்கேன் மருத்துவரின் ஆலோசனையின் பேரில் மூன்ற மாதங்களுக்கு ஒரு தடவை என்ற கணக்கி மொத்தம் மூன்று தடவைகள் எடுக்கப்பட வேண்டும்

கர்ப்பகால பரிசோதனைகள்

ஒரு பெண் கர்ப்பமாக இருப்பது உறுதியானால் என்னென்ன பரிசோதனைகளை, எவ்வெப்போது செய்து கொள்ள வேண்டும்?

- ஆர்.கலைவாணி,
ஈரோடு

டாக்டர் தாட்சாயணி

என் அப்பாவுக்குச் சர்க்கரை இருப்பதால் முன்னெச்சரிக்கையாக எனக்கு டயாபடீஸ் பரிசோதனை செய்துகொண்டேன். பரிசோதித்த டாக்டரோ 'உங்களுக்கு டயாபடீஸ் இல்லை. ஆனாலும் உங்களுடைய இரத்தத்தில் சர்க்கரையின் அளவு நார்மலாக இல்லை' என்கிறார். எனக்கு மிகுந்த குழப்பமாக உள்ளது டாக்டர்... விளக்குங்களேன்..

- மு. ராமசாமி, வேடந்தாங்கல்

டாக்டர் மாதுரி (நீரிழிவு நோய் நிபுணர்): ஒரு




வருக்கு வெறும் வயிற்றில் இரத்தத்தின் சர்க்கரை அளவு 126MG/DLக்கு மேல் இருந்தால், அவருக்கு டயாபடீஸ் இருக்கிறது என்றும், 100MG/DLக்குக் கீழே இருந்தால் டயாபடீஸ் இல்லை என்றும் குறிப்பிடுகிறோம். இந்த இரண்டுக்கும் இடைப்பட்ட சர்க்கரை அளவை 'IFG' (Impaired Fasting Glucose) என்கிறோம். குளுக்கோஸ் எடுத்துக் கொள்ளப்பட்டு இரண்டு மணி நேரம் கழித்துப் பரிசோதனை செய்யும்போது இரத்தத்தின் சர்க்கரை அளவு 200-க்கு மேல் இருந்தால் டயாபடீஸ் இருக்கிறது என்றும், 140க்குக் கீழே இருந்தால் நார்மல் என்றும் கூறலாம். இந்த இரண்டு அளவுக்கும் இடைப்பட்ட அளவை 'IGT' (Impaired Glucose Tolerance) என்கிறோம்.

இந்த IFG, IGT அளவுகளை மதில் மேல் பூனை என்று சொல்லலாம். இப்படிப்பட்டவர்களுக்கு எப்போது வேண்டுமானாலும் டயாபடீஸ் வரலாம்.

என்னென்ன?



* டாக்டர் மாதுரி



* டாக்டர் தாட்சாயணி

இவர்களுக்குச் சிகிச்சை தேவையில்லை என்றாலும் டயட், உடற்பயிற்சி செய்து உடல் எடை அதிகரிக்காமல் பார்த்துக் கொள்ள வேண்டும். மூன்று மாதங்களுக்கு ஒருமுறை கண்டிப்பாக டயாபடீஸ் பரிசோதனை செய்து கொள்ள வேண்டும். உங்களுக்கு ஒருவேளை IFG, ITG இருப்பதாக உங்கள் மருத்துவர் கருதலாம்... விசாரியுங்கள்.

தொகுப்பு: **மனோ**

படங்கள்: **பொள்ளாச்சி சுந்தரம்**

கல்கி

ஒவ்வொரு இதழும் உங்கள் பேச்சைக்கு

பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட்டிற்காக பரதன் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடுபவர் :
லக்ஷ்மி நடராஜன்

கல்கி பில்டிங்க்ஸ்,
47-N.P., ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 32

ஆசிரியர் :
சீதா ரவி

தலைமை உதவி ஆசிரியர் :
மு.மாறன்

வடிவமைப்பு :
எஸ். ஸ்டீஃபன்
பி.ஆர். ராஜன்
எம். மோகன்
ச. கார்த்திகேயன்

தொலைபேசி :
2225 1522, 2225 0623,
2225 1324

தொலைநகல் :
044 - 22251021

மின்னஞ்சல் :

ஆசிரியர் குழு :
kalki@kalkiweekly.com

சந்தா பிரிவு :
subscription@kalkiweekly.com

பிற தகவல்களுக்கு :
info@kalkiweekly.com

கல்கி இன்டர்நெட் முகவரி :
www.kalkionline.com

சந்தா விவரம் :
உள்நாடு :
ஒரு வருடம் : ரூ.440/-
ஆறு மாதம் : ரூ.220/-
வெளிநாடு (விமானத்தபால்) :
ஒரு வருடம் : 65 யு.எஸ்.டாலர்

Bharathan Publications Private Limited,
Kalki Buildings,
47-NP, Jawaharlal Nehru Road,
Ekkaduthangal, Chennai - 600 032.

FOLLOW-UP

- பெற்றோர் - ஆசிரியர் சங்கங்கள் சாதி, மத, இன ரீதியாக இல்லாமல் ஆக்கபூர்வமாகச் செயல்பட வேண்டும்.
- ஊடகங்கள் தார்மிகப் பொறுப்புடன் இயங்க வேண்டும். ருசிகர, உணர்ச்சிகர சம்பவங்களைத் தேடித் திரியாமல், நிகழ்வுகளை மிகைப்படுத்தாமல், பாலியல் வர்ணனைகளைத் தவிர்த்து உண்மைச் செய்திகளை வெளியிட வேண்டும். பாலியல் குற்றங்களால் பாதிக்கப்பட்டவர்களின்- குறிப்பாக குழந்தைகளின்- உணர்வுகளை மதித்து அவர்களைப் பற்றிய அந்தரங்க விவரங்களை வெளியிடுவதைத் தவிர்க்க வேண்டும்.
- ஆசிரியர்கள் அன்பு கூடிய கண்டிப்புடன் (தண்டிப்பு அல்ல) மாணவர்களை நடத்த வேண்டும்.
- பெற்றோர் - ஆசிரியர் - பள்ளி அலுவலர்களுக்கிடையே ஓர் ஒருங்கிணைப்பும் பரஸ்பர அறிமுகமும் (orientation) அமைதல் வேண்டும்.
- பெற்றோர் - பள்ளியின் வழிகாட்டுதலின்படி அரசு இணைந்து உடல் ரீதியாக, மனரீதியாக மாணவர்களைப் பாதுகாக்க மாணவர்களுக்கான 'பாதுகாப்புக் கொள்கை' ஒன்றை வகுத்துத் தரவேண்டும்.

ஆலோசனை மையங்கள்

- நீதிபோதனை வகுப்புகள், நல்ல மதிப்பீடுகள் வளர்க்கும் கல்வி, செயல் மூலம் கற்றல், கவின் கலைகள் போன்றவற்றைத் தந்து மாணவ சிந்தனை சீர்படுத்தப்படல் வேண்டும்.
- குணநலத்தையும், நடத்தையையும் பள்ளி சரிசெய்து கொள்ளும் என்ற எண்ணம் கொள்ளாமல் பெற்றோர்கள் மாணவ நலனில் தொடர்ந்து அக்கறையும், கவனிப்பும் கொள்ள வேண்டும்.
- அரசாங்கம் பள்ளி நிர்வாகத்தைப் பற்றிய நிலை அறிய அடிக்கடி ஆய்வுகள் (Inspection) நடத்தப்பட வேண்டும். இவற்றை நடத்தி அறிக்கை தர என்.ஜி.ஓக்களின் உதவியை நாட வேண்டும்.
- நல்ல குடும்பச் சூழலே, நல்ல மனநிலை, உடல்நிலையுள்ள குழந்தையை உருவாக்கும் என்பதைப் பெற்றோர்கள் உணர்ந்து செயல்படுதல் வேண்டும்.
- பாலியலைப் பற்றிய அடிப்படை அறிவையும், பாதுகாப்பு அவசியத்தையும் மாணவர்களுக்குப் பள்ளிகள் அறிவுறுத்த வேண்டும்.



– 'பள்ளி மாணாக்கர் பலியாவது ஏன்?' என்ற தலைப்பில் கடந்த இதழில் கல்கி நடத்திய கலந்துரையாடலின் இறுதியில் நிறைவேற்றப்பட்ட மேற்கண்ட தீர்மானங்களைப் பற்றி நம்மிடம் பேசிய பிரமுகர்களில் சிலரது கருத்துக்கள் இங்கே...



அவசியம்!

மேலும் அத் தீர்மானங்கள் அரசின் கவனத்துக்கும், மற்ற பத்திரிகை, தொலைக்காட்சிகளுக்கும் அனுப்பப்படுள்ளன.

சிவசங்கரி (எழுத்தாளர்): பத்துத் தீர்மானங்களும் மிகச் சரியான தீர்மானங்கள். இன்றைக்குக் கூட்டுக் குடும்பங்கள் உடைந்து, தனிக்குடும்பங்கள் அதிகரித்துள்ளதால் குழந்தைகளுக்கு ஏதாவது பிரச்னை ஏற்படும்போது அவற்றை நிவர்த்தி செய்யவோ வேறு சந்தேகங்களைத் தீர்க்கவோ ஆட்கள் இல்லை. ஆகையால் பள்ளிகள் 'கவுன்ஸெலிங் சென்டர்' ஆரம்பித்து, அங்கு நிரந்தர கவுன்ஸெலரை அமர்த்த வேண்டும். கவுன்ஸெலிங் என்றால் மன நோயாளிக்கானது என்று நினைப்பது தவறு. இந்த ஆலோசகர்கள் குழந்தைகளுடைய சந்தேகங்களைத் தீர்த்து வழி நடத்த வேண்டும். குழந்தைகள் தங்களுடைய கோபம், ஆத்திரம், இழப்பின் வலி ஆகியவற்றைப் பகிர்ந்து கொள்ள சரியான சூழல் இல்லாதபோது என்ன செய்வார்கள்! ஆகையால் இத்தகைய ஆலோசனை மையங்கள் அவசியம்.

மேலும், பெற்றோர், பள்ளி, வீட்டுச் சூழல், ஒட்டுமொத்த சமூகம் என அனைவரிடத்திலும்


• சிவசங்கரி





• திருப்பூர் கிருஷ்ணன்



• ஜானகி விஸ்வநாதன்

மனமாற்றம் தேவை.

ஜானகி விஸ்வநாதன் (இயக்குநர்):

கல்கி முனைப்போடு கலந்துரையாடல் செய்து எடுத்துள்ள இந்தப் பத்துத் தீர்மானங்களும் செயல் படுத்தப்பட்டால் பிரச்னைகள் குறையும். குழந்தைகளிடம் பாதுகாப்பு உணர்வை ஏற்படுத்த வேண்டும். எது சரி, எது தவறு என்பதைச் சரியாக பொறுமையாகச் சொல்லிப் புரியவைக்க வேண்டும். குழந்தையின் படிப்பு மட்டுமே என் பொறுப்பு என்று ஆசிரியர்களும், குழந்தைகளை வளர்ப்பது மட்டுமே எங்கள் பொறுப்பு என்று பெற்றோர்களும் நினைப்பது தவறு. இரு தரப்புகளுமே தமது பொறுப்புக்கான அளவினை விரிவாக்கிக் கொள்ள வேண்டும். இருவரிடையேயும் குழந்தைகளைப் பற்றிய கருத்துப் பரிமாற்றங்கள் நடைபெற வேண்டும்.

திருப்பூர் கிருஷ்ணன் (அமுதசுரபி ஆசிரியர்):

பள்ளிகளில் பாடங்களுக்குக் கொடுக்கிற முக்கியத்துவத்தை நம் நாட்டுப் பண்பாட்டினை, கலாசாரத்தைப் போதிக்கவும் கொடுக்க வேண்டும்.

வெறும் கல்வித் தகுதியை வைத்து மட்டும் ஆசிரியர்களைத் தேர்வு செய்வதைவிட அவர்களுடைய ஒழுக்கப் பின்னணியையும் பார்த்துப் பணியில் சேர்க்க வேண்டும்.

கல்கி பெரும் முயற்சி எடுத்து கொண்டு வந்த தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டால், பள்ளி மாணாக்கர் - ஆசிரியர் - பெற்றோர் உறவும், மனதும் நிம்மதியாகவும், வளமோடும் இருக்கும்.

தொகுப்பு: **ஆதித்யா, சுகந்தி ஜி. பாரதி**

தொல்லை கொடுக்கும் முல்லைப் பெரியாறு!

இன்று தமிழகத்துக்கும் கேரளத்துக்குமான சச்சரவில் சிக்கிக் கிடக்கும் முல்லைப் பெரியாறு அணை, ஜெ.பென்னிகுயிக் என்ற ஆங்கிலேயப் பொறியாளரால் கட்டப்பட்டு, 1895-ல் திறக்கப்பட்டது. தமிழகத்தின் நெல்லை மாவட்டத்தில் சிவகிரியில் உற்பத்தியாகும் பெரியாறு, மேற்கு நோக்கிச் சென்று கொச்சி அருகே அரபிக் கடலில் கலக்கிறது.

அதைக் கிழக்கு நோக்கி, அதாவது தமிழகத்துக்குத் திருப்பி விடுவதுதான் அணை கட்டப்பட்டதன் நோக்கமே! அந்த நோக்கம் மீறப்பட்டு வருவதால்தான் இரு மாநிலங்களுக்கான சச்சரவு தொடர்ந்து கொண்டிருக்கிறது.



பதினேழாம் நூற்றாண்டில் இராமநாதபுரத்தை சேதுபதி மன்னர்கள் ஆட்சி செய்தபோதே, மதுரை, இராமநாதபுரம் பகுதிகளின் வறட்சியைப் போக்க, பெரியாறின் மீது அணை கட்டத் திட்டமிட்டுள்ளனர். ஆனால் நிதிப் பிரச்னையால் அந்தத் திட்டம் கைவிடப்பட்டுவிட்டது.

பின்னர், 1882-ல்தான் அணை கட்டப்பட்டது. சிவகிரியிலிருந்து கிளம்பும் பெரியாறு, வழியில் பல சிறிய ஆறுகளை இணைத்துக்கொண்டு, கேரளப் பகுதியில் உள்ள முல்லை என்ற மற்றொரு ஆற்றைச் சந்திக்கும் இடத்தில் அமைந்துள்ளது இவ்வணை.

முல்லைப் பெரியாறு அணையின் முழு நீர்மட்டம் 152 அடியாகும். அதன் 104ஆவது அடியில் தமிழகத்துக்குத் தண்ணீரைத் திருப்பும் சுரங்கப் பாதைகள் உள்ளன.

அணை கட்டும் இடம் திருவிதாங்கூர் சமஸ்தானத்துக்குச் சொந்தமாக இருந்ததால் பிரிட்டிஷ் அரசு அந்த அரசுடன் ஓர் ஒப்பந்தம் போட்டுக்கொண்டது. அதன்படி 'நீரில் மூழ்கும் சுமார் 8100 ஏக்கர் நிலத்துக்கு வருடம் ஒன்றுக்கு 40000 ரூபாய் குத்தகைப் பணமாகக் கொடுக்க வேண்டும். திருப்பி விடப்படும் தண்ணீரை விவசாயத்துக்கு மட்டும்தான் பயன்படுத்த வேண்டும்' என்பவைதாம் ஒப்பந்த விதிகள். இந்த ஒப்பந்தம் 999 வருடங்கள் அமலில் இருக்கும் என்று உடன்பாடு எட்டப்பட்டது. 1886-ஆம் வருடம் இந்த ஒப்பந்தம் கையெழுத்தானது.

சுமார் 70, 80 வருடங்கள், எந்தப் பிரச

னையுமில்லாமல் பெரியாறு பாசனம் நல்ல முறையில் நடந்து வந்தது. பெரியாறு அணை குகை வழியாக தமிழகத்துக்கு தண்ணீர் வருகிறது. அந்த நீரின் வேகத்தைப் பயன்படுத்தி மின்சாரம் எடுக்கும் முயற்சி, 1953-ல் ராஜாஜி முதல்வராக இருந்தபோது மேற்கொள்ளப்பட்டது. இது சம்பந்தமாக கேரள முதல்வருடன் பேசுவதற்காக கம்யூனிஸ்ட் தலைவர் பி.ராமமூர்த்தியை அனுப்பினார் ராஜாஜி. 1954-ல் மின் நிலையம் அமைக்கப்பட்டது. 1970-ல் முல்லைப் பெரியாறு தொடர்பாக போடப்பட்ட ஒப்பந்தத்தில் சில திருத்தங்கள் செய்யப்பட்டன. அதன்படி ஏக்கருக்கு ஐந்து ரூபாயாக இருந்த குத்தகைப் பணம் முப்பது ரூபாயாக உயர்த்தப்பட்டது. இதன்படி பார்த்தால், நீட்டிப்புப் பகுதியான 8100 ஏக்கருக்கு கிட்டத்தட்ட ஆண்டு ஒன்றுக்கு இரண்டரை லட்ச ரூபாய் கொடுத்து வருகிறது தமிழக அரசு. மேலும் பெரியாறு திட்டத்தில் தமிழ்நாட்டால் உற்பத்தி செய்யப்படும் மின்சாரத்தை, யூனிட் ஒன்றுக்கு இரண்டு பைசா மட்டுமே கொடுத்து வாங்கிக் கொள்கிறது கேரள அரசு.



* ராஜாஜி

பெரியாறு அணை பலமிழந்து வருவதாக 1960களில் பேச்சு கிளம்பியது. அதனால் அணையின் நீர்மட்டத்தை 152 அடியிலிருந்து குறைக்க வேண்டும் என்று குரல் கொடுக்கத் துவங்கி விட்டார்கள் கேரளத்தினர். இரு அரசாங்கங்களும் பேசிப் பல்வேறு வல்லுநர் குழுக்களை அமைத்து அணையைச் சோதித்தன. ஆனால் அணை பலமாக இருப்பதாகவே சொல்லிவிட்டன குழுக்கள். இருந்தும், கேரள அரசு நீர்மட்டத்தைக் குறைத்தே தீர வேண்டும் என்று பிடிவாதம் பிடித்தது. 1978-ஆம் ஆண்டு அந்தப் பகுதியில் இலேசான நிலநடுக்கம் ஏற்பட்டது. அடுத்த முறை நிலநடுக்கம் வந்தால் அணை உடைந்துவிடும் என்று கூறி கேரள அரசு நீர் மட்டத்தைக் குறைப்பதிலேயே குறியாக இருந்தது. 1979-ல் நீர்ப்பாசன கமிஷன் தலைவர் கே.சி.தாமஸ் அணையை மேற்பார்வையிட்டு, நீர்மட்டத்தைக் குறைக்க வேண்டும் என்று கூறி, கூடவே அணையைப் பலமாக்கவும் பல வழிகளைச் சொன்னார். அதன்படி அணையைப் பலமாக்கும் முயற்சியில் ஈடுபட்ட தமிழக அரசு, நீர் மட்டத்தை 136 அடியாகக் குறைக்கவும் ஒப்புக்கொண்டது. இது கேரள அரசின் நச்சரிப்புக்குக் கிடைத்த முதல் வெற்றி!

புதிய அணை கட்டப்பட வேண்டும் என்று சொல்லும் கேரள அரசு அடைந்து வரும் லாபங்கள் ஏராளம்

அணையைப் பலப்படுத்தும் வேலையை பல்வேறு தடைகளுக்கிடையே செய்து வந்தது தமிழக

அரசு. சுமார் 20 கோடிக்கு மேலும் செலவழித்து அணை பலப் படுத்தப்பட்டது. ஆனாலும் கேரள அரசு '152 அடியா... முடியாது.. 145 அடிவரை கூட நீரைத் தேக்கி வைக்க அனுமதிக்க மாட்டோம்' என்று பிடிவாதம் பிடித்தது. மறுபடியும் பல வல்லுநர் குழுக்கள் அணையைப் பார்வையிட்டுச் சோதனை செய்து, 145 அடிவரை தாராளமாக நீரைச் சேமிக்கலாம் என்று சொன்ன பிறகும் கேரளா உடன்படவில்லை. அதை எதிர்த்து சுப்பிரமணிய சாமி மற்றும் தமிழக அரசின் சார்பில் வழக்கு தொடரப்பட்டது. '142 அடிவரை நீரைத் தேக்கலாம்' என்று சுப்ரீம் கோர்ட் சொல்லிவிட்டது.



* கேரள முதல்வர் அச்சுதானந்தன்

இப்போது பிரச்னை அரசியலாகிவிட்டதால் பேச்சு வார்த்தைக்கும் பச்சைக் கொடி காட்டிவிட்டது சுப்ரீம் கோர்ட்.

அணையின் நீர்மட்டம் 136 அடியாக இருப்பதால் தமிழகத்துக்கு ஏற்படும் நஷ்டங்கள் நிறைய. 104 அடி வரை உள்ள தண்ணீரைத் தான் சுரங்கத்தின் வழியாக தமிழகத்துக்குத் திருப்ப முடியும். அதாவது அணையில் 32 அடி நீர் கொள்ளளவைத்தான் பயன்படுத்த முடியும். இதனால் தமிழகத்துக்கு வரும் நீரின் அளவு குறைந்து, சுமார் 80000 ஏக்கர் நிலம் பாசன வசதி இழந்தது. இது தவிர நீர்மட்டம் குறைந்ததால் நீர்ப்பிடிப்புப் பகுதி 6000 ஏக்கராகக் குறைந்து போனது. ஆனால், தமிழக அரசோ அதே 8100 ஏக்கருக்குக் குத்தகைப் பணத்தை இன்றும் செலுத்தி வருகிறது. 'புதிய அணை கட்டப்பட வேண்டும்' என்று சொல்லும் கேரள அரசு அடைந்து வரும் லாபங்கள் ஏராளம்.



* முல்லைப் பெரியாறு- தமிழக அனைத்துக் கட்சிக் கூட்டம்..

பெரியாறுக்கும் கீழே, இடுக்கி உட்பட 12 அணைகளை கேரள அரசு கட்டி இருக்கிறது. 136 அடிக்கு மேல் உபரியாக நீர் சேரும் போது அந்த நீரையும், 104 அடிக்குக் கீழே இருக்கும் நீரையும் பெரியாறு வழியாகப் பெறும் கேரளா, அதைத் தமது பாசன வசதிகளுக்குத் தாராளமாகப் பயன்படுத்துவதுடன், மின்சாரமும் உற்பத்தி செய்து கொள்கிறது.

மன்னர் காலத்தில் போடப்பட்ட 999 ஆண்டு ஒப்பந்தம், சுதந்திர இந்தியாவில் செல்லாதது என்றும் சொல்கிறது கேரள அரசு. புதிய அணை கட்டப்படுமானால், தமது தேவைகளுக்கு ஏற்ப அதைக் கட்டிக்கொள்ளவும், தமிழகத்துடன் புதிய ஒப்பந்தம் போடவும் முடியும் என்று நினைக்கிறது கேரள அரசு. தவிர, கேரளப் பகுதி மக்களுக்கு வேலைவாய்ப்பும் கிடைக்குமே!

இவையெல்லாம் சரி, தமிழகத்தின் நிலை? அது, அரசியல் உலகில் அவ்வப்போது தோன்றும் தேர்தல் நாடகத்தைப் பொருத்தது.

- ஸ்ரீநி



தமிழ்க் கடவுள் என முருகனை உரிமை கொண்டாடி வருகிறோமே, அது ஏன்...?

இக்கேள்விக்கு உணர்வு ரீதியாகவும் தர்க்க ரீதியாகவும் அழகான பதில்களை அடுக்கிக் கொண்டே போனார்- சொல்லின் செல்வர் சுகி சிவம்:

"யாதுக்கும் பொதுவான இறைவனை ஒரு மொழி அடையாளத்துக்குள், இன அடையாளத்துக்குள், இட எல்லைக்குள் அடக்கிச் சொல்லலாமா? என்று கேள்வி எழும்.

ஆனால், தான் கொண்ட இறைவனை, தான் ஏற்றுக் கொண்ட தலைவனை, மொழியால், தனது ஒப்புமை இல்லாத உயர்வாய்க் காண்பதும் பாடுவதும் போற்றுவதும் மரபான ஒன்றே யாகும். இது ஒரு பதிவிர தாதர்மம் போன்ற மனப் பாங்கு.

அப்படி 'முந்து தமிழ் மாலை' என்று அருணகிரிநாதரால் பாடப்பெற்ற முந்துதமிழ்க் கடவுளாக முருகன் விளங்குகிறான். முந்து என்ற சொல் அவன் புதியவனாக முந்தி நிற்பதையும் குறிக்கும்; அவனே மூத்தவன் முன்னைப் பழம் புகழ் உடையவன் என்பதையும் குறிக்கும்.

தமிழையும், முருகனையும் தனித் தனியே பிரிக்கவொண்ணாமல் தமிழே முருகனாய், முருகனே தமிழாய் ஆனதால் அவன் 'தமிழ்க்கடவுள்' ஆகிறான்.

தமிழின் மிகப் பழைய இலக்கியம் சங்க இலக்கியம். சங்க இலக்கியத்தின் முதல் பாட்டு பத்துப்பாட்டு. அதில் முதல் பாடல் திருமுருகாற்றுப்படை. நக்கீரர் எழுதிய இன்னொரு பாடல் 'நெடுநல்வாடை'. ஆனால், திருமுருகாற்றுப்படைதான் முதலில் வைக்கப்பட்டது – தமிழின் கடவுள் வாழ்த்தே முருகாற்றுப் படை என்பதை உணர்த்தத்தான்!

தமிழ் எழுத்துகள் வல்லின, மெல்லின, இடையினங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன. 'முருகு' என்ற பெயரிலேயே மூவினங்களும் கலந்திருக்கக் காண்கிறோம். ஆனால் வல்லினத்துக்குப் பதில் மெல்லினம் முதலில் வருகிறது இப்பெயரில் – அவனுடைய கருணையை - மென்மனத்தைக் குறிக்கவே வருகிறது.



• நீதிபதி கே.சந்துரு நூல்களை வெளியிட, பெற்றுக் கொள்கிறார் சுகி.சிவம்...

தமிழுக்கே உரிய சிறப்பெழுத்து ஆய்த எழுத்து. முருகனின் வேலாயுதத்துக்கும் தனிச்சிறப்பு உண்டு. வேல் மட்டுமே வணங்கப்படும் ஆயுதம். முருகனும் வேலும் ஒன்றே. அதனால் தான் வேலாயுதம் சக்திவேல், பழனி வேல் என்றெல்லாம் பெயர்கள் வழங்குகின்றன. தமிழர்களின் வீர வழிபாடு என்பது முருக வழிபாடானது.

தமிழர்களின் வாழ்வு நெறியானது களவென்றும், கற்பு என்றும் பிரிக்கப்பட்ட வாழ்வு. அந்த வாழ்வியலை

மேற்கொண்டவனான முருகன் கற்பொழுக்கத்தில் தெய்வானையையும், களவொழுக்கத்தில் வள்ளியையும் மணந்து காட்டி தமிழ் வாழ்வியலின் தலைவன் என்றாகிறான்.

தந்தைக்கு உபதேசித்து சுவாமிநாதன் என்னும் பெயர் பெற்ற முருகன், பிரணவ மந்திரத்தை சிவபெருமானின் இரு காதுகளிலும் தமிழில் ஓதி, அதற்குப் பக்தி மொழி எனும் சிறப்பிடத்தை முதலில் பெற்றுத் தந்தான்.



• பார்வையாளர்கள்...



தமிழ்க் கடவுள் பங்கேற்ற புத்தக வெளியீடு!

பழத்தமிழர் வழிபாடு இயற்கை வழிபாடு. பழமுதிர்ச்சோலையில் அமர்ந்த முருகன் அழகின் வெளிப்பாடாய், மலையாய், அருவியாய், மரங்களாய், அமைந்து முருக வழிபாட்டின் உச்சமான அழகு வழிபாட்டைப் பறைசாற்றுகிறான்.

முருகன் உபாசனை என்றாலே அழகின் உபாசனை என்கிற அளவுக்கு முருகன் அழகின் வடிவமாகவே ஆகிறான்.

பகழிக்கூத்தரின் தமிழைக் கேட்க விரும்பி, அவருக்கு வயிற்றுவலி தந்து, அவருடைய தமிழைக் கேட்ட பாங்கிலும், பாம்பன் சுவாமியின் பைந்தமிழ்ப் பாடலைக் கேட்க பாலகனாய் அனுதினம் வந்த பாங்கிலும் முருகன் தமிழ் நேசனாகிறான்.

'முத்தமிழால் வைதாரையும் வாழ வைப்பான் முருகன். தமிழால் தன்னை வாழ்த்திப் பாடியவர் மட்டுமல்ல, தன்னை ஏசுபவரையும் வாழ வைக்கும் வள்ளலாகிறான்' என்கிறார் அருணகிரியார்.''

இத்தனையையும் கேட்கக் கேட்கப் பார்வையாளர்கள் பரவசமானார்கள். தமிழ்க்கடவுளைப் பற்றி, தமிழ்நூல்கள் வெளியீட்டு நிகழ்ச்சியில், தலைசிறந்த தமிழ் மகனின் நினைவு நாளில் இவ்வளவும் கேட்கக் கிடைத்ததில் இரட்டிப்புப் பரவசம்!

• அம்ருதா முரளியின் இறை வணக்கம்...




டிசம்பர் 5, அமரர் கல்கி நினைவு நாள்.

ஆஸ்திக சமாஜம் அரங்கம், ஆழ்வார் பேட்டை.

"வாக்குண்டாம், நல்ல மனமுண்டாம்
மாமலராள் நோக்குண்டாம்..."

என்று தும்பிக்கையான் பாதம் தொழுததோடு இறைவணக்கம் முடிய வில்லை. அம்ருதா முரளி 'பாரத புண்ய பூமி' என்று அமரர் கல்கி இயற்றிய தேச பக்திப் பாடலை, பாபனாசம் சிவன் அமைத்துத் தந்த குந்தலவராளி ராகத்தில் பாடுகிறார்!

பாடல் தேர்வில் ஒரு பலே பொருத்தம் இருக்கிறது. வெளியிடப்படவிருப்பது,



• கௌரவிக்கப்பட்ட ஓவியர்கள்...

'தியாக பூமி' திரைப்படத்தைப் பற்றிய அமரர் கல்கியின் நூல். 'பாரத புண்ய பூமி' பாடல் இத் திரைப்படத்தில் டி.கே.பட்டம்மாளின் குரலில் ஒலித்த பாடல். அதை பாவத்துடன் பாட விழாவுக்குக் களையான ஆரம்பத்தை அளித்த அம்ருதா முரளிக்கு மேடையில் நினைவுப் பரிசாக அமரர் கல்கியின் நூல்களே வழங்கப்படுகின்றன.

'தியாக பூமி' திரைப்படத்தை இயக்கி, தயாரித்த கே.சுப்ரமண்யம் குடும்பத்தினர், இசையமைத்து, சம்பு சாஸ்திரியாக நடித்த பாபனாசம் சிவன் குடும்பத்தினர் பலர் பார்வையாளர்களிடையே மகிழ்ச்சியோடு அமர்ந்திருக்க, சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி மாண்பமை கே.சந்துரு,

'தியாக பூமி திரைப்படமும் பேனா யுத்தமும்'

'கண்டேன் இலங்கையை'

ஆகிய (அமரர் கல்கியின்) இரு நூல் களையும் வெளியிட, சுகி.சிவம் முதல் பிரதிகளைப் பெற்றுக் கொண்டார்.

முன்னதாக, "நேர்மையின் சக்திக்கு மட்டுமே கட்டுப்படுவார் நீதிபதி" என்று கல்கி ஆசிரியர் சீதா ரவி வரவேற்புரையில் குறிப்பிட்டதற்கேற்ப, இன்றைய திரைப்படத் துறையின் சீரழிவுகளைச் சாடியும் 'தியாக பூமி'யை வியந்தும் உரையாற்றினார் கே.சந்துரு.

"கல்கி போன்றவர்களின் தியாகத்தால் தான் இன்று நாம் சுதந்திரக் காற்றைச் சுவாசிக்க முடிகிறது. 'தியாகபூமி' படத்தில் இடம்பெற்றுள்ள கதாநாயகியின் சித்திரிப்பு, அந்தப் படம் தடை செய்யப்பட்டது, தடை அமலாகும் முன் இடைவிடாது காட்டப்பட்டது போன்ற செய்திகளை அறியும்போது, கல்கி அவர்களின்



• ...பதிப்பாளர் மற்றும் தொகுப்பாளர்

புதிய பரிமாணம் நமக்கு வெளிபபடு. சமூக சீர்திருத்த உள்ளமும் தேச ட... உணர்வும் தியாகமும், துணிவும் வெளிப் படுத்தும் படைப்பு 'தியாக பூமி'.

"'கண்டேன் இலங்கையை' நூலிலோ அவருடைய தீர்க்கதரிசனம் வெளிப்படுகிறது. இன்று நாம் காணும் இலங்கைப் பிரச்னையின் சிக்கல்களை அன்றே அவர் எதிர்பார்த்து வரிசைப்படுத்தி எழுதியிருப்பது மிக ஆச்சர்யமான விஷயம்" என்று பேசினார் நீதிபதி.

சுகிசிவம் எழுதிய 'வெற்றி நிச்சயம்' நூல் மூன்று ஆண்டுகளில் ஏழு பதிப்புகள் கண்டதை வியந்து பாராட்டி, சுகி. சிவத்தை வாழ்த்துரை வழங்க அழைத்தார் கல்கி ராஜேந்திரன்.

"என்னை எழுதச் சொன்னவரே ராஜேந்திரன் அவர்கள்தான். பேசிக் கொண்டிருந்தவனை எழுதும் சங்கடப் பணியில் ஈடுபடுத்தியவர் இவர்தான். எனக்கு எழுதுகோல் தந்த பணிமனை கல்கி. அந்த வகையில் நானும் கல்கி குடும்பமே" என்றவர்,

"கல்கியின் எழுத்துகள் எந்தெந்த விஷயங்களைத் தொடும் என்பதைத் தீர்மானம் செய்யவே முடியாது" என்று கூறி, 'கண்டேன் இலங்கையை' நூலில் சவரத்தொழிலாளியைப் பற்றியும் சலூனைப் பற்றியும் கல்கி எழுதியுள்ளதைக் குறிப்பிட்டார்.

தொகுப்பாசிரியர் சுப்ர.பாலன், பதிப்பாளர் வானதி திருநாவுக்கரசு, நூல் முகப்புகளை வடிவமைத்த ஓவியர்கள் ஹரிஷ் குகன், நிர்மல்நாதன் ஆகியோர் இவ்விழாவில் கௌரவிக்கப்பட்டது அதிசயமில்லை...

கே.சுப்ரமண்யம் குடும்பத்துப் பிரதிநிதிகளும் பாபனாசம் சிவன் மகள் ருக்மிணி ரமணியும் மலர்ச் செண்டுகளால் மகிழ்விக்கப்பட்டது இனிமையான ஆச்சர்யம். அமரர் கல்கி மற்றும் கல்கி சதாசிவம் - எம்.எஸ்ஸின் கொள்ளுப் பேத்தி கௌரி நடராஜன் முருகனுக்கு மங்களமாக 'நாத விந்து கலாதி' என்ற திருப்புகழைப் பாட, 'தீப மங்கள ஜோதி' பிரகாசத்தை முகங்களிலும் மனங்களிலும் ஏந்தி வீடு திரும்பினர் கல்கி ரசிகர்கள்.

• கௌரி நடராஜன்



- அருணா.செந்தில் குமரன்

படங்கள் : **ஸ்ரீஹரி**



கல்கி



2006 டிசம்பர் 17

விய மார்கழி 2

மலர் : 65

இதழ் : 20

தமிழ்த்திரு
நாடுதன்னைப்
பெற்ற தாயென்று
கும்பிடடி பாப்பா
- பாரதியார்

புதிய அத்தியாயம் பிறக்கட்டும்!


அதிபர் முஷாரஃப் தமது பிடிவாதத்திலிருந்து இறங்கி வந்திருப்பதால், காஷ்மீர் பிரச்னை தீர்வதற்கான வாய்ப்பை நாம் மகிழ்ச்சியோடு காண முடிகிறது.

என்.டி.டீ.வி.க்குப் பேட்டி அளித்த முஷாரஃப், "இதுவரை பேசிய (பிடிவாதப்) பேச்சுகளிலிருந்து பின் வாங்கி, இரு தரப்பினரும் கை கோக்க வேண்டும்" என்று திட்டவட்டமாகக் கூறியிருக்கிறார். இதுவரை பிடிவாதம் பிடித்ததாக அவர் ஒப்புக் கொண்டிருப்பதே பெரிது!

"அப்படியானால், நீங்கள் காஷ்மீர் மீது உரிமை கொண்டாடுவதை விட்டுக் கொடுப்பீர்களா?" என்று அடுத்த கேள்வி பேட்டியினூடே எழ, "காஷ்மீருக்குத் தன்னாட்சி தர இந்தியா ஒப்புக்கொண்டால், 'அவ்வுரிமை'யை விட்டுக் கொடுக்கத் தயாராக இருப்பதாகப் பதில் கூறியிருக்கிறார்.

முஷாரஃப் இப் பேட்டியில் முன் வைத்த நான்கு அம்சத் திட்டம் வரவேற்கத்தக்கதாகவே இருக்கிறது: 1) பாக். ஆக்கிரமிப்புப் பகுதிகள் உள்ளிட்ட காஷ்மீர் மாநிலத்துக்குத் தன்னாட்சி உரிமை வழங்குவது. 2) இம் மாநிலத்தின் இந்தோ-பாக் எல்லைப் பகுதிகளைக் கட்டுப்பாடுகள் நீக்கித் திறந்து விடுவது. 3) காஷ்மீரிலுள்ள பல தரப்பு மக்களின் பிரதிநிதிகள் அடங்கிய ஒரு மேற்பார்வைக் குழுவை நிறுவி, இந்த ஏற்பாடுகள் சீராக நடக்க வழி வகுப்பது. 4) காஷ்மீர் மாநிலத்திலிருந்து இரு தரப்பினரும் ராணுவத்தைப் படிப்படியாக வெளியேற்றுவது.

இதுவரை இந்தியாவும் பாகிஸ்தானும் இந்த நான்குமே முடியாத காரியங்கள் என்று கூறி வந்தன. இன்றோ, இவை சாத்தியம் என்று மட்டுமல்லாது அவசியம் என்றும் தீர்மானமாகப் பேசும் அளவுக்கு முஷாரஃப் இறங்கி வந்திருக்கிறார்!





அமெரிக்க செனட், இந்தியாவுடன் அணுசக்தி உற்பத்தித் துறையில் ஒத்துழைக்கத் தீர்மானம் நிறைவேற்றி, நம் நாட்டுடனான நல்லுறவில் ஒரு குறிப்பிடத்தக்கத் திருப்பத்தை ஏற்படுத்தியிருக்கிறது. மேலும், பயங்கரவாதத்தை ஒடுக்குவதில் பாகிஸ்தான் போதிய ஒத்துழைப்பு தரவில்லை என்பதாகவும் அமெரிக்காவும் பிரிட்டனும் நம்ப ஆரம்பித்துள்ளன. இவையெல்லாம் முஷாரஃப்பைச் சிந்திக்க வைத்திருக்கக் கூடும். இனி, இந்தியாவைப் பகைத்துக்கொண்டு அமெரிக்க ஆதரவுடன் காலந் தள்ளுவது இயலாத காரியம் என்று உணர்ந்து, முஷாரஃப் புதுக்குரலில் பேசியிருக்கலாம்.

எப்படியிருந்தாலும் சரி, முஷாரஃப்பின் பேச்சு காஷ்மீரில் அமைதி திரும்ப சாதகமான நிலையை உருவாக்கியுள்ளது. அது மட்டுமல்ல, முஷாரஃப் வெளியிட்டுள்ள கருத்துகள் கிட்டத்தட்ட இந்தியாவின் நிலைப்பாடுடன் ஒத்துப் போவனவாகவும் இருக்கின்றன.

பாகிஸ்தானுடனான பேச்சு வார்த்தைகளுக்கு மிகுந்த முயற்சி எடுத்துக்கொண்ட பிரதமர், இப்போது காஷ்மீர் பிரச்னையைச் சுமுகமாகத் தீர்ப்பதற்கு எழுந்துள்ள வாய்ப்பை வரவேற்று, தாமதமின்றிப் பேச்சு வார்த்தைகளைத் தொடர்ந்து, இரு தரப்பும் ஏற்கக்கூடிய திட்டத்தையும் அதை நிறைவேற்றுவதற்கான நடைமுறைகளையும் வகுக்க வேண்டும்.

காஷ்மீருக்குத் தன்னாட்சி வழங்குவதில் இந்தியா தயக்கம் காட்டுவதோ கௌரவம் பார்ப்பதோ உதவாது. சுதந்திரத்துக்கு முன்னால் தனி ராஜ்யமாகவே திகழ்ந்த அப்பகுதி, இனி இந்தியா - பாகிஸ்தானின் கூட்டு மேற்பார்வைக்கு உட்பட்ட தன்னாட்சி அமைப்பாகத் திகழ்வதில் பெரிய நன்மை விளையுமெனில் அதைச் செய்தே ஆக வேண்டும்.

அப்பகுதிக்கும் அங்கு வாழும் மக்களுக்கும் பாதுகாப்பு வழங்குவதும் அங்கு ஜனநாயக ஆட்சிமுறை செயல்பட அமைப்பு ஏற்படுத்துவதும் சவாலாகத்தான் இருக்கும். ஆனால், மனமிருந்தால் மார்க்கமுண்டு.

பேச்சுவார்த்தைகளின்போது இந்தியத் தரப்பில் பொறுமை, சாதுர்யம் - இவற்றோடு விழிப்புணர்வும் எச்சரிக்கை உணர்வும் இணைய, செத்துப் பிழைத்துக் கொண்டிருக்கும் காஷ்மீர் மக்களுக்கு ஒரு புதிய விடியல் தோன்றட்டும். எழுதப்படும் புதிய அத்தியாயம், மன்மோகன்சிங் தலைமையிலான இந்திய அரசுக்கு மாபெரும் வெற்றியாகவும் பெருமையாகவும் அமையும்; எதிர்கால சரித்திரம் வாழ்த்தும். வாய்ப்பை நழுவ விடாமல் பிரதமர் வெற்றிக்கொடி நாட்டட்டும்!

'திமிரு' - படத்தின் டைட்டில்தான் பயமுறுத்துவது மாதிரி இருந்தது. ஆனால் அதனை இயக்கிய தருண்கோபி மிக சாந்தமாக இருக்கிறார்-டென்ஷனாக்கும் கேள்விகளை நாம் கேட்டாலும்!

திமிரு படத்தை உண்மையா நீங்கதான் டைரக்ட் பண்ணுனீங்களா?

"இப்படிப் பலரும் கேட்கறாங்க. அதிலென்ன சந்தேகம்? ஜெயிச்சாத்தான் நம்புவாங்க போல இருக்கு."

உங்களுக்கும் நடிகர் விஷாலுக்கும் சண்டையாமே?

"அப்படியெல்லாம் ஒண்ணும் கிடையாது. சமீபத்துலகூட பேசினோம். 'சிவப்பதிகாரம்' ப்ரிவியூக்குக் கூட்டிட்டுப் போய்ப் படத்தைப் போட்டுக் காட்டினார். விஷால் எனது நண்பர். அவர் கூட சேர்ந்து மறுபடியும் ஒரு படம் கொடுப்பேன்."

ஆக்ஷன் படம் கொடுத்தாத்தான் சினிமாவுல நிலைக்க முடியும்னு 'திமிரை' எடுத்தீங்களா?

"'திமிரு'ல ஆக்ஷன் பிரதானமே இல்ல... லவ்தான் மெயின் சப்ஜெக்ட். ஓரிரு இடங்கள்ல வேணா கூடுதலா கொடுத்திருப்பேன். மத்தபடி அது ரொம்ப ஜாலியான, ஜனரஞ்சகமான படம்!"

இன்னிக்குத் தமிழ் சினிமாவுல ரெண்டு, மூணு படங்களுக்கு மேலே இயக்குநர்கள் நிலைச்சு நிக்கறதில்ல.. அதுக்குள்ளயே உங்க கற்பனை



வளம் தீர்ந்துடுதா?

"மற்ற இயக்குனர்கள் எப்படியோ... நான் என் கற்பனையையும், சமூக அக்கறையையும், ரசிகர்களையும் நம்பி சினிமாவுக்கு வந்தவன். நிச்சயம் நிறைய நல்ல சினிமாக்களைத் தொடர்ந்து கொடுப்பேன்."

எல்லா இயக்குனர்களுமே பொதுவா பெரிய ஹீரோக்களைத்தான் நம்புறீங்க. ஏன் புது முகங்கள்னாலே உங்களுக்குக் கசக்குது?

"நாங்க புதுமுகங்களை நம்பலாம்.

ஆனா எங்கள நம்பிப் படமெடுக்கிற தயாரிப்பாளரும், வாங்குற டிஸ்ட்ரிபியூட்டரும், 'எந்தப் பெரிய ஹீரோவோட கால்ஷீட் இருக்கு?'ன்னு கேக்குறாங்களே... அப்படியிருக்கறப்போ நாங்க பெரிய ஹீரோக்களை வச்சுப் படம் பண்ணாம வேறென்ன செய்ய?"

உங்களுக்கு நடிக்கிற ஆசை இருக்கா?

"அந்த மாதிரி ஐடியாவெல்லாம் எனக்குக் கெடையாது. ஒரு நடிகருக்குக் கதை சொல்லிக் காட்டும்போது நடிச்சுத்தானே காட்டுறோம். கேமராவுக்குப் பின்னாடிதான் நம்ம நடிப்பு."

காதல் திருமணம்தான் பண்ணிக்கப் போறீங்களாமே?

"நான் ரொம்ப நல்ல பையங்க. காலையில குளிச்சுட்டு, பழைய சோறும் உப்புக் கருவாடும் சாப்பிடுற சராசரி ஆளு. ஷூட்டிங், ஷூட்டிங் விட்டா வீடுன்னு இருக்கேன். நான் நல்ல இயக்குனரா வரணும்னு ஆசைப்பட்டவர் எங்க அண்ணன் மனோகர். தன்னோட கொறஞ்ச சம்பளத்திலயும் எனக்குத் தினம் நூறு ரூபா கொடுத்து, உதவி இயக்குனர் சான்ஸ் தேடச் சொல்வார். அவரோட உணர்வை மட்டுமல்ல, பாசத்தையும் நான் ரொம்ப மதிக்கிறதாலே அவருதான் என் திருமணத்தை முடிவு பண்ணணும்!"



விஷாலுக்கும் சண்டையா?

அடுத்து என்ன பண்ணப் போறீங்க?

"சிம்புவை வைத்து ஒரு படமும், ஜீவாவை வைத்து ஒரு படமும் பண்ணப் போறேன். அதுக்குண்டான கலந்துரையாடல் நடந்துக்கிட்டு இருக்கு."

- ஆ. முத்துராமலிங்கம்

படம்: **பொள்ளாச்சி சுந்தரம்**

–'திமிரு' தருண்கோபி

ராசிபலன்

நடக்குமென்பார்; நடக்கும்!

தஞ்சை பரத்வாஜ்

மேஷம்: சுமாரான வாரம். எதிலும் கவனமாகச் செயல்படுவது நல்லது. பொருளாதாரம் நன்றாக இருக்கும். குழந்தைகள் வழியில் சுபகாரியம் ஏற்படும். ஆஞ்சநேயரை வழிபாடு செய்து வரவும். ராகு/ கேது/குரு வழிபாடு செய்தல் உத்தமம்.

ரிஷபம்: சிறப்பான வாரம். சுப நிகழ்ச்சி கைகூடும். கல்வி வளம் மேலோங்கும். பணக்கஷ்டம் இருக்காது. கணவன், மனைவி உறவு நன்றாக இருக்கும். வியாபாரத்தில் நல்ல முன்னேற்றம் இருக்கும். வீடு/வாகனம் வாங்க நல்ல தருணம்.

மிதுனம்: தெய்வபலம் நிறைந்த வாரம். புண்ணிய ஸ்தலம் செல்வீர்கள். உடல் ஆரோக்கியம் சீராகும். சுபநிகழ்ச்சி கைகூடும். வியாபாரத்தில் நல்ல முன்னேற்றம் ஏற்படும். வழக்கு வெற்றி அளிக்கும். நண்பர்களால் அனுகூலம் ஏற்படும். குரு/சனி வழிபாடு செய்து வருதல் நலம் தரும்.

கடகம்: நன்மையான வாரம். எண்ணங்கள் ஈடேறும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. நண்பர், உறவினர்களால் ஆதாயம் ஏற்படும். வீடு/மனை வாங்க நல்ல தருணம். தொழில் துறையில் நல்ல முன்னேற்றம் கிட்டும். ராகு/கேது/சனி வழிபாடு நற்பயனைத் தரும்.

சிம்மம்: சுமாரான வாரம். வீடு மாற்றம் ஏற்படும். வராத பணம் வந்து சேரும். நண்பர், உறவினர்களால் ஆதாயம் கிட்டும். வீடு/மனை வாங்க நல்ல காலம்! வியாபாரத்தில் நல்ல அபிவிருத்தி ஏற்படும்.

கன்னி: மனத்தில் தைரியமும், தன்னம்பிக்கையும் மிகுந்து காணப்படும். எடுக்கும் முயற்சியில் வெற்றி கிட்டும். கல்வி வளம் மேலோங்கும். தடை விலகித் திருமணம் கைகூடும். குரு வழிபாடு செய்து வர, நற்பயன் கிட்டும்.

துலாம்: தனவிருத்தியான வாரம். பணக்கஷ்டம் இருக்காது. கல்வி வளம் மேலோங்கும். பூர்வீகச் சொத்து பாகப் பிரிவினை ஆகும். வழக்கு வியாபாரம் வெற்றி அளிக்கும். நீண்டதூர பிரயாண வாய்ப்பு வந்து சேரும். ராகு/கேது/சனி வழிபாடு செய்து வர, நற்பலன் பெருகும்.

விருச்சிகம்: செல்வாக்கு மிகுந்த வாரம். வாக்கு, தனம், கல்வி மேலோங்கும். வெளிநாட்டு அழைப்பு கிட்டும். திருமணம் கைகூடும். வீடு/மனை வாங்க நல்ல தருணம். வியாபாரத்தில் நல்ல முன்னேற்றம் கிட்டும். ராகு/கேது/குரு வழிபாடு செய்துவர, நற்பலன் உண்டாகும்.

பரத்வாஜ் பதில்கள்

என் மகளுக்குத் திருமணம் ஆகி பத்து வருடங்கள் ஆகிவிட்டன. குழந்தைப்பேறு இல்லை. இனியாவது குழந்தை பிறக்குமா?

- கோமளவல்லி,
பெங்களூர்

தங்கள் பெண்ணுக்கு 32 வயது 4 மாதம் 16நாள் வரை ராகுதசை நடைபெற்றதால் கர்ப்பம் தரிக்க வாய்ப்பு இல்லை. தற்போது குரு தசை நடைபெற்று வருகிறது. 2007-ல் குழந்தைப் பேறு கிட்டும். சதயம், சுவாதி, திருவாதிரை நட்சத்திரத்தில் மகப்பேறு கிடைக்கும் (ஆண் மகவு) உடல் ஆரோக்கியம் சீராகும். ●

என் மகனுக்கு வரன் பார்க்கின்றோம். பொருத்தமாக அமையவில்லை. ஏதாவது, பரிகாரம்



தனுசு: மகிழ்ச்சியான வாரம். சுப நிகழ்ச்சி கைகூடும். குடும்ப உறவு நன்றாக இருக்கும். நண்பர், உறவினர்களால் ஆதாயம் கிட்டும். வழக்கு வியாபாரம் வெற்றி அளிக்கும். கல்வி வளம் மேலோங்கும். உத்தியோகத்தில் இடமாற்றம் கிட்டும். வாக்குவன்மை மேலோங்கும். சனி/குரு வழிபாடு நற்பயன் கொடுக்கும்.

மகரம்: வீடு/மனை வாங்க நல்ல காலம். தொழில் துறையில் நல்ல அபிவிருத்தி ஏற்படும். வழக்கு வியாபாரம் வெற்றி அளிக்கும். வாகனத்தில் செல்லும்போது கவனம் தேவை. ராகுகேது/சனி வழிபாடு செய்து வர, நற்பயன் உண்டாகும்.

கும்பம்: மனக் குழப்பம் தீரும் வாரம். எண்ணங்கள் யாவும், ஈடேறும். வேலையில் இடமாற்றம் ஏற்படும். கொடுக்கல், வாங்கலில் சிக்கல் தீரும். தடை விலகித் திருமணம் கைகூடும். கல்வி வளம் மேலோங்கும். ராகு/கேது/குரு வழிபாடு செய்து வர, நற்பலன் உண்டாகும்.

மீனம்: ரொம்ப ரொம்ப யோகமான வாரம். பணவரவு உண்டு. தடைபட்டு வந்த அனைத்துக் காரியங்களும் தடை நீங்கி வெற்றி பெறும். செலவுகள் சுபமானவையாக இருக்கும். உடல் ஆரோக்கியம் நன்றாக இருக்கும். உத்தியோகத்தில் நற்பெயர் கிட்டும். ஆஞ்சநேயர் வழிபாடு செய்துவர, நற்பலன் கிட்டும். ○



என் ராசிக்கு அடுத்த படம் ஓடுமா சார்!

10.12.2006 முதல் 16.12.2006 வரை

செய்ய வேண்டுமா?

- சீனிவாசன், சென்னை -4

தங்களின் பையனுக்கு உறவில் திருமணம் நடக்கும். பிறந்த ஊருக்குத் தெற்கு (அ) மேற்கு திசையில் படித்த, நல்ல வேலையில் உள்ள பெண் அமைவார். உடன்பிறப்பு இருவர் இருப்பார்கள்.

துள்ளித் திரிந்த காலம்

என்னுடைய பெற்றோர்கள் ஆசிரியர்கள். எனக்கு ஐந்து வயதாக இருக்கும் போது, இருவரும் கொடைக்கானல் மலையடிவாரத்தில் உள்ள காமக்காபட்டி என்ற கிராமத்துக்கு மாற்றப்பட்டனர். ஐந்தாம் வகுப்பு வரை அங்குதான் படித்தேன். எங்கள் வீட்டிலிருந்து பார்த்தால் மலையிலிருந்து விழும் தலையாறு அருவி வெள்ளிக்கோடுகளாகத் தெரியும். கிராமத்தைச் சுற்றிக் காடுகள்; மரங்கள்தான். என் வயது பையன்களுக்கு ரப்பர் வில்லை வைத்து வேட்டையாடுவதுதான் பொழுது போக்கு!

அப்படித்தான் ஒருமுறை நாங்கள் பத்துப் பையன்கள் மலையடி காட்டுக்குள் வெகுதூரம் போய்விட்டோம். அங்கே ஒரு மலைப்பாம்பு வட்டமாகப் படுத்துக் கொண்டிருந்தது. அதைக் கல்லால் அடித்தும் குச்சியால் குத்தியும் அசைவில்லாமல் இருந்தது. அந்தப் பாம்பு ஓர் ஆட்டுக்குட்டியை விழுங்கியிருக்கிறது. அந்த மயக்கத்தில் சுருண்டு படுத்திருக்கிறது!

பெரிய பையன்கள் கொடிகளால் பாம்பைச் சுற்றிக் கட்டினார்கள். சிறுவர்கள் நாங்கள் தூரத்தில் நின்று நடுநடுங்க பார்த்துக் கொண்டிருந்தோம். பிறகு அந்தப் பாம்பை இழுத்துக் கொண்டு வந்தார்கள். நாங்கள் 'ஓ' என்று கோஷம் போட்டுக் கொண்டே பின்னால் சென்றோம்.

ஊருக்குள் வந்தவுடன் பெரிசுகளுக்கு வந்ததே ஆத்திரம்! "அதை ஏன் இழுத்துக் கிட்டு வந்தீங்க? மயக்கம் தெளிந்து வாலைச் சுருட்டி அடித்தால் செத்துப் போவீர்கள்; மாட்டிக் கொண்டால் அப்படியே முழுங்கிவிடும்" என்றெல்லாம் கூச்சல் போட்டார்கள். பாம்பை அப்படியே சாலையில் விட்டுவிட்டு எல்லோரும் ஓடி விட்டோம்.

இந்தச் செய்தியை அறிந்த என் அப்பா புளியங் குச்சியால் என்னையும் என் சகோதரர் விக்டர் சீனியையும் அடித்தார். அம்மா குறுக்கிட்ட பிறகுதான் அப்பா அடியை நிறுத்தினார். ஊரே திரண்டு போய் மலைப்பாம்பை வேடிக்கைப் பார்த்துவிட்டு, எங்கள் 'வீர தீர'ச் செயல்களைப் பாராட்டியது.

ஒரு கோடை காலத்தில் காட்டுக்குள் மேயப் போயிருந்த ஊர் மாடுகளுடன், ஒரு மானும் வந்து விட்டது. ஊர் மக்கள் விரட்டிச்சென்று அந்த மானைப் பிடித்தனர். அன்றைக்கு எல்லோர் வீட்டிலும் மான்கறிதான். கறியைச் சாப்பிட்டுச் செரிப்பதற்குள் விஷயத்தைக் கேள்விப் பட்டு வனத்துறை அதிகாரி வந்து விட்டார். எங்கள் அப்பா அவரிடம் நடந்ததைத் விளக்கி, அந்த மானின் கொம்புகளையும், சுமக்க முடியாத அளவு கறியையும் அந்த அதிகாரியிடம் கொடுத்தனுப்பினார்.

தண்ணீரைத் தேடிக் கொண்டு வரும் யானைக் கூட்டம், கரும்பு வயல்களைச் சின்னாபின்னமாக்கும். அவற்றின் பிளிறல் இரவின் அமைதியைக் கிழித்துக் கொண்டு கிராமத்தை வட்டமடிக்கும்.

அதைப் போன்ற நேரங்களில் ஊரே பயந்து போய் இருக்கும். ஆனால், நானும் என் சகோதரர்களும் யார் யார் என்னென்ன பேசிக் கொண்டிருக்கிறார்கள் என்று ஒட்டு கேட்டு வந்து, பிறகு எங்களுக்குள் சொல்லிச் சிரிப்போம்.

உசிலம்பட்டியில் உயர்நிலைப் பள்ளியில் சேர்ந்தேன். சுதந்திரப் போராட்டம் உச்சத்தில் இருந்த காலகட்டம் அது. தனிநபர் சத்தியாக்கிரகம் நடந்த போது, காங்கிரஸ் தியாகியொருவரை எங்கள் பள்ளியின் முன்னால் வைத்து போலீஸார் சட்டை, வேட்டியைக் கிழித்துவிட்டு அடித்தார்கள். மாணவர்களாகிய நாங்கள் போலீசாரையே கல்லால் அடித்துத் துரத்தினோம்.

நான் பள்ளியிறுதி வகுப்பு படிக்கும் போது இந்திய கம்யூனிஸ்ட் கட்சி தடை செய்யப்பட்டது. அரசு இயந்திரத்தின் மீது கோபம் கொண்டுதான் நான் பொதுவுடைமை இயக்கத்துக்குள் நுழைந்தேன். அது இன்று வரை தொடர்கிறது.

சந்திப்பு : **ப்ரியன்**

தா. பாண்டியன்

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழகச் செயலாளர்



"போலீஸைத் துரத்தினோம்!"

வாழ்வின் மறக்க முடியாத நாட்களைப் பற்றிப் பிரபலங்கள் பேசும் பகுதி

நூல் மதிப்புரை





மகுட வைரம் - விஷ்வக்ஸேனன், வானதி பதிப்பகம், சென்னை - 17, பக்கங்கள் - 336, விலை ரூ.100/-

சோழ தேசத்தின், வண்டாழன்சேரி கிராமத்தில் பிறந்து, மூன்று தலைமுறையாய் மன்னர்களிடத்து சேவை செய்து, கலிங்கத்துப்பரணி கொண்ட கருணாகரப் பல்லவனின் வாழ்க்கையை மையமாக வைத்துப் பின்னப்பட்ட சரித்திர நாவல். இயற்கை வர்ணனைகள், அரண்மனை ரகசியங்கள், சோழர் காலத்து வாழ்வியல் முறைகளை சுவையும் அழகும் சொட்டச் சொட்ட வடித்திருக்கிறார் விஷ்வக்ஸேனன். சரித்திர ஆர்வலர்களை நிச்சயம் பரவசப்படுத்தும் நாவல். கல்கியில் தொடர்கதையாக வெளியானது.





வாலிபருக்குப் பரிசு!

வானவில் வயசு மரபின்மைந்தன் முத்தையா, விஜயா பதிப்பகம், கோவை -1. பக்கங்கள் - 112, விலை ரூ.32/-

'சுயமுன்னேற்ற நூல்கள் என்ற பிரிவில் ஏராள எழுத்துக்கள் குவிந்து வரும் இக்காலகட்டத்தில், இதோ இன்னொரு சுயமுன்னேற்ற நூல்' என்று இதனை அறிமுகப்படுத்துவது சரியல்ல' என்று கல்கி ஆசிரியராலும், 'வானவில் வயசு... வாலிபருக்குப் பரிசு' என சுகி.சிவம் அவர்களாலும் பாராட்டப்பட்டிருக்கும் நூல்.


சிவசாமியின் சபதம் - ஜே.எஸ்.ராகவன், கிழக்கு வெளியீடு, பக்கங்கள் - 184, விலை ரூ.70/-

'வரிக்கு வரி குலுங்க வைக்கும் வெடிச் சிரிப்பு நாவல்' என்று முழங்கு சொற்களோடு வெளி வந்துள்ள புத்தகம். நம் விலா எலும்புகளைப் பதம் பார்க்க வைக்கும் நகைச்சுவை அம்சங்களைக் கொண்டுள்ளது.

\- அத்தியாயன்

The Dance of the Divine
BHARATANATYAM

PERFORMED UNDER THE DIRECTION OF PROF. SUDHARANI RAGHUPATHY



MADURA THILLANAS IN BHARATANATYAM VOL.1

Composed by
Vidwan Madurai.N.Krishnan
Rendered by
Smt.Sudha Ragunathan
Dance Choreographed by
Smt.Sudharani Raghupathy




MADURA THILLANAS IN BHARATANATYAM VOL.2

Composed by
Vidwan Madurai.N.Krishnan
Dance Choreographed by
Smt.Sudharani Raghupathy



MADURA THILLANAS IN BHARATANATYAM VOL.3

Composed by
Vidwan Madurai.N.Krishnan
Dance Choreographed by
Smt.Sudharani Raghupathy



MADURA MARGAM IN BHARATANATYAM

Composed by
Vidwan Madurai.N.Krishnan
Dance Choreographed by
Smt.Sudharani Raghupathy



NAVASANDHI KAUTHUVAM IN BHARATANATYAM

Composed by
Vidwan Madurai.N.Krishnan
Dance Choreographed by
Smt.Sudharani Raghupathy
Bonus Material Archive Video:
Interview with Guru K.P.Kittappa



Prof. Sudharani Raghupathy

Available on Audio CD/VCD/DVD

Geethanjali

SUPER AUDIO (MADRAS) PVT LTD
Carex Centre, II Floor, 713, Anna Salai, Chennai - 600 006. India
website:www.musicandchants.com email: supertape@yahoo.com



Vidwan Madurai Shri N.Krishnan

தேவமருந்து

கார்ச்யம் – கவிதா

கவிதா என்ற பெண் எங்கள் மருத்துவமனைக்கு வந்தார். வற்றல் குச்சியைப் போன்ற தேகம் அவருக்கு. திருமணம் ஆவதற்குள் எப்படியேனும் உடல் பருக்க வேண்டும் என்று ஆசைப்பட்டார். நாங்கள் கொடுத்த சிகிச்சையில் அவருக்கு உடம்பும் பருத்தது; அதைத் தொடர்ந்து கல்யாணமும் ஆயிற்று. இப்பொழுது மீண்டும் எங்கள் மருத்துவமனைக்கு வந்து சிகிச்சை எடுத்துக்கொண்டு வருகிறார் - உடல் இளைப்பதற்காக!



கவிதா எடை கூடுவதற்கு என்ன சிகிச்சை அளித்தோம் என்கிறீர்களா...? அதைச் சொல்வதற்கு முன் ஆயுர்வேதம் இந்த உடல் இளைப்பை எவ்வாறு அணுகுகிறது என்று சொல்கிறேன்.

உடல் மெலிதலுக்கு ஆயுர்வேதத்தில் கார்ச்யம் என்று பெயர். (மிகப் பருமனாக இருப்பது ஸ்தௌல்யம் என்று பார்த்தோம் - போன வாரம்)

ஒருவர் மெலிந்து போனால், அவருக்கு உடலில் அக்னி, ஆகாசம், வாயு போன்றவை அதிகமாக இருக்கின்றன என்பது ஆயுர்வேதக் கோட்பாடு. உடலில் வாதம் அதிகரித்துக் கபம் குறையும்போது உடல் மெலிகிறது. இதனைச் சமச்சீர் தன்மையின் மாற்றம் எனலாம்.

உடல் மெலிவதற்குச் சில நோய்களும் காரணமாக இருக்கலாம் - ஹைப்பர் தைராயிடிஸம் என்ற தைராய்ட் சுரப்பிக் கோளாறு, கேன்சர், எய்ட்ஸ், க்ஷயரோகம் போன்றவற்றால் உடல் எடை மளமளவென்று குறையும். தீவிரமான தொடர் வயிற்றுப்போக்கு, குடலில் கிருமித் தொற்று, சர்க்கரை நோய் ஆகியவற்றாலும் உடல் மெலிந்து வாட்டமுறும்.

இயல்பாகவே சிலர் உடல் மெலிந்து காணப்படுவார்கள். என்ன சாப்பிட்டாலும் அவர்களுக்கு உடல் பருக்காது. இது மரபுக்கூறு ரீதியான நிலைமை.

வேறு சிலருக்குப் போதுமான அளவு ஊட்டச்சத்து - குறிப்பாக, புரதம் கிட்டாததால் உடல் இளைத்துக் காணப்படும்.

ஆயுர்வேத சிகிச்சையை ஆரம்பிக்கும் முன் இவற்றுள் எந்தக் காரணத்தினால் உடல் இளைத்திருக்கிறது என்பதை முதலில் அறிய வேண்டும். நோய்கள்



கல்யாணம்! ...இப்படி ஆயிட்டேன்! 8

டாக்டர் எல்.மஹாதேவன்

காரணமெனில் அந் நோய்களுக்கான சிகிச்சையை அளித்தால்தான் உடல் தேறும். அப்படி இன்றி உடல்வாகி னாலோ சற்றே உடல் தோஷங்களின் சமச்சீர்நிலை தடுமாறுவதாலோ உடல் இளைத்துக் காணப்பட்டால், அவரவர் நிலைக்கேற்ப, தீர விசாரித்துச் சிகிச்சை அளிப்போம் - அதுவும் நிலைமை மிகவும் தீவிரமாக இருந்தால்!

ஏனெனில், உடல் பருத்திருப்பதைக் காட்டிலும் மெலிந்திருப்பதையே ஆயுர்வேதம் வலியுறுத்துகிறது.

உடல பருப்பதற்கு வாழ்க்கை முறையில் சில மாற்றங்கள் உதவும். நாங்கள் கவிதாவுக்கு முதல் 'சிகிச்சை'யாக கவலையைக் கைவிட பயிற்சி அளித்தோம். 'ஐயோ இப்படி இளைத்திருக்கிறோமே' என்ற கவலையே உடலை மேலும் இளைக்கச் செய்யும்!

அதற்காக 'ஐயோ இப்படிப் பருத்து விட்டோமே!' என்று கவலைப் பட்டால், உடல் இளைக்காது. இது மட்டும் நடக்காது! இது ஒருவித உடல்-மனத் தொடர்பு விசை. ஒரு திசையில்தான் இது வேலை செய்யும்!

சரி, மருந்துக்கு வருவோம். கவிதாவுக்குக் கொடுக்கப்பட்ட சிகிச்சை இதுதான்: உடலின் அக்னியைப் பலப்படுத்த, முதலில் ஆமணக்கு வேர் சேர்ந்த கந்தர்வஹஸ்தாதி கஷாயத்தில் வைச்வானர சூரணம் சேர்த்து ஐந்து நாட்களுக்குக் கொடுத்தோம். அதன் பிறகு கல்யாணக க்ருதம் 25 மில்லி இரண்டு வேளையும் சாப்பிடக் கொடுத்தோம். இதற்கு அனுபானமாக (கூடவே தரப்படும் திரவமாக) மாம்ஸ ரஸம் கொடுத்தோம். (அசைவத்தை மருந்தாக ஆயுர்வேதம் ஏற்கிறது). இதன் பிறகு அஸ்வகந்தா, சதாவரி போன்றவை சேர்ந்த பால் கஞ்சியைக் கொடுத்தோம்.

இவையெல்லாம் உள்ளுக்கு. உடலுக்கு லாகூஷாதி



தைலத்தில் அப்யங்கம் (எண்ணெய் முழுக்காட்டல்) செய்வித்தோம், தான்வந்த்ர தைலத்தைக் கொண்டு மாத்ர வஸ்தி (ஒரு வகை எனிமா) அளித்தோம்.

அடுத்து, மூன்று மாதங்களுக்கு அமிர்தப்ராஷம் என்ற லேகியத்தை தினமும் 20 கிராம் சாப்பிடச் சொன்னோம். அதோடு திப்பிலி சேர்ந்த கஞ்சியை அனுபானமாக அருந்தச் சொன்னோம். உடல் எடை ஆறு ஏழு கிலோ கூடிற்று. மூன்று-நான்கு மாதங்களில் உடல் நன்கு புஷ்டியாயிற்று, கவிதாவுக்கு.

ஆயுர்வேதம் இவ்வாறு உடல் பருக்கச் சிகிச்சை அளிப்பதை 'ப்ரம்ஹணம்' என்று



அழைக்கிறது. இளைப்பதற்கான சிகிச்சை 'லங்கனம்' எனப்படும்.

நோயினால் வருந்துதல், அதிக மருந்துகளைச் சாப்பிடுதல், மதுபானம், பெண் சேர்க்கை, துயரம் ஆகியன உடலை இளைக்கச் செய்யும் என்கிறது ஆயுர்வேதம். சிலர் உணவில் நாட்டமின்றி ரொம்ப கொஞ்சமாகச் சாப்பிடுவார்கள்; காய்கறிகள் அதிகமாகச் சாப்பிடுவார்கள் - இவையெல்லாமும் உடல் இளைக்கச் செய்யும். புஷ்டியாக உடலை வளர்க்க மாம்ஸ ரஸம் ஏற்றது.

ஆட்டு மாமிஸத்தால் ஆன அஜ மாம்ஸ க்ருதம், கூஷ்மாண்ட கிருதம், இந்துகாந்த கிருதம் போன்றவற்றையும் அஸ்வகந்தாதி லேகியம், பால், நெய் ஆகியவற்றையும் ஆயுர்வேதம் சிபாரிசு செய்கிறது. இதைத் தவிர, கவிதாவுக்கு எண்ணெய் சிகிச்சை, நவரக்கிழி போன்றவற்றையும் அளித்துப் பார்த்தோம்.

பின்பனிக் காலத்தில் எல்லோருமே உடல் இளைப்பதற்கான சிகிச்சையை எடுத்துக் கொள்ள வேண்டும். உடலில் வாதம் அதிகரித்துக் கபம் குறையும்போது உடல் மெலிகிறது.

பொதுவாக உடல் பருக்க, இளைத்துக் காணப்படுவோர் காலை ஏழு மணிக்குள்ளாகவே சிற்றுண்டியை முடித்துவிட வேண்டும். பிறகு பிற்பகல், இரவு சாப்பிட வேண்டும். இவர்கள் பகலில் தூங்குவது நிறைய உதவும். (கவிதாவை அவ்வாறு தூங்கச் சொன்னோம்)

பாதாம் அரைத்த விழுதைப் பாலில் சேர்த்துச் சாப்பிடுவது, பாலுடன் நெய், பாலுடன் பேரீச்சம்பழம் ஆகியன வீட்டிலேயே அச்சமின்றி உடல் பருக்கக் கையாள வேண்டிய ஐட்டங்கள். பயத்தங் கஞ்சி, நேந்திரம் பழத்தை வேக வைத்து உண்ணுதல் ஆகியனவும் உடல் எடை கூடுவதற்கு உதவும்.

பின்பனிக் காலத்தில் உடல் இளைப்பதற்கான சிகிச்சையை எடுத்துக் கொள்ள வேண்டும்.

(தொடரும்)

தன்வந்தரி டாலர் பரிசுப் போட்டி - 7

உடல் இளைப்பதற்கு நீங்கள் பயன்படுத்திய எளிய உணவுமுறையை அஞ்சல் அட்டையில் மட்டுமே எழுதியனுப்புங்கள். தலைசிறந்த குறிப்புக்கு டாக்டர் மஹாதேவன் தன்வந்தரி டாலர் பரிசளிப்பார். இரண்டாவது பரிசாக தேவமருந்து முதல் பாகம் புத்தகம்.

கடைசி தேதி: 18.12.2006

ஆசிரியர் தீர்ப்பே இறுதி

சிறுகதை

சீதா ரவி

"வாய்க்கு ஒரு இட்லியை முழுங்காதே; ஒழுங்கா விண்டு தின்னு இன்னும் கொஞ்சம் சட்னி வைச்சுக்கோ..."

அம்மா சொன்னதெதுவும் அருணாசலத்தின் காதில் விழவில்லை. வாய்க்கு இரண்டு இட்லிகளைத் திணித்துத் தின்ன முடியவில்லையே என்று இருந்தது அவனுக்கு. 'அஞ்சரை மணிக்கெல்லாம் கோயிலாண்ட வந்துடணும்' என்று அப்பா காலையிலேயே சொல்லியனுப்பியிருந்தார். பள்ளிக்கூடம் விட்டதும் ராம பாணம் மாதிரி விர்ரென்று வீட்டுக்கு வந்து விட்டான். கொதிக்கிற இட்லியை இலையில் வைத்து, 'தின்னு விட்டுத்தான் போகணும்' என்று அம்மா வற்புறுத்தி ஒரு லோட்டா காப்பித் தண்ணியையும் வைத்து விட்டாள்.

"காப்பி வேணாம்! தண்ணி குடு" இட்லி நிரம்பிய வாய்க்குள்ளிருந்து அருணாசலத்தின் குரல் வெளிப்பட்டது.

"காப்பியைக் குடிச்சுட்டுத் தெம்பா ஓடு ராஜா..." அம்மா மறுத்தாள்.

காமாக்ஷி கோயிலில் கச்சேரி. கார்த்திகை பௌர்ணமி தங்கத் தேருக்கு அப்பா வாசிக்கப் போகிறார். அருணாசலம்தான் தாளம் தட்ட வேண்டும். அஞ்சரை மணிக்கு அம்பாளைக் கொலு மண்டபத்தில் இருத்தி விடுவார்கள். அவன் பார்த்திருக்கிறான். இரண்டு பக்கமும் இரு தோழிப் பெண்கள் நிற்க, நடுவிலே காமாக்ஷி சிரிப்பாள். அலங்காரம் ரொம்ப விசேஷமாய் இருக்கும் - தலையோடு கால் தங்க நகைகளும் கனம் கனமான பூமாலைகளும். இவ்வளவு சுமையிலும் அவள் சிரிக்கிறாளே என்றிருக்கும் அவனுக்கு. எங்கு நின்று பார்த்தாலும் அவள் தன்னையே பார்த்துச் சிரிக்கிற மாதிரி இருக்கும்.

அவனுக்கான கச்சேரியில் அவன் தாளம் போட வேண்டும் என்று அப்பா சொன்ன போது அருணாசலம் ரொம்பக் குஷியாகி விட்டான்.

இதுவரையில் கல்யாணக் கச்சேரிகளில் மட்டும்தான் அவனுக்கு வாய்ப்பு கொடுத்திருக்கிறார் அப்பா - அதுவும் மூன்று வருடங்கள் வீட்டில் அவர்



வாசிக்கையில் தட்டித் தட்டிப் பழகிய பிறகு.

ஆரம்பத்தில் தாளத்தின் கனம் கையை அழுத்தியது. ஆனால் "அருணாசலம் லயத்துல கெட்டி!" என்று அப்பாவே பாராட்டினார். 'டங்!' என்று ஒரு தட்டு. அந்த ரீங்காரம் காதைத் துளைக்கும் போதே மூன்று விரல் எண்ண வேண்டும். திரும்பவும் தட்டு, வீச்சு, தட்டு, வீச்சு... கந்தப்ப அண்ணன் தவிலில் முன்னுக்கும் பின்னுக்குமாக சொல் வாசிப்பார். ஆனாலும் அருணாசலம் இடறாமல் தட்டுவான்–ணங்! ஒன்று, இரண்டு, மூணு, ணங், ணிங், ணங், ணிங்...

அருணாசலத்துக்குப் பள்ளிக்கூடம் போவதை விட இது ரொம்பப் பிடித்



நிலா ரகசியம்

திருந்தது. 'டண கண டண கண... என்ற தவில் நாதமும்' கன்னம் உப்ப அப்பா வாசித்த வாசிப்பும், வாத்தியத்தின் துவாரங்களில் அவர் விரல்கள் காட்டிய வித்தையும் - எல்லாமாகச் சேர்ந்து எப்படி கல்யாணி ராகமாக மாறுகின்றன என்று அவனுக்கு ஆச்சர்யம்தான்! மோகனம், சங்கராபரணம், காம்போஜி ஷண்முகப்ரியா என்று விதவிதமாக எப்படி ஒலிக்கின்றன? அதுவும் -சாருகேசியை அப்பா வாசித்தாரானால் அருணாசலத்துக்குக் காரணம் புரியாமல் தொண்டை அடைக்கும் - தம்பி பிறப்பதற்காக அம்மா அவனை விட்டு விட்டு குலமங்கலத்தில் பாட்டி வீட்டுக்குப் போகிறபோது உச்சிமுகர்ந்தாளே, அந்த மாதிரி துக்கம்.


அப்பாவுக்கும் சாருகேசி வாசிக்கிற போது அப்படி இருக்குமோ என்று யோசிப்பானேயொழிய அவரிடம் கேட்டதில்லை. கேட்டு அறிய முடியாத இன்னும் நிறைய விஷயங்கள், ரகசியங்கள் சங்கீதத்தில் இருப்பதாக அவனுக்குத் தோன்றியது. அதனால்தான் பள்ளிச் சினேகிதர்கள் அவனைக் கிண்டல்

செய்தாலும் கவலைப்படாமல் இருந்தான். அவர்களுக்கு இந்த ரகசியங்கள் பற்றி எதுவும் தெரியாது. தெரியவே தெரியாது.

இன்றைக்குக் கூட கபடி விளையாட அவனைக் கூப்பிட்டார்கள். மறுத்துவிட்டு வீட்டுக்கு ஓடிய போது "ஜால்ரா தட்டப் போறான்டா!" என்று கூவினார்கள்.

ஐயப்பன்தான் முதலில் ஒரு கல்யாணத்தில் இவன் தாளம் போடுவதைப் பார்த்துவிட்டுப் பள்ளிக்கூடத்தில் வந்து சொன்னவன். அது ஆகிவிட்டது இரண்டு வருஷம். அப்போதெல்லாம் அப்பா இவனுக்காக வேண்டியே ஆதி, ரூபக தாள கீர்த்தனைகளை மட்டும் தேர்ந்தெடுத்து வாசிப்பார் - தாளம் போட சுலபமாயிருக்கும் என்று.

அதையே விழி பிதுங்க, பார்த்துக் கொண்டு நின்றான் ஐயப்பன். கையில் சோப்புக் கட்டி சைஸுக்கு மைசூர்பாகை வைத்துக் கொண்டு, அதைத் தின்னவும் மறந்து, பிளந்த வாயுடன் அவன் பார்த்த காட்சி அருணாசலத்துக்கு இன்னமும் ஞாபகமிருக்கிறது.



இன்றைக்கு அப்பா நிச்சயமாக மல்லாரி வாசிப்பார்; மிச்ர சாபு - கண்ட சாபுவில் கீர்த்தனைகள் வாசிப்பார். கண்ட சாபு காமாக்ஷி வலம் வருவதற்கு - மிடுக்காக. மிச்ர சாபு அவள் கொலு மண்டபத்துக்குத் திரும்பி வந்து நின்று கொண்டு, வந்திருக்கும் எல்லாரையும் ஆசுவாசமாக விசாரித்துப் பேசுவதற்கு. போன வருஷம் வரை கோயிலில் தாளம் தட்ட அவனைக் கூப்பிடவில்லை. இந்த வருஷம் கூப்பிட்டிருக்கிறார் என்றால் என்ன அர்த்தம்? சாமி காரியத்துக்கு வாசிக்கும் அளவுக்கு அவன் தேறிவிட்டான் என்றுதானே அர்த்தம்!

முகம் கழுவி திருநீறு பூசுவதற்குள் நிலைகொள்ளவில்லை அருணாசலத்துக்கு.

"இரு தம்பி!" என்று அம்மா அவன் இடுப்பில் வேட்டியை இறுக்கி, எதற்கும் இருக்கட்டும் என்று நாடாவால் கட்டி விட்டாள். அவன் கன்னங்களை அழுத்திப் பிடித்துத் தலையைச் சீவி நெற்றி மத்தியில் ஒரு குங்குமத் திட்டையும் இட்டு விட்டாள். கண்ணாடியைக் கூடப் பார்க்காமல் கோயிலுக்கு ஓடினான் அருணாசலம்.

அவன் வருவதற்காகவே காத்திருந்தது போல் எல்லாமும் கணத்தில் ஆரம்பித்தன. ஐயர் மந்திரம் சொன்னார். அப்பா கம்பீரமாக ஷண்முகப்ரியா ஆலாபனையை ஆரம்பித்தார். அவன் எதிர்பார்த்த மாதிரியே 'சித்தி விநாயகம்' - முதலில் விநாயகர்தானே வருவார் எப்போதும். விநாயகர் பூஜை முடிந்து சலசலப்பு சூழ, அம்பாள் கொலு மண்டபத்துக்கு வந்து விட்டாள். இதோ உபயதாரருக்கு குருக்கள் முண்டாசு கட்டுகிறார். எட்டு பேராகச் சேர்ந்து அவளைத் தூ...க்கித் தங்கத் தேரில்

தோழியருடன் இருந்துகிறார்கள். கண்ணும் மனசும் காட்சிகளில் லயித்தாலும் அருணாசலத்தின் கை தாளத்தை விடாமல் தட்டுகிறது; அடுத்தடுத்து அப்பா வாசிக்கும் ஆலாபனைகளிலும் கீர்த்தனைகளிலும் இதயம் சில்லென்று நனைகிறது. பசுபதி அண்ணனும் அவரும் மாற்றி மாற்றி ஸ்வரம் வாசிக்கும்போது தலை ஆடுகிறது; கந்தப்ப அண்ணன் தவிலில் தனியே பிளந்து கட்டுகையில் அருணாசலத்துக்குக் குபீர் குபீரென்று சந்தோஷம் பீறிடுகிறது.

குதிரைகள் தாவிப் பாயும் கோலத்தில் வெறுமே நிற்க, மனிதர்கள் இழுக்கத்தான், தங்கத் தேர் பிராகாரத்தை வலம் வருகிறது!



முழு நிலா உச்சிக்கு வந்து கொண்டிருப்பதையும் அருணாசலம் பார்த்து விட்டான். தேருக்குப் பின்னால் உருண்டு வரும் ஜெனரேட்டர் திடீரென்று கோளாறாகிறது. தேரில் தொங்கிய குண்டான மஞ்சள் மின் விளக்குகளும் சீரியல் லைட்டுகளும் அணைந்து போக, பௌர்ணமி நிலா வெளிச்சத்தில் நிஜமான காமாக்ஷியைப் பார்க்கிறான். கைபாட்டுக்குக் கந்தப்ப அண்ணனின் கோர்வைக்குத் தாளம் போட்டுக் கொண்டிருந்தாலும் பார்த்து அறிய முடியாத ரகசியத்தைப் பார்த்து விட்டது போல் அம்பாளைப் பார்க்கிறான் அருணாசலம். சூழலின் விசேஷத்தை யுணர்ந்து கந்தப்ப அண்ணன் கோர்வையைச் சுருக்கி முடிக்கிறார். 'அச்சோ! அப்பா சாருகேசி அல்லவா வாசிக்க ஆரம்பிக்கிறார்!' அருணாசலத்துக்கு முழு நிலா கீழே இறங்கி வந்து விட்டது போலிருக்கிறது. தாளக் கயிற்றில் இறுகிய பிடி தளராமல் மூச்சை நிறுத்திக் கொண்டு நிலாவையும் காமாக்ஷியையும் மாறி மாறிப் பார்க்கிறான். அப்பா அர்த்தமுள்ள இடைவெளி கொடுத்து சில வினாடி வாசிப்பை நிறுத்துகிறார்.

சட்டென்று பக்கத்தில் ஒரு குரல் எழுகிறது. "ஆஹா!" திரும்பிப் பார்க்கிறான் அருணாசலம். கருநீலச் சேலையில் ஓர் அக்காள் கண்கலங்க ரசிக்கிறாள். பக்கத்திலிருக்கும் பாட்டியிடம் அவள் மூச்சடக்கிச் சொல்வது அருணாசலத்தின் காதில் விழுகிறது. "சந்திரனே இங்க இறங்கி வந்துட்டாப்போல இல்ல..."

கண்களில் நீர் பளபளக்க அவளைப் பார்த்துக் கொண்டேயிருக்கையில் ஜெனரேட்டர் மீண்டும் உயிர்பெற்று விடுகிறது. அப்பா சாருகேசியைத் தொடர்கிறார்; பிராகார வலம் விரைந்து தொடர்கிறது. அருணாசலம் பெருமிதமும் சந்தோஷமுமாகி தன் பணியைத் தொடர்கிறான். தன்னுடைய நிலா ரகசியத்தை இன்னொரு அக்காள் அறிந்தது அவனுக்கு வியப்பாக இருக்கிறது. 'எப்படி அதே மாதிரி...?' காமாக்ஷியைப் பார்க்கிறான். மீண்டும் அந்த அக்காளைப் பார்க்கிறான். இருவருடைய புன்னகைகளும் ஒன்றுபோலவே தோன்றுகின்றன அருணாசலத்துக்கு. ●

வாரம் ஒரு பாசுரம்

வைணவர்களுக்கு மிக முக்கியமான பாசுரம் எது? அதை மட்டும் தெரிந்துகொண்டால் திவ்யப் பிரபந்தத்தையே தெரிந்துகொண்ட மாதிரி. அப்படி ஒரு பாசுரம் இருக்கிறதா என்று இந்த அவசர உலகத்தில் என்னிடம் கேள்விகள் கேட்கிறார்கள். அவர்களுக்கெல்லாம் திருமங்கையாழ்வாரின் இந்தப் பாசுரத்தைத்தான் பரிந்துரைப்பேன்

என் தந்தை, 'இந்தப் பாசுரம் ஒன்றே போதும். திவ்யப் பிரபந்தத்தின் சாரம், திருமந்த்ரார்த்தம் இதுதான்!' என்பார். இறக்கும் தருவாயில் இந்த ஒரு பாசுரத்தைக் காதில் சொன்னால் போதும் என்று கூடச் சொல்வார்கள்.

திருமங்கையாழ்வார் திவ்யப் பிரபந்தத்தில் அதிக எண்ணிக்கையுள்ள பாடல்களைப் பாடியவர். அதிகம் வைணவத் தலங்களுக்குச் சென்று தரிசித்தவர். வடநாட்டில் தேவப் பிரயாகை, நைமிசாரண்யம் பத்ரிகாசிரமத்திலிருந்து துவங்கி தென்னாட்டில் அத்தனைக் கோயில்களையும் தரிசித்துப் பாடியுள்ளார். ஒருவேளை, அவர் பாடாத வைணவக் கோயில்கள் ஏதேனும் இருந்தால் அவை சமீபத்தில் தோன்றியனவாகத்தான் இருக்கும்.

'குலந்தரும் செல்வம் தந்திடும் அடியார்
படுதுயர் ஆயினவெல்லாம்
நிலந்தரம் செய்யும் நீள் விசும்பருளும்
அருளொடு பெருநிலமளிக்கும்
வலந்தரும் மற்றும் தந்திடும் பெற்ற
தாயினும் ஆயின செய்யும்
நலம் தரும் சொல்லை நான் கண்டுகொண்டேன்
நாராயணா என்னும் நாமமே'

நாராயணன் என்பதற்குப் பல அர்த்தங்கள் உண்டு. எளிமையானது - கடலில் சயனித்திருப்பவன்.

நாரா - உலகத்தின் அத்தனை சேதன, அசேதனப் பொருள்களையும் தன்னையும் சேர்த்து அயனன் இருப்பிடமானவன் திருமால் என்பதே இதன் ஆழமான பொருள்.

'அந்தச் சொல்லைக் கைகண்டு கொண்டுவிட்டால் போதும். நமக்கு, நல்ல குலம் அமையும்; செல்வம் பெருகும். அடியவர்களுக்கு ஏற்படும் துயரங்கள் எல்லாம் தரை மட்டமாகும் (நிலந்தரம்) பரமபதத்தைக் காட்டும். பெற்ற தாயை விட அதிகமாகச் செய்யும் நாராயணன் என்ற ஒரே ஒரு சொல்லை மட்டும் கண்டு கொண்டால் போதும்; இதெல்லாம் உத்தரவாதம்' என்கிறார் திருமங்கையாழ்வார்.


(படிக்கலாம்)

9

ஒரே ஒரு பாசுரம்!

சுஜாதா





''தண்ணியில வாழற உயிரினத்தை டிக் பண்ண ஏன் இவ்வளவு நேரமா யோசிக்கறே?''

''எங்கப்பா பேரு இல்லியே டீச்சர்...''


- எஸ்.ஜெ.கலைவாணி

''இந்த ஆபீஸ்ல நாற்பது வருஷம் வேலை செஞ்சு ரிடையர் ஆகப் போறீங்க... உங்க அனுபவத்தைக் கொஞ்சம் சொல்லுங்களேன்.''

''நடந்தது எல்லாம் ஒரு கனவு மாதிரி இருக்கு சார்.''

- ஜி.வி. சுபாஷ்





படம்: ஸ்ரீஹரி

"இன்று காக்கிச் சீருடையில் மிடுக்காக நான் மக்களுக்குச் சேவை செய்ய முடிகிறதென்றால், அதற்கு முதல் காரணம் என் மூத்த சகோதரர் டி.ஆர். ஜாங்கிட்தான். அவர்தான், இராஜஸ்தான் பல்கலைக்கழகத்தில் பொருளாதாரத் துறையில் உதவிப் பேராசிரியராக இருந்த என்னை, ஐ.பி.எஸ். பணிக்கான பரீட்சை எழுதும்படி ஊக்கப்படுத்தினார்" என்கிறார் சென்னை மாநகரக் காவல்துறையின் கூடுதல் ஆணையரான எஸ். ஆர். ஜாங்கிட் ஐ.பி.எஸ். இவர் இராஜஸ்தான் மாநிலம் பார்மெர் மாவட்டத்தைச் சேர்ந்தவர்.

"அன்று தம்பிக்கு வழி காட்டிய அந்த அண்ணன் இன்று உயிருடன் இல்லை. அண்மையில்

மீரட்டில்

இராஜஸ்தான் மாநிலத்தில் ஏற்பட்ட திடீர் வெள்ளத்தில் பாதிக்கப்பட்ட குடும்பங்களை அழைத்து வந்து, பாதுகாப்பான பகுதிக்கு அனுப்பி வைத்துவிட்டு, ஜீப்பில் வீடு திரும்பிக் கொண்டிருந்தார். வழியில் ஓர் ஆற்றினைக் கடக்கும்போது, அவர் வந்த ஜீப் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டு பலியாகிவிட்டார்" என்று கூறும்போது கூடுதல் ஆணையரின் முகத்தில் சோகம் அப்பிக் கொள்கிறது.


ஏராளமான காவல்துறை அனுபவமுள்ள ஜாங்கிட் அவற்றுள் சிலவற்றை நம்மிடம் பகிர்ந்து கொண்டார். "அம்பாசமுத்திரத்தில் நான் துணைக் காவல் கண்காணிப்பாளராகப் பணியாற்றியபோது,



ஒருவர் என்னைச் சந்தித்து, 'என்னுடைய தென்னந்தோப்பை ஒருவரிடம் அடமானம் வைத்து, தொண்ணூறாயிரம் ரூபாய் கடன் வாங்கினேன். அதன் பிறகு நாலு வருடங்களில் இதுவரை மூன்றரை லட்சம் வரை கொடுத்திருக்கிறேன். ஆனால் அவர் இன்னமும் இரண்டு லட்சம் பணம் கேட்டுத் தொல்லை கொடுக்கிறார்' என்று கண் கலங்கினார். கடன் கொடுத்த ஆசாமியை வரவழைத்தேன்.

நான்கு வருடங்களாக தோப்பு கடன் கொடுத்தவர் கையில்தான் இருக்கிறது; அதிலிருந்து கிடைத்த வருமானம் முழுவதையும் அவரேதான் எடுத்துக் கொண்டிருக்கிறார் என்பதை நான் அவரிடம் சுட்டிக் காட்டினேன். அவர் எதையும் ஏற்கவில்லை. பாதிக்கப்பட்டவரிடமிருந்து புகார் எழுதி வாங்கிக் கொண்டு நான் சட்டப்படி நடவடிக்கை எடுப்பேன் என்றதும், வழிக்கு வந்தார்.

ஓர் என்கவுண்ட்டர்!



திருநெல்வேலி மாவட்டம் சிவலார்க் குளம் என்ற ஊரில் வசித்த சுமார் நூறு குடும்பங்களுக்குக் கள்ளச் சாராயம் காய்ச்சுவதுதான் தொழில். பல முறை ரெய்டுகள் நடத்தியும், அந்தக் கிராம மக்கள் அத்தொழிலை விடுவதாக இல்லை. 'நாங்கள் படிக்காதவர்கள்; எங்களுக்கு வேறு எந்தத் தொழிலும் செய்யத் தெரியாது' என்றார்கள். வங்கிகள், மாவட்டத் தொழில் வளர்ச்சி மையம் ஆகியவற்றின் அதிகாரிகளுடன் பேசி, அத்தனைக் குடும்பங்களுக்கும் தொழிற் பயிற்சி அளித்து, வங்கிக் கடன் உதவிக்கும் ஏற்பாடுகள் செய்தேன். அந்த ஊரில் கள்ளச் சாராயம் முற்றிலுமாக ஒழிந்தது.

கடந்த ஆண்டு கொள்ளையர்கள் கும்மிடிப்பூண்டி சட்டமன்ற உறுப்பினராக இருந்த சுதர்சனத்தைச் சுட்டுக் கொன்று விட்டு, கொள்ளையடித்துச் சென்ற சம்பவம், காவல் துறைக்கே விடப்பட்ட பெரும் சவால்!

குற்றம் நடந்த இடங்களில் கிடைத்த விரல் ரேகைகள், போலீஸ் ரெகார்டுகளில் உள்ள கிரிமினல்களின் கைரேகைகளுடன் ஒத்துப் போகவில்லை. வெளி மாநிலங்களில் இயங்கி வரும் கொள்ளையர்களைப் பற்றி விசாரித்தேன்.

இராஜஸ்தானைச் சேர்ந்த லட்சுமண் என்கிற அஷோக் என்ற பவாரியா இனத்தைச் சேர்ந்த கொள்ளைக்காரனுக்கு இந்தக் கொள்ளை, கொலைகளில் சம்பந்தம் என்று தெரிய வந்தது. அவனைத் தேடிப் பிடித்தோம். அவன் மூலமாகப் பல புதிய துப்புகள் கிடைத்தன.

பிறகு, எல்லாவற்றுக்கும் மாஸ்டர் மைண்டான ஓமா என்கிறவனைக் கண்டுபிடிக்க போலீஸ் குழுவுடன் உத்திரப் பிரதேசத்துக்கு விரைந்தேன். உள்ளூர்க் காவல் நிலைய உதவியுடன், மீரட் நகரத்தில் நடந்த என்கவுண்ட்டரில், ஓமா சுட்டுக் கொல்லப்பட்டான். பத்தாண்டுகள் தொடர்ந்து நடந்த தமிழ்நாட்டின் நெடுஞ்சாலைக் கொள்ளைகள் முடிவுக்கு வந்தன" என்றார், எஸ்.ஆர். ஜாங்கிட்.

- கௌதம்ராம்

ஸ்ரீ ஸ்ரீ ரவிசங்கர்

குருஜி ஸ்ரீ ஸ்ரீ ரவிசங்கர் கல்கிக்கு அளித்த பிரத்யேகப் பேட்டி, இந்த இதழிலும் தொடர்கிறது...

உலகின் பல்வேறு நாடுகளிலும் அமைதிக்குப் பாடுபடும் நீங்கள், இந்தியாவில் பல ஆண்டுகளாகத் தீர்க்கப்படாமல் இருக்கிற அயோத்திப் பிரச்னைக்குத் தீர்வு காண ஏன் முயற்சி செய்யக்கூடாது?

"அயோத்திப் பிரச்னை குறித்து பல வருடங்களாக நான் கூறி வருவது இதுதான்... அயோத்திப் பிரச்னை, இந்துக்களின் உணர்வு சம்பந்தப்பட்ட ஒரு விஷயம். அதில் அரசியல் புகுந்து விட்டதால்தான், இதுவரை தீராமல் நீண்டு கொண்டே போகிறது. அந்த இடம் இயேசு கிறிஸ்து பிறந்த இடமாகவோ அல்லது நபிகள் நாயகம் பிறந்த இடமாகவோ இருந்தால், உலகின் மற்ற நாடுகள் எல்லாம் என்ன சொல்வார்கள்? அந்த மதத்தினரின் மன உணர்வுகளை மதித்து, அவர்களுக்கு அந்த இடத்தைக் கொடுக்க வேண்டும் என்று தானே சொல்வார்கள்? இராமரைத் தெய்வமாக வணங்கும் நம் தேசத்து மக்களின் உணர்வுக்கு மதிப்பு கொடுத்து, முஸ்லிம்கள் ஏன் அந்த இடத்தை நல்லெண்ணத்தின் அடையாளமாக இந்துக்களுக்கு அன்புப் பரிசாக அளிக்கக்கூடாது?

இப்போது அங்கே இருக்கும் இராமர் சிலையினை அகற்றிவிட்டு இனிமேல் அங்கே மசூதி கட்டும் வாய்ப்பு இல்லை. அப்படியே, கட்டினாலும், அந்த மசூதிக்குச் சென்று முஸ்லிம்கள் தொழுகை நடத்தப் போவது இல்லை. அப்படி இருக்கும் பட்சத்தில் சாதாரண முஸ்லிம் மக்கள் விட்டுக் கொடுக்கத் தயாராகவே இருக்கிறார்கள். ஆனால் சில தலைவர்கள் தான் அதற்குத் தடையாக இருக்கிறார்கள். அப்படி முஸ்லிம்கள் விட்டுக் கொடுத்தால், மத நல்லிணக்கத்துக்கு இந்தியாவைவிட வேறு சிறந்த உதாரணம் உலகில் இருக்க முடியாது."

சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உங்கள் அமைப்பும், மற்றவர்களும் பல்வேறு விதமான உதவிகளைச் செய்திருக்கிறார்கள் என்றாலும், அந்த மக்களுக்கு மனரீதியாக

"மரண தண்டனை ஒழிக்கப்பட வேண்டும்!



"சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களுக்குச் சுவாசப்பயிற்சி அளித்து மீட்டோம்"



ஏற்பட்ட பாதிப்புகளுக்கு எந்தவித மான நிவாரணம் அளித்திருக்கிறீர் கள்?

"சுனாமியால் நாகப்பட்டினம் மாவட் டத்தில் மட்டும் ஆறாயிரத்துக்கும் அதிகமானவர்கள் பலியானார்கள். உயிர் பிழைத்தவர்கள் மனரீதியில் மோசமான பாதிப்புக்குள்ளானார்கள். அவர்களைப் பழைய நிலைமைக்குக் கொண்டுவரும் நோக்கத்துடன், மனநல ஆலோசகர்களின் உதவியுடன் இரண்டு வெவ்வேறு சுவாசப் பயிற்சிகளை வடிவமைத்துக் கற்றுக் கொடுத்தோம். நான்கு நாட்கள், தினமும் இரண்டு மணி நேரப் பயிற்சி. அதன் மூலமாக அந்த மக்கள் மன பாதிப்புகளிலிருந்து மீண்டு இன்று இயல்பாக வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்."

மரண தண்ட னையைப் பற்றி உங்கள் கருத்து என்ன?

"மரண தண்டனை யாருக்கும் தரக் கூடாது என்பது தான் என் கருத்து! மனிதன் எவ்வளவு பெரிய குற்றம் செய் திருந்தாலும், அவனுடைய உயிரைப் பறிக்கக் கூடாது. கடுமை யான தண்டனை வழங்க வேண்டுமானால் அந்தக் குற்றவாளியை ஆயுளுக்கும் சிறையிலேயே வைத்திருக் கலாம்."

பல மட்டங்களிலும் தற் கொலை செய்து கொள்பவர் களின் எண்ணிக்கை அதி கரித்து வருவதற்குக் காரணம் என்ன?

"மக்கள் மத்தியில் ஆன்மிக உணர்வு குறைந்து வருகிறது என் பதைத்தான் இது காட்டுகிறது. இதற்கு ஆசிரியர்கள், பெற்றோர் கள் முதல் அரசியல்வாதிகள் வரை அனைவருமே பொறுப்பு. எந்த ஒரு பிரச்னையானாலும், அதனை மனபலத்துடன் சந்திக் கும் துணிச்சல் இல்லாமல் போய் விட்டதுதான் தற்கொலைகள் அதிகரிப்பதற்கு முக்கிய மான காரணம். நம்பிக்கை யுடன், ஆன்மிகத்தைக் கடைபிடித்தால், மனத் தில் தெளிவு பிறக்கும்; வாழ்வில் நிம்



மதி கிடைக்கும். சமூகத்தில் நக்சலைட்டுகளும், தீவிரவாதிகளும் உருவாக மாட்டார்கள்.''

உங்களுடைய வாழும் கலைப் பயிற்சி, வசதியான மற்றும் மத்திய தர வர்க்கத்தையே இலக்காகக் கொண்டுள்ளதே! அதற்குக் கீழே இறங்கி நீங்கள் ஏழை மக்களிடம் செல்வதில்லையே, ஏன்?

''சுவாசப் பயிற்சி, தியானம் இவற்றுடன் தலைமைப் பண்புகளையும் சேர்த்து ஒரு பிரத்யேகமான பயிற்சியினை வடிவமைத்து, அதனைக் கிராமப்புறங்களில் செயல்படுத்தி வருகிறோம். மகத்தான மாற்றத்தை அளிக்கும் இந்த அமைதிப் புரட்சி இன்று இந்தியாவில் உள்ள சுமார் இருபத்தைந்தாயிரம் கிராமங்களில் நடந்து கொண்டிருக்கிறது.''

''மகத்தான மாற்றத்தை அளிக்கும் இந்த அமைதிப் புரட்சி இன்று இந்தியாவில் உள்ள சுமார் இருபத்தைந்தாயிரம் கிராமங்களில் நடந்து கொண்டிருக்கிறது.''

இன்று போலிச் சாமியார்கள் பெருகி, மக்கள் அவர்களை நம்பி மோசம் போகும் அவல நிலைமை நிலவுகிறதே! இது ஏன்?

''அதற்கு முக்கியமான காரணம், ஏதோ ஓர் அற்புதத்தை நிகழ்த்தி அவர்கள் மக்களைக் கவர்ந்து விடுகிறார்கள். அல்லது அற்புதங்களைப் பார்த்து மயங்கி மக்கள் சென்றுவிடுகிறார்கள். அங்கே உண்மையான ஆன்மிகமோ, தேடலோ இல்லை. தங்கள் பிரச்னைகள் எல்லாம் மேஜிக் போல மறைந்து விடும் என்று நம்பி அவர்களிடம் சென்று ஏமாந்து போகிறார்கள்.

ஆன்மிகவாதிகளிடம் சென்று யோகா, தியானம் போன்றவற்றைக் கற்றுக்கொண்டு வாழ்க்கையில் மாற்றங்களைத் தங்களாகவே ஏற்படுத்திக் கொள்ள வேண்டும்.

இன்று ஆன்மிகவாதிகளில் சிலர் போலிகளாக இருக்கிறார்கள்; மக்களை ஏமாற்றுகிறார்கள் என்பதற்காக ஒட்டுமொத்தமாக எல்லா ஆன்மிகவாதிகளையுமே போலிகள் என்று சொல்லிவிடக்கூடாது. இன்று சிலர் அப்படி ஒரு பொதுவான அபிப்ராயத்தை ஏற்படுத்தும்படி விமர்சிக்கிறார்கள் அதுவும் கண்டிக்கத் தக்கது!''

- எஸ். சந்திரமௌலி

படங்கள்: பொள்ளாச்சி சுந்தரம்



அமரர் கல்கி



ஒரு கூச்சலும் இன்னொரு கூச்சலும்...

கொழும்பிலுள்ள தமிழர்கள் பகலெல்லாம் அவரவர் தொழிலைக் கவனிக்கிறார்கள்; அஸ்தமித்ததும் சங்கங்களிலும் பிரசங்களிலும் ஈடுபடுகிறார்கள். கொழும்பிலே தமிழர் நடத்தும் எவ்வளவு சங்கங்கள் இருக்கின்றன தெரியுமா! நானும் பார்த்தாலும் பார்த்தேன்; பொறுமையுடன் பிரசங்கம் கேட்கிறதிலே இலங்கையிலுள்ள நமது தமிழ்ச் சகோதரர்களுடன் போட்டியிட யாராலும் முடியாது!

ஆனால் இப்படியெல்லாம் சங்கங்களிலும், பிரசங்கங்களிலும் ஈடுபட்டிருக்கிறார்களே, இவர்களுக்குக் கஷ்டமே ஒன்றும் கிடையாதா என்று நினைக்க வேண்டாம். அரசியல் சம்பந்தமாகவும், தொழில் சம்பந்தமாகவும் அவர்களுக்கு எவ்வளவோ கஷ்டங்கள் இருக்கின்றன. ஆனால் அந்தக் கஷ்டங்களை மறப்பதற்கும் அவர்களுக்கு ஒரு வழி இருக்கிறது. ஒரு கஷ்டத்தைப் பற்றி அவர்கள் நினைத்துக் கொண்டிருக்கும்போதே இன்னொரு கஷ்டம் வந்து விடுகிறது. இரண்டாவது தொல்லையில் முதல் தொல்லையை மறந்து விடுகிறார்கள். இன்று காலையில்தான் ஒரு சிநேகிதர் ஒரு கதை சொன்னார். ஒரு மனுஷனுக்கு இரட்டைக் குழந்தை பிறந்ததாம். அவருடைய நண்பர் ஒருவர் அவருக்கு அனுதாபம் சொல்வதற்காக வந்தாராம். "அடாடா! இரண்டு குழந்தையும் சேர்ந்து அசாத்தியக் கூச்சலாயிருக்குமே? எப்படித்தான் பொறுத்துக்கொண்டிருக்கிறாயோ?" என்றாராம். அதற்கு, இரட்டைக் குழந்தையின் தகப்பனார், "அதெல்லாம் இல்லை. ஒரு குழந்தையாயிருந்தால் தான் கூச்சல் தொந்தரவு. இப்பொழுது ஒரு குழந்தையின் கூச்சல் இன்னொரு குழந்தையின் கூச்சலில் மறைந்துவிடுகிறது" என்று சொன்னாராம். அந்த மாதிரிதான் இலங்கையிலுள்ள நமது சகோதரர்களும் பின்னால் வரும் கஷ்டத்தில் முன்னால் வந்த கஷ்டத்தை மறந்து விட்டிருக்கிறார்கள்!



- வானதி பதிப்பகத்தின் 'கண்டேன் இலங்கையை' புத்தகத்திலிருந்து...

'ஒரு நிமிஷம்...
உங்கள் வயசை மறந்து
கண்ணை மூடி
உங்களுக்குள்ளே
பாருங்கள்
பிசுபிசுக்கும் இருட்டு
உரசும் தண்ணீர்
ததும்பும் காற்று
நினைவில்லாத அமைதி
ஒருபோதும்
திரும்பிப் போக
முடியாதது
அந்தக் கருவறை நாட்கள்'

எழுத்தாளர் எஸ்.ராமகிருஷ்ணனின் இந்த வரிகள், 'தசையினை தீ சுடினும்' என்னும் படம் குறித்த எதிர்பார்ப்பினைக் கூட்டுகிறது.

ஏ.ஜி.என்.ஓ.த்ரீ ($AGNO_3$) மற்றும் எஸ்.டி.ஆர். புரொடக்ஷன்ஸ் பரணிதரன் இணைந்து தயாரிக்கும் இத்திரைப்படம், மூன்று காலகட்டங்களில் வாழும் மூன்று தலைமுறைப் பெண்கள், தங்கள் வாழ்க்கையில் எதிர்கொள்ளும் பிரச்னைகளைப் பற்றியது.

"எது மாறினாலும் மாறாத விஷயம் தாய்மை. அந்தத் தாய்மை உணர்வின் பதிவுதான் 'தசையினை தீ சுடினும்'" என்கிறார் படத்தின் இயக்குநர் விஜய் பிரபாகரன்.

"1945, 1977, 2004... இந்த மூன்று காலகட்டங்களில் நிகழ்



1945



கின்ற கதையில், மூன்று ஹீரோயின்களை அறிமுகப்படுத்தியுள்ளோம். நான்கு பாடல்கள். பாடலாசிரியர், நம் பாரதியார். படத்தின் தலைப்பே அவருடைய பாடல் தந்த கொடைதானே'' என்கிறவருக்கு இப்படத்தின் ஒளிப்பதிவாளர் ரோஹித் பிரபுவும், தயாரிப்பாளர் ஸ்வாதி ரகுராமனும் நெருங்கிய நண்பர்கள்.

கத்ரி கோபால்நாத்தின் மகன் மணிகாந்த் கத்ரி இசையமைக்க, வசனம் எஸ்.ராமகிருஷ்ணன். கலையை கிருஷ்ணமூர்த்தி கவனிக்கிறார்.

''அம்மா என்கிறவள் உன்னதமானவள். அவளுடைய பாசத்துக்கு இணையானதொரு விஷயம் இவ்வுலகில் இருக்கவே முடியாது. எத்தனையோ படங்கள் இந்த விஷயத்தைப் பல கோணங்களில் காட்டியிருக்கலாம். ஆனால் எங்களின் பார்வை, நிச்சயம் புதிய சிந்தனையோடு இருக்கும்'' என்று அழுத்தமாகச் சொல்கிறார் விஜய் பிரபாகரன்.

- அருணாஸ்



கருவறையின் கதை!



1977

ஹீஹீயாலஜி!

''ஓட்டல் முதலாளியை ஆஸ்பத்திரியிலே சேர்த்திருக் காங்களாமே?''

''ஆமாம்... காலையிலே தன் னோட ஓட்டல் டிபனை ருசி பார்த்திருக்கார்!''

- லெ.நா.சிவகுமார்





உயிர் காத்த டாக்டர்!

''ஹியரிங் எய்ட் வேணும்னு எவ்வளவு நாளா சொல்றேன், ஏன் காதுலயே போட்டுக்க மாட்டேங் கறீங்க?''

''நான் ஏன் போட்டுக்கணும், எனக்குத்தான் காது நல்லாக் கேக்குதே!''

- வெ.சீதாராமன்

''டெல்லியில ஏகப்பட்ட பேஷண்ட் உயிர் பிழைச்சதுக்குக் காரணமே நீங்கதான் டாக்டர்.''

''அதெப்படி? நாங்கதான் ஸ்ட்ரைக் பண்ணி ஹாஸ்பிடல் வரவே இல்லையே?''

''அதனாலதானே உயிர் பிழைச் சாங்க.''

- சென்னிமலை சி.பி. செந்தில்குமார்



அருள்வாக்கு



கானல்...

ஜலமே இல்லாத பாலைவனத்தில் ஜலம் இருக்கிற மாதிரி ஓர் ஏமாற்று ஜாலம் நடக்கிறது. அதுதான் கானல்நீர் என்பது! பிரதிபிம்பம் (reflection), ஒளிச்சிதறல் (refraction) 'தியரி'களைக் கொண்டு ஸயன்ஸில் இதை விளக்குகிறார்கள். மொத்தத்தில் இது என்னவென்றால், பாலைவனம் மாதிரியான ஒரு விஸ்தாரமான வெளியில் ரொம்பவும் உஷ்ணம் ஏறிப்போய், காற்றுப் பிரதேசம் இலேசாகி விடுகிறபோது, தூரத்திலிருந்து பார்க்கிறவர்களுக்கு ஜலத்திலே பிரதிபிம்பம் தெரிகிறமாதிரி மண்ணிலேயே தெரிகிறது. தூரத்திலிருந்து பார்க்கிறபோது வெறும் மணற்பாங்கான பூமியே ஒரு நதி ஓடுகிற மாதிரி தெரியும். அதை நோக்கிப் போகப் போக, அதுவும் தள்ளிப் போய்க் கொண்டேயிருக்கும்.



இப்படிப்பட்ட கானல் நீரைப் பார்த்து மான்கள் உண்மையான ஜலம் என்று நினைத்து, அதைத் தேடித் தேடி ஓடி, கடைசியில் ஓட முடியாமல் களைத்து, வெயிலின் உஷ்ணம் தாங்காமல், ரொம்பவும் பரிதாபமாக ஜீவனை இழக்கும். ஸம்ஸ்க்ருதத்தில் 'ம்ருக்' என்றால் 'தேடுவது' என்று அர்த்தம். ஓயாமல் எதையாவது தேடி ஓடிக்கொண்டே இருப்பதுதான் 'ம்ருகம்'. கானல் நீரைத் தேடி ஓடி மடிவது மான் என்ற ம்ருகத்தின் பரிதாபமான கார்யமாக இருக்கிறது!

உலகமெல்லாம் மாயை என்று அத்வைத சாஸ்திரத்தில் சொல்லியிருக்கிறது. "அதெப்படி மாயை? உலகம்தான் கண்ணுக்குத் தெரிகிறதே!" என்று கேட்டால், "கானல் நீர்கூடத்தான் கண்ணுக்குத் தெரிகிறது. அதனால் அது நிஜமாகி விடுமா? அப்படித்தான் இந்த உலகமும் ஒரு கானல் நீர்" என்று அத்வைத க்ரந்தங்களில் சொல்லியிருக்கிறது.

- ஜகத்குரு காஞ்சி காமகோடி
ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி
சங்கராச்சார்ய சுவாமிகள்

நேற்றைய காற்று

கோபப்படாதே என்பது பொதுவான அறிவுரை. இந்த அறிவுரை திரைத்துறையில் கதாபாத்திரங்களின் முடிச்சுகளுக்குப் பெரு உதவி புரிகின்றன.


'மனிதா நீ செய்த
வினைதானே
வருத்துது பார் உனையே
மமதையினாலே
வாழ்வே சீர்
கெடுவாய்
கோபத்தினாலே
குற்றம் செய்யாதே'

என்றொரு பாடல், 'வேலைக்காரன்' திரைப்படத்தில் இடம் பெற்றுள்ளது. எழுதியவர், கே.பி.காமாட்சி சுந்தரம். சிதம்பரம் சி.எஸ். ஜெயராமனின் கணீர்க்குரலில் மனித குலம் கோபத்தினால் அடையும் விபரீதத்தை விவரிக்கும் பாடல் இது!

கே.பி.காமாட்சி சுந்தரம் காஞ்சிபுரம் அருகே உள்ள காவேரிப்பாக்கத்தைச் சேர்ந்தவர். முறையான பள்ளிக் கல்வி பெறாதவர்.



சிரிங்க... சிரிங்க... சிரிச்சுக்கிட்டே இருங்க!



18

அதிக கோபமும் நிறைய நேசமும்...

ஆயினும், அவரிடமிருந்த இயல்பான கவியார்வம் அவரை முன்னணி பாடலாசிரியர் வரிசையில் இடம் பெறச் செய்துள்ளது. 1900-ல் பிறந்த காமாட்சி சுந்தரம் ஏழு வயதிலேயே எம்.கந்தசாமி முதலியார் ஆசிரியராக இருந்த 'ஒரிஜினல் பாய்ஸ் கம்பெனி'யில் சேர்த்து விடப் பட்டிருக்கிறார். அரிச்சுவடிக் கல்வியைக் காட்டிலும் அனுபவக் கல்வி ஒருவரை எவ்விதம் உயர்த்தும் என்பதற்கு இவரே சான்று!

ஓசை ஒழுங்குக்கு ஏற்றவாறு வார்த்தைகளைப் போடுவதில் வல்லவரான காமாட்சியின் முதல் திரைப்பாடல், 1938-ல் வெளிவந்த 'பம்பாய் மெயில்' படத்தில் இடம்பெற்றது. தொடக்கத்தில் நாடக நடிகராக அறியப்பட்ட காமாட்சி சுந்தரம், பின்னாட்களில் நடிப்பிலிருந்த ஆர்வத்தைப் பாடலுக்கு மடைமாற்றிக் கொண்டு செயல்பட்டிருக்கிறார் இத்தனைக்கும் நடிப்புத் துறையில் இவர் பாலையாவுக்கு முன்னோடி என்கிறார்கள். மேற்கத்திய உடையணிந்து இவர் நடிக்கும் நாடகத்தைப் பார்க்க அக்காலத்தில் மக்கள் திரண்டு வருவார்களாம்!

'சிற்பி செதுக்காத
பொற்சிலையே
எத்தன் சித்தத்தை
நீ அறிவாயோ?
அற்பச் செயலுக்கு
இப்படியும்
மன அவஸ்தைப்
பட விடுவாயோ?'

என்று காலத்தாலும் நிராகரிக்கப்பட இயலாத கற்பனைத் திரவியத்தை 'எதிர்பாராதது' படத்துக்காக சுந்தரம் எழுதியிருக்கிறார்.

இன்றுவரை இயக்குநர் ஸ்ரீதரின் பெயரையும் இசையமைப்பாளர் சி.என்.பாண்டுரங்கம் பெயரையும் சொல்லும் பாடலாக இது அமைந்திருக்கிறது. பாடலின் இதர வரிகளும் மிக நேர்த்தியாகவே அமைந்திருக்கின்றன.

'கற்பனைக் கெட்டாத
அற்புதங்கள் தன்னை
காண்பதும்
உன் செயலாலே
கற்கண்டு பாகு
கனி ரசத் தேனும்
கசப்பதும்
உன்
மொழியாலே'

என்று போகும் அப்பாடலைப் பாடியவர் ஏ.எம்.ராஜா. காமாட்சி சுந்தரத்தின் பாடலைப் பற்றிய பகிர்வில் ராஜாவையும் சி.எஸ்.ஜெயராமனையும் குறிப்பிடுவது இரண்டு பாடல்களிலும் தென்படும் உச்சரிப்புத் தெளிவை விளக்கவே! இத்தனைக்கும் சி.எஸ்.ஜெயராமன் பாடவிருந்த 'மருமகள்' (1953) திரைப்படப் பாடலான 'சின்னச் சின்ன வீடு கட்டி' பாடலை ராஜாவே பாடியிருக்கிறார். 'கட்டி' என்பது 'கட்சி' என்பதாக சி.எஸ்.ஜெயராமன் பாடும் போது ஒலித்ததால் இசைமேதை சி.ஆர்.சுப்பராமன் ராஜாவை அப்பாடலைப் பாடப் பணித்திருக்கிறார். 'பாடுபவர் என்னைவிடத் தெளிவாகப் பாடினால்தான் ஏற்றுக்கொள்வேன்' என்று நன்மைக்காகப்

யுகபாரதி



தழுதழுத்த வைரமுத்து...

படப்பிடிப்பு முடிந்தும் நீண்ட நாட்களாக திரைக்கு வராமலிருந்த 'அடைக்கலம்' படம், இப்போது ரிலீசுக்குத் தயார். பிரசாந்த், உமா, தியாகராஜன், சரண்யா உள்ளிட்டோர் நடித்திருக்கும் இப்படத்தில், கதாநாயகி என்று யாருமில்லை. அண்ணன் - தங்கைப் பாசத்தை அடிப்படையாகக் கொண்டது.

"அப்பாவும் நானும் பல படங்களில் இணைந்து நடித்திருந்தாலும் இந்தப் படத்தில்தான் தந்தை - மகன் என்கிற கெமிஸ்ட்ரி ஒர்க் அவுட் ஆகியுள்ளது. ஒருவருக்கொருவர் பாசத்தைப் பொழிந்து நடிக்கும்போது அழுதே விட்டோம்'' என்று உணர்ச்சி வசப்படுகிறார் பிரசாந்த்.

இலங்கைத் தமிழரான ஸ்ரீநாராயணதாஸ் இப்படத்தைத் தயாரித்திருக்கிறார். இவர் ஏற்கெனவே ஜனாதிபதி விருது பெற்ற 'விடு' படத்தைத் தயாரித்தவர்.

"டைரக்டர் புவன ராஜாவுக்கு இது முதல் படம். ஆனால் அதற்கான சாயல் எதுவுமின்றி, பல படங்கள் எடுத்தவர் போன்று அடைக்கலத்தை அவர் தந்திருக்கிறார்'' என்கிறார் தாஸ்.

அண்மையில் இப்படத்தின் ட்ரெய்லர் வெளியீட்டு விழாவில் பேசிய வைரமுத்து.

பிடிவாதம் பிடித்த இசையமைப்பாளர்களை நினைக்கப் பெருமிதம் கொள்கிறது ஹிருதயம்.

இசையமைப்பாளர்களில் இசை மேதையாகக் கருதப்பட்ட இன்னொருவர் சுதர்சனம். ஏவி.எம். நிறுவனத்தின் ஆஸ்தான இசையமைப்பாளராகப் பணிபுரிந்த சுதர்சனம், 1940-லிருந்து ஏறக்குறைய கால் நூற்றாண்டு காலம் ஏவி.எம். படங்களுக்கு ஸ்வரம் பிடித்தவர். ஏவி.எம். என்ற பேனர் மெட்டை உருவாக்கித் தந்தவர். இவருடன் இணைந்து பல வெற்றிப் பாடல்களுக்கு வார்த்தை வழங்கியவர் கே.பி.காமாட்சிசுந்தரம். தாம் மிகவும் மதித்த பாடலாசிரியர் எனக் காமாட்சியைப் போற்றிய சுதர்சனத்தின் இதயத்தில் வேறு எந்தக் கவிஞரை விடவும் காமாட்சியே உயர்ந்து நின்றதற்கு இணைந்து பணியாற்றியது மட்டுமே காரணமாக இருக்க முடியாது.

'அமரதீபம்' (1956) திரைப்படத்தில் ஒரு பாடல். இசை டி.ஏ.சலபதிராவ்.

'தேன் உண்ணும் வண்டு
மாமலரைக் கண்டு
திரிந்தலைந்து பாடுவதேன்
ரீங்காரம் கொண்டு?' என்னும் இந்தப் பாடலை யார் கேட்டாலும் நடந்து கொண்டிருந்த கால் சற்றே நிலைகுத்தி வேர் பரப்பும் விநோதத்தைக் காண முடியும். மேடை நாடகப் பாடல் மெட்டுகளை, இந்தித் திரையிசைப் பாடல் மெட்டுகளைச் சற்றே சீர் செய்து முன்னும் பின்னும் மாற்றித் தமிழ்ப் பாடல்களாக வெளிவந்து கொண்டிருந்த காலத்தில், இம்மாதிரியான பாடல்களே அசல் தமிழ்ப் பாடலின் முகத்தை வெளிப் படுத்த உதவியிருக்கின்றன.

'கிடுக்கி' என்ற இந்திப் படத்தில் வந்த மெட்டை பாடகி எம்.எஸ்.ராஜேஸ்வரி முணுமுணுக்க, அந்த முணுமுணுப்பையே சந்தமாக்கி 'நாம் இருவர்' படத்துக்குப் பாடலைப் பெற்றிருக்கிறார்.

'உன் கண் உன்னை
ஏமாற்றினால்
என் மேல் கோபம்
உண்டாவதேன்' - என்ற அப்பாடலைப் பற்றிக் கூறும்போது, பாரதியார் பாடல்கள் படத்துக்குக் கொடுத்த வெற்றியை இப்பாடலும் கொடுத்தது எனலாம்.

''தாய்படும் வேதனை போன்றதுதான் ஒரு கவிஞன், திரைப்பாடலை பிரசவிப்பதும். ஆனால் அந்த வலி புரியாதவர்கள், தொலைக்காட்சிகளிலும் வானொலிகளிலும் இசையமைப்பாளர், பாடலாசிரியரின் பெயரைக் குறிப்பிடாமலேயே இப்போதெல்லாம் ஒலிபரப்புகிறார்கள். தயவுசெய்து உருகிக் கேட்கிறேன்.. எங்கள் உணர்வுகளைப் புரிந்து கொள்ளுங்கள்'' என்று நா தழு தழுத்துப் பேசினார்.

- ரேவதி



• 'அடைக்கலம்' படத்தில்...

மேலும், கே.பி.காமாட்சிசுந்தரம் பாட்டெழுதுவதில் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரத்துக்கு ஈடானவர் என்றுரைத்த ஏவி.எம்.செட்டியாரின் வார்த்தைகள் கவனிக்கத் தக்கன.

'நல்லதம்பி', 'திகம்பர சாமியார்', 'உலகம்', 'ராஜா ராணி', 'சிங்காரி', 'ஓர் இரவு,' 'இதயகீதம்', 'நானே ராஜா' என்று பல படங்களுக்குப் பாடல் எழுதிய கே.பி.காமாட்சியின் குறிப்பிடத்தக்க பாடல்கள் அநேகம் என்றாலும் எல்லாரையும் போல என்னைக் கவர்ந்தது 'பராசக்தி' (1952)யில் இடம் பெற்றுள்ள

'புதுப் பெண்ணின்
மனதைத் தொட்டு
போறவரே - உங்க
எண்ணத்தைச்
சொல்லிவிட்டுப்
போங்க
இவ மனதைத்
தூண்டிவிட்டுப்
போறவரே - அந்த
மர்மத்தைச்
சொல்லிவிட்டுப்
போங்க' என்ற பாடல்.



• ஏவி.மெய்யப்ப செட்டியார்

பராசக்தியில் கதாநாயகனால் தாக்கப்படும் பூசாரியாக நடித்தவர் கே.பி.காமாட்சி. 'கோயில் கூடாதென்று சொல்லவில்லை; அது கொடியவர்களின் கூடாரமாகிவிடக் கூடாது என்றே சொல்கிறேன்' என்கிற வசனத்துக்குப் பாத்திரமான காமாட்சிக்கு. சமூகத்தின் மீதுள்ள கோபம் 'ஓர் இரவு' (1951) பாடலில் வெளிப்படுகிறது.

'என்ன உலகமடா
ஏழைக்கு நரகமடா,' பாடலில்

கட்டத் துணியின்றி ஏழைகள் வாட, மிராசுகள் வீட்டு ஜன்னல் கதவுகள் திரைச்சீலை கட்டுகின்றன என்று எழுதிப் புரட்சியை உருவகித்தவர். வீடு கட்டுகிறவன் வீதியில் கிடக்க, மாடியில் கூடி கும்மாளமிடுகிறது பணத் திமிர் என்று பகிரங்கப்படுத்தியவர்.

சக மனிதன் மீது நேசமும் சமூக அநீதிக்கு எதிரான கோபமும் காமாட்சியிடம் இருந்தும் நம்மை நேசித்த காமாட்சியை 1956ல் மரணம் எடுத்துக்கொண்டு போன செய்தி காலாதீத கருணையற்ற எமன்மீது கோபத்தை ஏற்படுத்துகிறது. 'லோபத்தினாலே நீ சாவது மெய்யே, வாழ்வது பொய்யே, பாபம் செய்யாதே' என்ற பாடலை இனி நீங்களும் கேட்க விரும்ப மாட்டீர்கள் தானே?

(வீகம்)



• மன்னர் காலத்து ஸ்டைல்!

சங்க கால விருந்து...



• காங்கேயம் டீம்...

நீங்க ஸ்கூல்ல படிச்சப்போ, ஆயாக் கடையில தேன் மிட்டாய், எள்ளு உருண்டை எல்லாம் வாங்கிச் சாப்பிட்டிருப்பீங்க...

எதுனா கிராமத்து வீடுகள்ல, கொள்ளு ரசம், மொச்சைப் பயறு கூட்டு, கருணை புளிக்கறி, கருப்பட்டி அல்வான்னு சாப்பிட்ட அனுபவம்கூட இருக்கும்!

இல்ல... உங்க பாட்டிம்மா தன் கையால, எள்ளு அன்னம், வெங்காயத் தீயல்னு உருட்டி உருட்டிப் போட்டு நீங்க ருசிச்ச ஞாபகம் இருக்கலாம்...

இதையெல்லாம் ஒண்ணா சேர்த்து, அமர்க்களமான விருந்தாவே கொடுத்து அசத்திட்டாங்க- சென்னை ஜி.ஆர்.டி. கிராண்ட் ஹோட்டல்காரங்க!

'சங்க கால உணவு'ங்குற தலைப்பில், நூறுக்கும் மேற்பட்ட விதவிதமான உணவு வகைகளை காங்கேயம் சேரன் கலைக் கல்லூரியின் சமையல் துறை ஆசிரியர்களும் மாணவர்களும் தயாரித்து வழங்க, சென்னையின் உணவுப் பிரியர்களுக்குக் கொண்டாட்டம் தொடங்கியது.



அசைவப் பிரியர்களுக்குத் தனி கவுண்ட்டர். எறால் மீன் அவியல், காட்டுக் கோழி, அயிரை மீன் புட்டுக் குழம்பு என அங்கேயும் மன்னர் காலத்துச் சிறப்பு உணவுகள் இடம் பெற்றுச் சப்புக் கொட்ட வைத்தன.

கடந்த டிசம்பர் மூன்றாம் தேதிவரை நடைபெற்ற இந்த உணவுத் திருவிழாவின்

வசீகரம் 1 : கேடயங்கள், வாள்கள், திரைச்சீலைகள் என ராஜா காலத்து செட்டிங்.

வசீகரம் 2 : பரிமாறுபவர்கள் அனைவரும் கிரீடமும், பளபள அங்கியுமாக அரசவைக் கோலத்தில் வலம் வந்தது.

வசீகரம் 3 : பனங்கிழங்கு தொடு கறி சூப்பர் டேஸ்ட்!

- ஆதர்ஷ்

படங்கள்: பொள்ளாச்சி சுந்தரம்

விமர்சனம்



சிவப்பதிகாரம்

கமர்ஷியல் படமா எடுக்க நினைச்சு கலைப் படமா எடுத்துட்டாரா, இல்ல கலைப்படமா எடுக்க விரும்பி கமர்ஷியல் படமா எடுத்துட்டாரா டைரக்டர் கரு பழனியப்பன்னு புரியல... இதுல பாதி, அதுல பாதின்னு கலந்து கட்டித் தந்திருக்காரு. ஆனா ரெண்டுமே நிறைவு தரல.


நாட்டுப்புறப் பாடல்கள் குறித்து ஆராய வந்துட்டு, பின்னணியில வேற வேலைகள் நடக்கறது, சுஜாதாவோட 'கரையெல்லாம் செண்பகப்பூவை' ஞாபகப் படுத்துது. ஆனாலும் நாட்டுப்புறப் பாடல்களுக்கு இந்தளவு முக்கியத்துவம் தந்த படம் சமீபகாலத்துல வேற எதுவும் இல்ல.

விஷால், வரிசையா அரசியல்வாதிகளைக் கொலை பண்றாரா, இல்ல அல்வா சாப்பிடறாரா (அல்லது கொடுக்கிறாரா?)ன்னு சந்தேகமே வந்துடுது. அந்த அளவுக்கு ரொம்ப சுலபமா காரியத்தை முடிக்கிறது நம்பும்படியா இல்ல. இப்படிக் கொலை நடக்கறதும் அதுக்கு மக்கள் ரியாக்ஷனைத் திருப்பித் திருப்பிக் காட்டறதும் சலிப்பைத் தருது. ஆனாலும் விஷாலோட நடிப்புல நாளுக்கு நாள் துடிப்பு கூடிக்கிட்டே வருது.

புதுமுகம் மம்தாவுக்கு வேலையே இல்ல. விஷாலோட புத்திசாலித்தனத்தை பார்த்துட்டு லவ் பண்றார், பாடறார், ஆடறார்... அவ்வளவுதான். ரகுவரன் அமைதியா வந்து போறார். ஆக்ரோஷத்தையும் ஆவேசத்தையும் கண்கள்ல தேக்கி வச்சி நடிச்சிருக்கார். கஞ்சா கறுப்பால ரொம்பச் சிரிக்க வைக்க முடியல.

கல்லூரிக் கருத்துக் கணிப்பால நடக்கற விபரீதங்களைத் துள்ளத் துடிக்கப் பதிவு செஞ்சிருக்காரு ஒளிப்பதிவாளர் கோபிநாத். வித்யாசாகர் இசை படத்துக்குப் பலம். யுகபாரதியோட வரிகள்ல 'சித்திரையில்' பாட்டு சுகம்.





'பளிச்' வசனங்கள் படம் முழுக்கக் கண் சிமிட்டறதும், 'ஏதாவது செய்யணும் சார்'னு பஞ்சோட படம் முடியறதும் டைரக்டரோட கொடியை உயர்த்துது. 'அரசியலுக்கு வர தகுதி வேணும்'னு அழுத்தமா பதிவு பண்ண விரும்பினவங்க, பிற படங்களோட சாயல் இல்லாம, பின்பாதியில காட்டின நேர்த்திய முன்பாதியிலயும் காட்டியிருந்தா நல்ல படம் கிடைச்சிருக்கும்.

- லஜ்ஜாவதி



சரத்குமார், ராதிகா என வரிசையாக அ.தி.மு.க.விலிருந்து வெளியே வந்துவிட்ட வேளையில், ராதாரவியும் அ.தி.மு.க.விலிருந்து எந்த நிமிடமும் வெளியேறலாம் என்கிற சூழ்நிலையில், அவரையே சந்தித்துப் பேசினோம்...

நீங்கள்தான் அம்மா சொன்ன வேடந்தாங்கல் பறவையா?

"அது எனக்குத் தெரியாது. ஆனால் இந்த நொடி வரை நான் அ.தி.மு.க.வில்தான் உள்ளேன். என்றாலும் அடுத்த நொடி எங்கே இருப்பேன் என்பதும் எனக்குத் தெரியாது."

எனில், கட்சி மாறப் போகிறீர்களா?

"இப்படியொரு கருத்தை மீடியா தான் பரப்பி வருகிறது. அண்மையில் முதல்வர் தென்னிந்திய நடிகர் சங்க வளாக மண்டபத்தில் நடைபெற்ற தயாரிப்பாளர் கே.ராஜனின் இல்லத் திருமணத்துக்கு வந்தபோது, மரியாதைக் காக நானும், சரத்குமாரும் சால்வை அணி வித்து வரவேற்றோம். உடனே நான் கட்சி மாறப் போவதாகக் கதை கிளம்பி விட்டது! நடிகர் சங்க வளாகத்துக்கு முக்கிய பிரமுகர்கள் வருகை தந்தால் வரவேற்பது மரியாதை. இதைக் கூட அரசியலாக்கி னால் என்ன செய்வது?

முதல்வருக்குத் தமிழ் சினிமாத் துறை பாராட்டு விழா நடத்திய போது 'காரண'மாகத் தானே நீங்கள் அதனைப் புறக் கணித்தீர்கள்?

"ஒட்டு மொத்த தமிழ் சினிமாவும் அந்த விழாவை நடத்தவில்லை. இயக்குநர்கள் மற்றும் தயாரிப்பாளர் சங்கங்கள்

"தன்மானத்தை அடகுவைக்



படம்: பொள்ளாச்சி சுந்தரம்

இணைந்தே நடத்தின. அவர்கள், நடிகர் சங்கத்தை மரியாதைக்காகக் கூட அழைக்கவில்லை. இருந்தபோதும் பெருந்தன்மையாக சங்க உறுப்பினர் களை அவ்விழாவில் பங்களிக்கச் சொன்னோம்; செய்தார்கள்."

சைதாப்பேட்டை தொகுதி கிடைக்காததுதான் உங்கள் அதிருப்திக்குக் காரணமா?

"இல்லை. அம்மாவே பார்த்துத்தானே என்னைச் சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுத்தார். அவருக்குத் தெரியும்- யாருக்கு எதைச் செய்

யணும்னு.

ஒரு பைசா கூட கமிஷன் வாங்காமல் தொகுதிக்குப் பல நல்ல திட்டங்களைச் செய்துள்ளேன். அவையெல்லாம் வெளியே தெரியாமல் போய்விட்டது."

கூட்டங்களில் பேசியே சம்பாதித்த நீங்கள், இப்போது கூட்டங்களை மறுக்கிறீர்களாமே? தி.மு.க.வை விமர்சிக்க வேண்டிய சூழல் வரும் என்பதாலா?

"1999-ல் நானும் எஸ்.எஸ்.சந்திரனும் அ.தி.மு.க.வில் இணைந்த நேரத்தில் சட்டமன்றத் தேர்தல் நெருங்கிய சமயம். அ.தி.மு.க.வைப் பற்றி எங்களுக்கு நன்றாகத் தெரியும் என்பதால், அவர்களைப் பற்றிய உண்மையான விமர்சனங்களைப் பேசினோம். பிறகு அ.தி.மு.க. ஆட்சிக்கு வந்த பிறகு, கூட்டங்களுக்குப் போவது தேவையற்றதாகிவிட்டது. இனிமேல் ஆளுங்கட்சியை எதிர்க்க வேண்டிய கட்டாயம் அ.தி.மு.க.வுக்கு ஏற்பட்டுள்ளது. அதற்குள் நான் கூட்டங்களை மறுத்ததாகக் கூறுவது அப்பட்டமான பொய்!

இன்னொன்று, கூட்டங்களில் பேசி என்ன சம்பாதித்து விட முடியும்! அவர்கள் போக்குவரத்துக்கும், செலவுக்கும்

ாட்டேன்!"

மட்டுமே பணம் தருவார்கள்."

உங்கள் தங்கை ராதிகாவும், மைத்துனர் சரத்குமாரும் அ.தி.மு.க.விலிருந்து வெளியேறியதால், நீங்களும் விலகி தி.மு.க.வில் இணையப் போகிறீர்களாமே?

"அவர்கள் இருவரும் தாமாகவே அ.தி.மு.க.வில் சேர்ந்தார்கள். கட்சியிலிருந்து விலக்கினார்கள், விலகினார்கள். அதற்காக நான் அ.தி.மு.க.விலிருந்து நீங்க வேண்டிய நிர்ப்பந்தம் இல்லை! ஆனால் அவர்களாகவே வெளியேற்றினால், நான் என் தன்மானத்தை அடகு வைத்து அங்கே இருக்க மாட்டேன்."

- குட்டிக்கண்ணன்

ஜோக்கூ போட்டி முடிவு!



கல்கி 19.11.2006 இதழின் 'ஜோக்கூ' போட்டியில் சிறப்பான ஜோக்கூ எழுதி தலா ரூ.250/-பரிசு பெறும் எட்டு வாசகர்கள்:

அதிக நேரம் ஆற்றியதில்
சூடே இல்லை
தலைவர் உரை!
- சீதா.கௌதம், சென்னை 5

'ஆசையே துன்பங்களுக்குக் காரணம்'
புத்தர் வரலாறு படிச்சிட்டியா?
நீதான் முதல் மார்க் வாங்கணும்!
- ஜெ.ப.கபிலன், திருக்குவளை

விபத்தில் தப்பினார்
நகைக்கடை அதிபர்
சேதாரமின்றி...!
- பி. கார்த்திகேயன், சென்னை

ஸ்வெட்டர் போட்டும்
நடுக்கம்
எதிரில் மனைவி!
- ராகவ், தஞ்சாவூர்

ஹிஸ்டரி கிளாசுக்குக் கட்டடித்து
தியேட்டரில் பார்த்தான்
வரலாறு!
- மயிலப்பன், ஈரோடு

எங்க வீட்டு மாட்டுக்கும்
காதில் கம்மல்...
'பேங்க்' லோன்!
- எஸ். சில்வனை, கொட்டாரம்

அழ முடியாமல் தவிக்கிறார்கள்
அம்மாவும் மனைவியும்
டி.வி.யில் நகைச்சுவைத் தொடர்!
- அமுதசுரபி, சென்னை

அண்ணலும் நோக்கினான்
அவளும் நோக்கினாள்
வந்தது மெட்ராஸ் ஐ!
- ஜி. சுந்தரமூர்த்தி, அரியலூர்

என் கடவுள்...என் தோழன்!

கடவுள்! இது வெறும் நான்கெழுத்துப் பதமா? அதற்கு வடிவம் உண்டா, இல்லையா? இந்த எண்ண ஓட்டத்தில் எந்தக் கருத்தாக்கத்தை ஏற்பது?

எளிமையான உதாரணம் ஒன்றைக் கூறுகிறேன். ஒரு சதுரம். அதன் குறுக்கே இரு கோடுகள் கிழித்துள்ளேன். இப்போது எத்தனைச் சதுரங்கள் இருக்கின்றன என்று கேட்டால், பலர் 'நான்கு' என்பார்கள். சிலர் 'ஐந்து' என்பார்கள். இரு விடைகள் கிடைத்துள்ளன. தனது விடையை நிரூபிக்கச் சொல்லி எவரிடம் நான் கேட்கட்டும்? ஐந்து என்று சொல்பவர்தான் அதை நிரூபிக்க வேண்டும்... ஏனெனில் ஐந்து என்ற எண்ணுக்குள் நான்கும் அடக்கம். ஆனால் நான்கு என்பது ஐந்தைக் கொண்டதல்ல.

இப்படித்தான், 'கடவுள் ஓர் ஆண்', 'அவர் ஒரு பெண்', 'அவர் சொர்க்கத்தில் இருக்கிறார்', 'அவர் நரகத்தில் இருக்கிறார்', 'கடவுளே கிடையாது' - என்றெல்லாம் பல்வேறு விதமாகச் சொல்கிறார்கள். ஆனால் உபநிடதப் பார்வை கொண்ட மனிதர் சொல்வதைக் கேளுங்கள். 'கடவுள் இருக்கிறாரா?' 'இருக்கிறார்.' 'அவர் ஆணா?' 'ஆம்!', 'அவர் பெண்ணா?' 'ஆம்!'. 'அவர் அஃறிணையைச் சேர்ந்தவரா?'' 'ஆம்!' அவர் சொர்ககத்தில் இருக்கிறாரா?', 'ஆம்!', 'அவர் எங்கும் உள்ளவரா?' 'ஆம்!'

முழுமையாக ஆமோதிக்கும் மனிதர் இவர்! இவரது கருத்தைத்தான் நாம் ஆராய வேண்டும். ஏனெனில் இவருடைய கருத்து மற்ற அனைவரின் கருத்துகளையும் உள்ளடக்கியது. இறைவன் நீக்கமற நிறைந்தவன் என்று நம்பும்போது கடவுள் எங்கும் எதிலும் இருக்கிறார் என்றுதானே பொருள்! கடவுள் ஏதாவது ஓரிடத்திலோ, ஒரு பொருளிலோ மட்டும் இருப்பவரானால், எங்கும் எதிலும் நிறைந்திருக்க அவரால் முடியாதே!

கடவுள் இருக்கிறாரா இல்லையா? என்பது முக்கியமன்று. நான் இங்கே இருக்கிறேன் என்பதால்தான் அதுவும் முக்கியமாகிறது. நானே இல்லையென்றால், படைப்பும் மாயையல்ல, பிரபஞ்சமும் மாயையல்ல. நான் இங்கு இல்லையென்றால், கடவுளும் மாயையல்ல. இன்று காலை இறந்துபோய்விட்ட ஒரு மனிதருக்கு, படைப்பு இருக்கிறதா இல்லையா என்பவற்றுக்கிடையில் எந்த வேறுபாடும் கிடையாது. குண்டுவெடிப்பு நிகழப் போகிறதா, சூரியன் இறக்கப் போகிறதா, சூரியமண்டலம் முழுவதுமே விழுந்துவிடப் போகிறதா, பால்வீதி பெருகி வெடித்துவிடப் போகிறதா - என்ற எதுவுமே அவருக்கு ஒரு பொருட்டன்று. ஏனெனில் எந்தச் சோதனையையும் காண அவர் உயிரோடு இல்லை. வாழும்போதுதான் நட்சத்திரம் ஒரு மர்மம்; கடவுளும் ஒரு மர்மம். வாழ்வேயில்லை என்றால், எதுவுமே பெரிய விஷயமில்லை. ஆகவே, கடவுளைப் புரிந்துகொள்ள முயற்சி செய்வதற்கு முன்னால், அந்த 'நான்' என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும்.

நம் உடலைத் தாக்கும் நோயையே உதாரணமாகப் பாருங்கள். கிருமி இல்லாதபோது வியாதி இல்லை. கிருமி தாக்கினால் நோய் ஏற்படுகிறது. கிருமியைத் தேடிக் கண்டுபிடித்து அழித்தால் அந்நோய் குணமாகிவிடுகிறது. மருத்துவத் துறையில், ஏன், எந்தத் துறையிலுமே கவனமான கண்காணிப்பு என்பது மிக முக்கியம். கூர்ந்து கவனிக்காமல் எந்தப் பிரச்னையையும் தீர்க்க முடியாது. நமக்குக் காய்ச்சல் வந்து மருத்துவரிடம் போனால், அவர் நம்மை ஆழமாகப் பரி சோதிப்பார். ஏனென்றால், சாதாரண ஜலதோஷம் முதல், டைபாயிட் - மலேரியா - சின்னம்மை - தட்டம்மை - ரத்தப் புற்று நோய் வரை பல்வேறு நோய்களுக்கும் காய்ச்சல்

தமிழ் வடிவம்: சிவசங்கரி

மீன் பிடிக்கக் கற்றுக் கொடு!

- சுவாமி சுத்தானந்தா

7



தான் முதல் அறிகுறி. மஞ்சள் காமாலை அல்லது டைபாயிட் நோய்களினால் காய்ச்சல் உண்டாகும் போது, சாதாரண ஜலதோஷத்துக்கான சிகிச்சையை மருத்துவர் அளித்தால், கோளாறுகள் அதிகமாகி நோயாளி உயிரையே இழக்க நேரிடலாம். வெறும் காய்ச்சல்தான் என்றாலும், அவரைத் தீவிரமான கண்காணிப்பில் வைத்திருந்து சரியான சிகிச்சையை அளிக்க வேண்டும். உடலுக்குக் காய்ச்சல் என்ற நோய் இருப்பதைப் போல், இன்னொரு வகை நோயும் உண்டு. அது என்ன என்பதைப் பிறகு பார்ப்போம். அதற்கு முன்பு....

“நம் எண்ணங்களை மட்டுமே திணித்தால், குழந்தைகள் கொள்கை வெறியர்களாகிவிடுகிறார்கள்...”

இப்பூவுலகில் நாம் சிந்திக்கக் கற்கிறோம். நண்பர்களே, சிந்திப்பது மிக அழகானது. பலரும் நமக்கு வெறும் எண்ணங்களைத்தான் தந்திருக்கிறார்கள்... சிந்திப்பதை வெகு அபூர்வமாகத்தான் கற்றுத் தருகிறார்கள். உதவி தேவையென்று ஒருவர் கேட்கையில், ‘பணம் கொடுத்தால் அவனைப் பிச்சைக்காரனாக்கி விடுவீர்கள். எனவே, பணம் சம்பாதிக்க வழி சொல்லிக் கொடுங்கள்’ என்கிறோம். அல்லது, ‘மீன் கொடுப்பதைவிட மீன் பிடிக்கக் கற்றுத் தந்தால் அவனை நல்ல மீன் வியாபாரியாக்கலாம்’ என்போம். ஆனால் இதை நாம் எப்போதும் கடைப்பிடிப்பதில்லை. நம் குழந்தைகளுக்காக இலட்சக்கணக்கில் சொத்து சேர்த்து வைத்தால், உபயோகமற்ற மனிதர்களைத் தான் உருவாக்குவோம். இலட்சக் கணக்கில் சம்பாதிக்கக்கூடியவர்களாக அவர்களை வளர்த்தால், அற்புதமான மனிதர்களை உருவாக்குவோம். ஆனால் நாம் அப்படிச் செய்வதில்லை. குழந்தைகளுக்கென்று எல்லாவற்றையும் சேர்த்துவைத்து, கடைசியில் அவர்கள் போதை மருந்துப் பழக்கம் கொண்டவர்களாக ஆகக் காரணமாகி விடுகிறோம்.

சொத்தைப் போன்றதுதான் ஞானமும்... நம் எண்ணங்களை மட்டுமே திணித்தால், குழந்தைகள் கொள்கை வெறியர்களாக ஆகிவிடுகிறார்கள்; ஆனால், சிந்திக்க கற்றுக் கொடுத்தால், அற்புதமான மனிதர்களாகிறார்கள்.



(தொடரும்)

எச்சரிக்கை

அசர்பைஜான். ஆடிக்கு ஒரு முறை. அமாவாசைக்கு ஒரு முறை செய்தித் தாளில் அடிபடும் நாடு. இப்போது அடிபட்டிருப்பது நஃப்தலான் (Naftalan) என்னும் நகரில் நடந்து வரும் அதிசயத் துக்காக.

தீபாவளி அன்று தலையில் எண் ணெய் தேய்த்துக் குளிப்பார்கள். மற்றபடி, கேசத்தின் அளவு, கிடைக்கும் நேரம் இரண்டையும் பொருத்து எப்போதாவது அதிசயமாக இடையில் எண்ணெய்க் குளியல் நடைபெறுவதுண்டு. நஃப்தலான் வாசிகள் என்ன செய்கிறார்கள் தெரி யுமா? ஒரு தொட்டி அளவுக்கு வழிய வழிய எண்ணெய் ஊற்றி அப்படியே முங்கி முங்கிக் குளிக்கிறார்கள். கிட்டத் தட்ட தினமும். 'எண் ணெயில் குளிப்பது சுகானு பவமாக இருக்கிறது' என்று புன்னகைக்கிறார்கள்.



நஃப்தலானிலுள்ள எந்தவொரு ஹெல்த் ரிசார்ட்டை அணுகி னாலும் உங்களுக்காக ஒரு குழி காத்திருக்கும். மூக்கைப் பிடித்து உள்ளே இறங்கி ஹாயாக நீந்திக் குளிக்கலாம். கையோடு பேப்பர் துண்டு கொண்டு போனால் அங்கேயே துவட்டிவிட்டுக் கிளம்பிவிடலாம்.

இவர்கள் குளிப்பது எந்த எண்ணெயில் தெரியுமா? அப்பட்ட மான க்ரூட் ஆயிலில். எதற்காக? எல்லாம் மருத்துவக் காரணத் துக்காகத்தான் என்கிறார்கள். தினமும் க்ரூட் ஆயிலில் குளித்தால் உடல் வலி, மூட்டு வலி சிட்டாகப் பறந்து போகுமாம். சரும வியாதிகள் அண்டாதாம். கிட்டத் தட்ட கேன்சரைக்கூட தீர்க்கும் என்கிறார் கள்.

இந்த விநோத க்ரூட் ஆயிலுக்கு நஃப்தலான் என்னும் பெயரையே

வைத்திருக்கிறார்கள். நமக்குத்தான் இந்தச் செய்தி புதுசு; அந்த ஊர் மக்களுக்கு நஃப்தலான் தண்ணீர் பட்டபாடு! சோவியத் யூனியன் உயிருடன் இருந்த காலத்திலேயே பல ரஷ்யர்கள் குளியலுக்காக அசர்பைஜானை நாடி வந்திருக்கிறார்கள். க்யூவில் நின்று சமர்த்தாகக் குளித்துவிட்டு வீடு திரும்பியிருக்கிறார்கள். மார்கோபோலோ தமது பயணக் குறிப்புகளில் இந்த மந்திர எண்ணெயைப் பற்றிச் சிலாகித்து எழுதியிருக்கிறார்,

எண்ணெய் விஷயம் இருக்கட்டும்; பொம்மை விஷயத்துக்கு வருவோம்.

நம் வீட்டில் உள்ள குழந்தைகளுக்கு அடிக்கடி குட்டியும் பெருசுமாக நிறைய பொம்மைகளை வாங்கித் தருகிறோம். பொம்மை என்ன கலர், பேட்டரி போட்டால் ஓடுமா, தூக்கி அடித்தால் வலிக்குமா என்று பார்த்துப் பார்த்துத்தான் வாங்குகிறோம்; இல்லையா? அடுத்த முறை, கூடுதலாக இன்னொரு கேள்வியையும் பொம்மைக்காரரிடம் கேட்டு விடுங்கள்: 'இந்தப் பொம்மையில் விஷயம் இருக்கிறதா?'

சான்ஃபிரான்சிஸ்கோ கடைத் தெருக்களில் உள்ள அத்தனை பொம்மைகளும் தரப் பரிசோதனைக்காக அனுப்பப்பட வேண்டும் என்று அரசு கண்டிப்பாகக் கேட்டுக் கொண்டுள்ளது. காரணம்,

உஷார்!

சில பிளாஸ்டிக் பொம்மைகள் விஷத் தன்மையைக் கொண்டுள்ளது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. வாய் ஊருகிறதே என்று அந்தப் பொம்மைகளை எடுத்துக் கடிக்கும் குழந்தைகள் நிச்சயம் பாதிக்கப்படுவார்கள் என்று மருத்துவர்கள் எச்சரிக்கிறார்கள். சரும வியாதியில் தொடங்கி கேன்சர் வரை அத்தனை உபாதைகளும் வந்து சேரலாம் என்கிறார்கள். ஒரே வரியில் அவர்கள் விடுத்துள்ள அபாயச் செய்தி இது: 'இந்தப் பொம்மையைச் சுவைப்பதும் சயனைடு தடவப்பட்ட லாலிபாப்பைச் சுவைப்பதும் ஒன்றுதான்!'



ஐ.நா., பொம்மைக்காரர்களுக்காக ஒரு பிரத்யேகச் சட்டத்தைக் கூடிய விரைவில் கொண்டுவரப் போகிறது. அந்தச் சட்டத்தின் சாராம்சம் இதுதான்: பிளாஸ்டிக் தயாரிக்கப் பயன்படுத்தப்படும் கெமிக்கல்லை முதலில் எலிகள் மீது பரிசோதிக்க வேண்டும். அவை நோய் நொடியின்றி இருந்தால் மட்டுமே அந்த பிளாஸ்டிக்கைக் கொண்டு பொம்மைகளைத் தயாரிக்கலாம்.

பிரச்னை என்னவென்றால் ஒரு பொம்மையைத் தயாரிக்க என்னென்ன பொருள்களை உபயோகப்படுத்தியிருக்கிறார்கள் என்ற விஷயத்தை பொம்மை கம்பெனிகள் பொதுவாகத் தெரிவிப்பதில்லை. 'பாதுகாப்பான பொம்மைகள்' என்று அவர்கள் லேபிள் ஒட்டினாலும், அதனை அத்தனை சுலபத்தில் நம்ப முடிவதில்லை.

சமீபத்தில், பதினாறு பொம்மைகளைத் தேர்ந்தெடுத்து (அமெரிக்காவில்தான்!) ஆய்வுச் சாலைக்குக் கொண்டு போயிருக்கிறார்கள். வாத்து, முயல், ஒட்டகச்சிவிங்கி என்று விதவிதமான பொம்மைகள். ஒவ்வொன்றும் ஒவ்வொரு கலர்; ஒவ்வொரு விலை. பரிசோதித்துப் பார்த்ததில், பதினாறும் ஆபத்தான கெமிக்கல்களைக் கொண்டு தயாரிக்கப்பட்டிருப்பது தெரிய வந்துள்ளது.


ஒரு சந்தேகம்... பேசாமல் இந்தப் பொம்மைகளை நஃப்தலானுக்குக் கொண்டுபோய் எண்ணெய், சீயக்காய் தேய்த்துக் குளிப்பாட்டினால் எப்படி இருக்கும்? ●

மருதன்



அனுபவம்

முருகன் அனுப்பிய துணை!



நாங்கள் குடும்பத்துடன் பழனிக்குச் சென்றிருந்தோம். தரிசனம் செய்து திரும்பும்போது இரவு பத்து மணி ஆகிவிட்டது. மலையிலிருந்து இறங்கும் முன் வெளிப் பிராகாரத்தைச் சுற்றிவரச் சென்றிருந்தோம். பயமாக இருந்தது. அப்போது ஒரு மயில் எங்கிருந்தோ வந்து அங்கு நின்றது. கொஞ்ச தூரம் சென்று திரும்பிப் பார்த்தால், அந்த மயில் எங்கள் பின்னாலேயே வந்து கொண்டிருந்தது. நாங்கள் நின்றால், அதுவும் நின்றது. அப்படியே வெளிப் பிராகாரம் முழுவதும் அந்த மயில் எங்களுடனேயே வந்து, நாங்கள் புறப்பட்ட இடத்துக்கு வரும் வரை கூட வந்தது. மலையிலிருந்து இறங்கும்போது, மயிலைக் காணோம். பயத்திலிருந்த எங்களுக்குத் துணையாகத்தான் முருகன் அந்த மயிலை அனுப்பினானோ!


- நாயகம், சென்னை

காணாமல் போன பெட்டி!



என் தாய், தந்தை மற்றும் சிறுமியாக இருந்த நான் மூவரும் திருநீர்மலையிலிருந்து திருப்பதிக்குப் புறப்பட்டோம். எழும்பூருக்குச் செல்ல, குரோம்பேட்டை ரயில் நிலையத்தில் ரயிலுக்காகக் காத்திருந்தோம். என் தகப்பனார் டிக்கெட் வாங்கி வரவும் ரயில் வந்து நிற்கவும், அந்தக் களேபரத்தில் எங்கள் பெட்டியை ஸ்டேஷனிலேயே மறந்து, எழும்பூருக்குப் போய்ச் சேர்ந்து விட்டோம். அப்போதுதான் தெரிந்தது-பெட்டி இல்லாதது! அந்தப் பெட்டியில்தான் வீட்டுச்சாவி, பட்டுப் புடைவைகள், நகைகள் எல்லாம் இருந்தன. என் தகப்பனார் வெங்கடாசலபதியை நினைத்துக் கொண்டு நிலையத்தில் புகார் கொடுத்த சில நிமிடங்களிலேயே குரோம்பேட்டை பிளாட்ஃபாரத்தில் ஒரு பெட்டி இருந்ததாகவும் ஸ்டேஷன் மாஸ்டர் அறையில் அது இருப்பதாகவும் செய்தி வர, என் தகப்பனார் உடனே குரோம்பேட்டை ஸ்டேஷன் மாஸ்டர் அறையில் நுழைந்ததும் அவர் முதலில் பார்த்தது அங்கு மாட்டியிருந்த திருப்பதி வெங்கடாசலபதியின் போட்டோவைத்தான்!

- விஜயலக்ஷ்மி, சென்னை



சவால்



பரிசு ரூ.2000

டயலாக் வுடுங்க!

வாசகர்களே, நீங்கள் சீரியல் பிரியரா? அப்ப உங்களுக்குத்தான் இந்த வார சவால்!

'கோலங்கள்' அபி ஜெயில்லேர்ந்து வெளியே வந்ததும் நேரா வேறொரு ஜெயில்ல இருக்குற 'ஆனந்தம்' அபிராமியைத்தான் சந்திச்சாங்க. நம்புங்க... பொய்யாத்தான் சொல்றோம்! ரெண்டு பேரும் அப்ப என்ன பேசிக்கிட்டாங்கன்னு கற்பனையா ஒரு டயலாக் எழுதி அனுப்புங்க.

அசத்தற எட்டு டயலாக்குகளுக்கு தலா ரூ. 250 பரிசு. ஒவ்வோர் டயலாக்கோடையும் கல்கியில உங்களுக்குப் பிடிச்ச முதல் 5 பகுதிகள் என்னங்கிறதையும் மறக்காம குறிப்பிட்டு எழுதுங்க. அஞ்சலட்டையில் மட்டும் எழுதுங்க. கண்டிப்பா ஒரு அஞ்சலட்டையில் ஒரு டயலாக் மட்டும்தான். ஆசிரியர் தீர்ப்பே இறுதியானது. கடைசி தேதி : **18.12.06**



தொடர்கதை

வியாபாரம்

ஓடிக் கொண்டிருந்த அந்த ஆம்புலன்சில் மஞ்சரி மயக்கத்தில் படுத்திருக்க... அருகில் சிவாவும், அம்சாவும் பதற்றத்துடன் அமர்ந்திருந்தார்கள். இந்தப் பக்கம் விஷ்வா அமர்ந்திருந்தான். ஜன்னல் கண்ணாடிகளை முற்றிலும் மறைக்கும் விதமாகத் திரைச்சீலைகள் தொங்கியதால், வண்டி எந்தச் சாலையில் சென்று கொண்டிருக்கிறது என்பதை உள்ளே இருப்பவர்களால் அறிய முடியாமல் இருந்தது.

"ரொம்ப நேரமா வண்டி போகுதேப்பா, பக்கத்துலதான் ஆஸ்பத்திரின்னு சொன்னியே..." என்றான் சிவா.

"அந்த ஆஸ்பத்திரியோட புது பில்டிங் ஊருக்கு வெளில இருக்கு. அங்க இன்னும் நவீன வசதிகள் இருக்கு. அதனால அங்கு போகுது போலிருக்கு" என்றான் விஷ்வா.

ஆம்புலன்சை ஓட்டிக் கொண்டிருந்த பாண்டி, கிழக்குக் கடற்கரைச் சாலையில் டோல்கேட்டுக்கு முன்பாக இருட்டான, தனிமையான பகுதியில் சாலையோரமாக வண்டியை நிறுத்தினான்.

"ஆஸ்பத்திரி வந்துடுச்சங்க" என்றாள் அம்சா.

"ஆமாங்க" என்ற விஷ்வா, அதே பூச்சிக்கொல்லி மருந்து ஸ்ப்ரேயை சட்டென்று எடுத்து சிவா, அம்சா இருவர் முகத்திலும் மாறி மாறி பீய்ச்சினான்.

பொத் பொத்தென்று இருவரும் சரிந்தார்கள்.

"விஷ்வா, பாண்டி இருவருமாகச் சேர்ந்து சிவாவையும், அம்சாவையும் தூக்கிச் சாலை ஓரமாகக் கிடத்தினார்கள்.

"பாண்டி, போய்க்கிட்டே இரு. செக் போஸ்ட் எதுலயாச்சும் போலீஸ் நின்னு, நிறுத்தச் சொன்னா மட்டும் நிறுத்து" என்றான் விஷ்வா.

"சரி" என்ற பாண்டி, செல்போன் எடுத்தான்.

"ஹலோ கஜா... பொண்ணைக் கடத்தியாச்சு. டோல்கேட் தாண்டிட்டோம். வந்துக்கிட்டே இருக்கோம். இன்னும் ஒரு மணி நேரத்தில் நீ சொன்ன ஸ்பாட்ல இருப்போம்."

"சரி. ஆமாம்... எப்படி கடத்தினே?"

விஷ்வா விவரித்தான்.

"கூட ரெண்டு பேரை சாட்சி வெச்சுக்கிட்டா கடத்துவாங்க?"

"எனக்கு வேற வழி இல்ல. அந்தப் பொண்ணு அவங்களோடதானே ரூம்ல இருந்தது. அவங்களுக்குத் தெரியாம எப்படிச் செய்யறது?"

"அவங்க மயக்கம் தெளிஞ்சதும் போலீஸ்கிட்ட போவாங்கடா!"

"போகட்டும். நாங்க எங்க அடையாளத்தையும், வண்டி அடையாளத்தையும் மாத்திட்டோம். போலீசுக்குத் தகவல் போறதுக்கு முன்னாடி பொண்ணு உன் கைக்கு வந்துடும். ஏன் கவலைப்படறே?"

"முட்டாள் மாதிரி பேசாதே. அதுக்கப்புறம் பெரிய நாடகம் இருக்கு."

"எப்படியும் போலீஸ் எங்களை நெருங்க முடியாது" என்று விஷ்வா சொல்லிக் கொண்டிருக்கும் போது, வண்டி வேகம் குறைந்தது.

"அப்புறம் பேசறேன்" என்று அணைத்துவிட்டு ஜன்னல் திரையை விலக்கிப் பார்த்தான். போலீஸ் செக் போஸ்ட்.

வண்டி நின்றது.

ஒரு கான்ஸ்டபிள் பாண்டியிடம் வந்தார்.

"எங்கேந்து வர்றே?"

"பாண்டி சார்."

"எங்கே போறே?"


"சென்னை சார். பார்ட்டிக்கு நெஞ்சுவலி சார். அப்பல்லோ கொண்டு போகச் சொல்லிட்டாங்க சார்."

"அப்படியா?"

"எமெர்ஜென்சி சார். போலாமா?"

"பேஷண்ட்டு யாரு?"

"ஒரு பெண்ணு சார். கூட அவங்கண்ணன் வர்



20

நாரு சார்."

கான்ஸ்டபிள் பின் புறம் வந்து கதவைத் திறந்து உள்ளே டார்ச் அடித்துப் பார்த் தார். புரிந்து கொண்டார். கதவை மூடினார்.

"போ...போ..." என்றார்.

ஆம்புலன்ஸ் செக் போஸ்ட்டைக் கடந்து சென்றது. பெருமூச்சு விட்டான் விஷ்வா.

அடுத்த ஒரு மணி நேரத்தில் அந்த கெஸ்ட் ஹவுசில் ஆம்புலன்ஸ் வண்டி நின்று கொண்டிருந்தது.

அறையில் படுக்க வைக்கப்பட்ட மஞ்சரியை மயக்கம் தெளிந்ததும் தப்ப விடாமலிருக்க, கைகளையும், கால் களையும் கயிறால் கட்டி வைத்திருந் தார்கள்.

சுஜா, பாண்டி, விஷ்வா மூவரும் வர வேற்பறையில் அமர்ந்து மது அருந்தத்

பட்டுக்கோட்டை பிரபாகர்

தொடங்கினார்கள்.

ஆகாஷ், மயக்கத்தில் இருந்த மஞ்சரியைத் தனது செல்போன் கேமராவால் பல கோணங்களில் படம் எடுக்கத் துவங்கினான்.

சிவாவுக்கு முதலில் மயக்கம் தெளிந்தது. தான் எங்கே இருக்கிறோம் என்று புரிந்து கொள்ளவே சில நிமிடங்கள் பிடித்தன. பிறகு பதைத்துப் போய் அம்சாவைத் தேடினான். சாலையோரமாகச் சரிந்திருந்த அம்சாவிடம் வந்து அவள் கன்னத்தில் தட்டி எழுப்பினான். சூழ்நிலை புரிந்து பதறினாள்.

"யாருங்க அவன்? விடிஞ்சா கல்யாணங்க! மஞ்சரிக்கு எதுவும் ஆயிடக் கூடாதுங்க. பயமா இருக்குங்க."

"இரு! முதல்ல இது எந்த ரோடுன்னே தெரியலை. முதல் காரியமா மாப்பிள்ளைக்குத் தகவல் தரணும். போலீசுக்குச் சொல்லணும்."

தூரத்தில் இருட்டைத் துளைத்துக் கொண்டு இரட்டை வெளிச்சம் நெருங்கியதைப் பார்த்து... சிவா நடுசாலையில் நின்று கைகளை அசைத்து அந்தக் காரை நிறுத்தினான்.

விவரம் சொல்லி அந்தக் காரில் ஏறிக் கொண்டு, அதில் இருந்தவரிடம் கேட்டு செல்போன் வாங்கினான் சிவா. குமரனின் எண்களை அழுத்தினான்.

"ஹலோ... குமரன் பேசறேன். யாரு?"

"மாப்பிள்ளை, நான்தான் சிவா பேசறேன்" என்று அழத் துவங்கிய சிவா அழுகையை அடக்கிக் கொண்டு நடந்ததைச் சொல்லி முடித்ததும்...

தன் அறையில் கட்டிலில் அமர்ந்து பேசிக் கொண்டிருந்த குமரன் அதிர்ச்சியில் எழுந்து விட்டான்.

"நீங்க தங்கியிருக்கிற ஹோட்டலுக்கே திரும்பிடுங்க. நான் என் நண்பர் இன்ஸ்பெக்டர் தியாகுவுக்குத் தகவல் சொல்லி அங்க கூட்டிட்டு வர்றேன். தைரியமா இருங்க. எனக்கும் டென்ஷனா இருக்கு. எங்க வீட்ல உடனே இதைச் சொல்லி அவங்களைக் கலவரப்படுத்த விரும்பலை. எப்படியும் மஞ்சரியை மீட்டுடலாம்" என்று போனை வைத்தான் குமரன். உடனே அடித்தது.

"ஹலோ" என்றான் குமரன்.

"கல்யாண மாப்பிள்ளையா பேசறது?" என்றான் எதிர்முனையிலிருந்து கஜா. அவன் அருகில் சிகரெட் பிடித்தபடி ஆகாஷ்.

"யாரு?"

"நானா? இப்ப இந்த நிமிஷம் நீங்க தேடற ஒரு பொண்ணு எங்கிட்ட இருக்கு. அதை விக்கிறது சம்பந்தமா பேசத்தான் கூப்பிட்டேன்."

"ஏய்! யார் நீ?"

"கல்யாணப் பொண்ணைத் திட்டம் போட்டுக் கடத்தினவன் அட்ரஸ் எல்லாம் சொல்வானா?"

"அடப்பாவி! மஞ்சரி... மஞ்சரி எப்படி இருக்கா?"

"என் பொறுப்புல பத்திரமா தூங்கிட்டு இருக்கா."

"ப்ளீஸ்... அவனை



"அவர் விஜயகாந்த் ரசிகர்னு எதை வெச்சு சொல்றீங்க?"

"சாப்பாட்டுலகூட 'கூட்டு' சேர்த்துக்க மாட்டேங்கிறாரே!"

- மீனா

விட்டுடு."

"நான் விடமாட்டேன்னா சொன்னேன்? அதுக்கு விலை பேசுவமா, ராஜா?"

"முதல்ல மஞ்சரியைப் பேசச் சொல்லு!"

"மயக்கத்தில் இருக்காளே... அவளை எடுத்த போட்டோஸ் உன் செல்போனுக்கு அனுப்பறேன். அதைப் பார்த்துட்டு விலை பேசு; இப்போ, கட் பண்ணு."

குமரன் போனை அணைத்துவிட்டு லேண்ட் லைன் போனில் தியாகுவை அழைத்தான்.

"தியாகு சார்... குமரன் பேசறேன்."

"என்ன தம்பி இந்த நேரத்துல?"

சுருக்கமாக விளக்கினான்.

"போட்டோஸ் அனுப்பிச்சிட்டானா அவன்?"

"இன்னும் இல்ல."

"நீங்க முதல்ல ஹோட்டல் வைடூர்யாவுக்கு வாங்க தம்பி; நானும் அங்க வந்துடறேன். விசாரிச்சிடலாம்."

குமரன் உடனே காரில் வைடூர்யா ஹோட்டலுக்குப் புறப்பட்டான். காரை ஓட்டிக் கொண்டிருந்தபோது படச் செய்தி வந்திருப்பதாகத் தகவல் செல் போனில் வர... ஓரமாக நிறுத்திப் பார்த்தான்.

மஞ்சரி கை, கால்கள் கட்டப்பட்டு மயக்க நிலையில் கட்டிலில் படுத்திருக்கும் மூன்று போட்டோக்கள் வந்திருந்தன.

மீண்டும் கஜா அழைத்தான்.

"என்ன குமரன், பார்த்தியா?"

"ம்..."

"அதிகம் இல்லை. ஒரே ஒரு கோடி கொடு."

"என்னது!"

"உனக்கு இது பெரிய தொகையே இல்லையே, ஏன் ஷாக் ஆகறே? இத பாரு! என் செல்போன் நம்பர் வெச்சி என்னைப் பிடிக்கிறதெல்லாம் நடக்காது. மஞ்சரி கற்போடவும் உசுரோடவும் வேணும்னா உனக்கு வேற வழியே இல்லை. என்ன சொல்றே?"

என்ன சொல்வதென்று புரியாமல் தவித்தான் குமரன்.

(தொடரும்)

உலகம்!

தேசத்துக்குள் தனி தேசம்!



ஜி.எஸ்.எஸ்.

கனடா பாராளுமன்றம் சமீபத்தில் அபூர்வமான ஓர் அறிவிப்பை வெளியிட்டிருக்கிறது. 'கியூபெக் இனி கனடாவுக்குள் அடங்கிய ஒரு தனி தேசமாகவே கருதப்படும்' என்று அங்கீகாரம் அளித்துப் பலரையும் வியக்க வைத்திருக்கிறது. கனடா முழுவதுமே கிட்டத்தட்ட ஒரே மதம்தான்; மரபுகளும் ஏறத்தாழ ஒன்றுதான்! ஆனாலும் பிரிவினைகோஷம் தொடர்ந்து அங்கு எழக் காரணம், மொழி.

கனடாவில் இரண்டே ஆட்சி மொழிகள் - ஆங்கிலம், பிரெஞ்சு. இதில் கியூபெக் பகுதியில் பிரெஞ்சு மொழி பேசும் மக்கள் மிக அதிகமாக இருக்கிறார்கள். அந்தப் பகுதியைக் கனடாவிலிருந்து பிரித்துத் தனி நாடாக்க வேண்டும் என்ற கோஷம் சுமார் பத்து வருடங்களாகவே இருந்து வருகிறது. 'பார்ட்டி கியூபெக்கா' என்ற கட்சியின் தலைவர்கள் இதில் அதிக ஈடுபாடு காட்டுகிறார்கள்.

முன்னேறிய நாடுகளில் ஒன்றாக கனடா இருக்கும்போது எதற்காக அதிலிருந்து பிரிய வேண்டும் என்று கியூபெக் மக்கள் துடிக்க வேண்டும்? தாங்கள் மாற்றாந்தாய் மனப்பான்மையுடன் கனடா அரசால் நடத்தப்படுவதாக அவர்கள் நினைப்பதுதான்.


கியூபெக் பகுதியில் ஆங்கிலத்தைப் பயிற்று மொழியாகக் கொண்ட கல்வி நிலையங்கள் நிறைய உண்டு. ஆனால் கனடாவின் பிற பகுதிகளில் பிரெஞ்சு கற்றுத் தரும் கல்வி நிறுவனங்களின் எண்ணிக்கை மிகக் குறைவு. இதைத்தான் பிரிவினைக்கு முதல் காரணமாக வைத்தார்கள். பிரிவினையை எதிர்த்தவர்கள், 'கியூபெக் அல்லாத மாநிலங்களில் ஆங்கிலத்தோடு பிரெஞ்சு மொழியையும் பயிற்று மொழியாக ஆக்கலாம்' என்றார்கள். ஆனால் கனடா அரசு இதற்கு ஒப்புக்கொள்ளவில்லை.

இதைத் தொடர்ந்து 'கியூபெக் மாநிலத்தில் உள்ள ஆங்கிலம் பயிற்றுவிக்கும் நிறுவனங்களுக்கு அரசு மானியம் கூடாது' என்ற கோஷம் எழுந்தது. இதையும் அரசு ஏற்றுக் கொள்ளவில்லை.

பதினாறாம் நூற்றாண்டில் கனடாவுக்கு வந்த பிரான்ஸ் நாட்டினரின் வழித்தோன்றல்கள்தான் இப்போதைய பிரெஞ்சு - கனடாக்காரர்கள். நான்கு நூற்றாண்டுகளுக்குப் பிறகும் தங்கள் தனித்தன்மையைக் காப்பாற்றிக் கொள்ள அவர்கள் மேற்கொண்ட முயற்சி இப்போது சுயாட்சிக்கு வழிவகுத்து, அதிகமான உரிமையை அவர்களுக்கு அளித்திருக்கிறது.

நீங்கள் கேட்டவை-தராசு





• சுசுக்கும்...



• ...கரும்பு!

● எம்.பாஸ்கர், திண்டுக்கல்

? "என்னைக் கோமாளி என்று விமர்சனம் செய்கிறார்கள். இந்திய அமைச்சர்களுள் நான் நம்பர் ஒன்" என்று லாலு கூறியுள்ளாரே?

! நம்பர் ஒன் பட்டத்தை ஒரு பத்திரிகை ஆய்வு நடத்தி அவருக்கு அளித்திருக்கிறது. ஆனால், அதை அடக்கத்துடன் ஏற்காமல், அவர் பறைசாற்றிக் கொள்வதே கூட கோமாளித்தனம்தான். ரயில்வேயின் இன்றைய வெற்



• கூசச்செய்யும் கூற்று!

'ஜிம் ஜிம்' என்ற குளிர்பானம் வருதாமே?

றிக்கு அவர் மட்டுமே காரணமல்ல; மத்திய அரசு தனியார்மயக் கொள்கையை ஏற்று அமல்படுத்துவதே முக்கியக் காரணம்.

● அ. அப்துல் காதர், விளாத்திகுளம்

? கரும்பு விவசாயிகளின் பிரச்னைக்காக அ.தி.மு.க. போராட்டம் நடத்தும் என்று அறிவித்ததால்தான் கருணாநிதி பணிந்து விலை குறைப்பை வாபஸ் பெற்றார் என ஜெயலலிதா கூறியுள்ளது பற்றி...?

! ஜனநாயகத்தில் ஆளுங்கட்சி கவனிக்கத் தவறியதை எதிர்கட்சி எடுத்துக் காட்டுவதும், அதை ஆட்சியில் உள்ளோர் ஏற்பதும் அடிப்படைத் தத்துவம். இதில் வெற்றி - தோல்வி; மிரட்டல் - பணிதல் என்பதற்கெல்லாம் இடமில்லை. "எங்கள் கருத்தை ஏற்று உத்தரவு பிறப்பித்த முதல்வருக்கு நன்றி" என்று ஜெ. கூறி சிறந்த ஜனநாயக மரபுகளைப் பின்பற்றியிருக்க வேண்டும். ஹூம்...! அந்தக் காலமெல்லாம் மலையேறிப் போச்சு!

• அபாயப் போக்கு!





★ மதிக்கும் மேன்மை



★ நெ 1. பறைசாற்றல்!

! முதலில் 'ஜம் ஜம்'மென்று வரவேற்று உபசரித்துவிட்டு, அதன் தீமை பற்றி பிற்பாடு பெரிதாகத் தெரிய வருகிறபோது, 'தாம் தூம்' என்று குதிப்பதுதானே நம்முடைய வழக்கம்! இதிலும் அப்படித்தான் நடக்கும் போலுள்ளது.

● **கே. சண்முகம், ஆதமங்கலம்புதூர்** ❑

? "ஐந்து வருடங்களில் செய்ய வேண்டிய சாதனைகளை ஐந்தே மாதங்களில் செய்து முடித்து விட்டார் கலைஞர்" என்கிறாரே பரிதி இளம் வழுதி. அப்படியானால், அடுத்த நாலரை ஆண்டுகளுக்குச் செய்ய ஒன்றுமே இல்லையா?

! மனதைக் கூசச் செய்யும் பரிதியின் மிகையான வார்த்தைகள் ஒருபுறம் இருக்கட்டும். அடுத்த தேர்தலுக்குப் பிறகு தி.மு.க. ஆட்சியில் இருக்குமோ, இராதோ; அதனால் அதற்கும் அடுத்த நாலரை ஆண்டுகளில் சாதிக்க வேண்டியதை இப்போதே செயல்படுத்திக் காட்டட்டுமே!

● **என். சித்தாலட்சுமி, பொள்ளாச்சி** ★

? படத்தில் கவர்ச்சியாக நடிப்பவர் ஒருவர் (ஸ்ரேயா) அதே போன்ற உடை உடுத்தி பொது நிகழ்ச்சிகளுக்கு வருவதும், மேடையில் அமர்வதும் சரியா?

! உடை என்பது அவரவர் தனிப்பட்ட விஷயம் என்ற போதிலும், காண்பவர் அதிர்ச்சியுறாத வண்ணம் காட்சியளிக்க வேண்டியது ஒவ்வொரு மனிதனுக்கும் சமூகப் பொறுப்பு. இதை மீறுகிறபோதும் அதுவே பிறரால் முன்னுதாரணமாகக் கொள்ளப்படுகிறபோதும் அபாயம் எழுகிறது.

● **என்.சண்முகம், திருவண்ணாமலை**

? "தமிழகத்தில் பா.ம.க. ஒரு நிழல் அரசாங்கத்தை உருவாக்கி, அதன் மூலம் அரசுக்குப் பல முன் மாதிரித் திட்டங்களை எடுத்துக்கூறும்" என்கிறாரே ராமதாஸ்?

! வரவேற்க வேண்டிய முடிவுதான் - அரசியல் காழ்ப்பின்றி ஆரோக்கியமாகச் செயல்பட்டால்.

● **ப. ராமகிருஷ்ணன், காயக்காடு**

? கோக், பெப்சிக்குப் போட்டியாக இந்தியச் சந்தைக்கு 'ஜம் ஜம்' என்ற ஈரான் குளிர்பானம் வருகிறதாமே...? இதை அரசு அனுமதிக்கலாமா?

● **பா. அச்சுதன், வயலூர்**

? பாரதியார் கவிதைகளில் உங்களுக்குப் பிடித்தது...?

! கல்கி வார இதழின் தலையங்கப் பக்கத்தைப் பாருங்கள் - தாய், தாய்மொழி, தாய்நாடு அனைத்தையும் உள்ளடக்கிய பாரதியின் பாடல் வரிகளை இம்மூன்றையும் மதிப்பவன் மேன்மையுறுவான்.

● **ஏ.ஜி.கல்யாணசுந்தரம், மணியக்காரன்பாளையம்**


? இப்போதைய தமிழ்ப்படங்களின் பாடல்கள் பெரும்பாலும் மனத்தில் நிற்பதில்லையே, ஏன்?

! மனத்திலா? சரியாப் போச்சு! காதுகளிலேயே நிற்பதில்லை. அடுத்தவரி வரும் போது, முதல் வரி விளக்கெண்ணெய் மாதிரி வழுக்கிக் கொண்டு போய் விடுகிறது.

❑ ரூ 100 பரிசு பெறுபவர் :
கே. சண்முகம்,
ஜெயசித்ரா ஸ்டோர்ஸ்,
ஆதமங்கலம்புதூர்.

★ ரூ 50 பரிசு பெறுபவர்
என். சித்தாலக்ஷ்மி,
43/5, கிருஷ்ணாஹவுஸ் அபார்ட்மெண்ட், ராஜாஜி வீதி,
பொள்ளாச்சி 642 001

வட்டமேஜை



வைகோவை இளைஞனாகக் காட்டிய அட்டைப் படம் பார்க்க நயமாக இருந்தது.
பாளையங்கோட்டை, பி.சிவா

ஜி.ஆர். சுரேந்திரநாத்தின் 'மாலதியக்கா' சிறுகதை அழுகையை வரவழைத்து, என்னைக் கடந்த காலத்துக்கு அழைத்துச் சென்றுவிட்டது.
சோழவந்தான், வி.எம்.எஸ்.ஸ்ரீனிவாசன்

'அபாயகரமான உடன்படிக்கை' தலையங்கம் மக்கள் மனத்தில் உள்ள அச்சத்தை அப்படியே படம் பிடித்துக் காட்டியது.
தூத்துக்குடி, அ.அப்துல் காதர்

பொருத்தமான புகைப்படங்களுடன் சிறுகதைகளை வெளியிட்டிருந்தது வித்தியாசமானதாக இருந்தது.
நெய்வேலி, ப.உத்தண்டராமன்

'கல்கி பற்றிய வாசகர்களின் நச் வரிகள்... சும்மா சொல்லக்கூடாது... செம சூப்பர்!
திருப்பூர், எஸ்.பால்ராஜ்

அறுவரின் தூரிகைத் திருவிழா கண்களுக்கு அரிய விருந்து!
சென்னை - 87, பா. கண்ணன்

முல்லைப் பெரியாறு என்பதை 'முல்லைப் பெரியார்' என்று குறிப்பிடும் தவறை கல்கி செய்யலாமா?
ராமாபுரம், பானுமதி வெங்கடேஸ்வரன்

'புகை ஆரோக்கியத்தின் பகை!' என்ற பாலகுமாரனின் அறிவுரை, எல்லோருக்குமே ஒரு ரெட் சிக்னல்!
சென்னை,
ரோஷன் ராவ் மஹிந்திரநாத்

நல்ல பாடல்கள் எழுதிய மாயவநாதன், இறுதியில் பசியால் தெருவோரத்தில் விழுந்து இறந்தார் என்பதைப் படித்தபோது மனம் கலங்கியது.
சென்னை - 73, ஜி.கல்யாணசுந்தரம்

குஷ்புவின் பதில்களைவிட கல்கியின் கேள்விக் கணைகள் ரசிக்க வைத்தன.
நாமக்கல், யூ.பைஸ் அஹமத்





Danceனே!

பஞ்சதந்திரக் கதைகளை நடனமாக வழங்குவதென்பது போஸ்ட் கிராஜுவேட் ஸ்டூடன்டை ப்ரீ கே ஜியில் உட்கார வைக்கும் முயற்சி! இந்த விபரீதத்தை ஏன் ஆனந்தா சங்கர் ஜெயந்த் முயன்றார்



என்று கேட்கும் உரிமை நமக்கு இல்லை - அது நடனக் கலைஞர் டாக்டர் ஆனந்தாவின் ஆனந்தமான சுதந்திரம்.

சரி, எடுத்துக் கொண்ட காரியத்தை அவர் எப்படிச் செய்தார் என்று பார்ப்போம்:

அரங்கேறிய ஐந்து கதைகளும் விலங்குகளைப் பற்றியவை. ஆமை, குரங்கு, கொக்கு, சிங்கம், முயல், மான் என்று விதவிதமான விலங்குகளின் அசைவுகளைத் தத்ரூபமாகக் காட்ட, விதவிதமான நடனபாணிகளைக் கையாண்டார்.

- பல அசைவுகள் மிகையாகி கார்ட்டூன் சித்திர அசைவுகளாகி விட்டன!

மொழி இன்றி வெறும் பின்னணி இசையைக் கொண்டு கதையை நகர்த்தினார்.

'டொய்ங் டொய்ங்' என்று மீண்டும் மீண்டும் ஒரே மெட்டு 'ரிப்பீட்' ஆனதால், காதுக்குத் துளியும் இனிமை இல்லை.

உடை, ஒப்பனை மூலம் விலங்குகளின் உருவத்தைக் காட்ட நூதன யுக்திகளைக் கையாண்டார்.

- இதனால் ஒரு பொம்மலாட்டம் அல்லது பான்டோமைம் பார்க்கும் உணர்வே ஏற்பட்டது.

குட்டிக் குரங்கை அம்மாக் குரங்கு தூக்கி வருவது, கொக்குகள் கட்டையைப் பிடிக்க, அதை ஆமை கவ்வியவாறு அவற்றோடு 'பறப்பது', கிணற்றுக்குள்



இருக்கும் 'நிழல்' சிங்கத்தைக் கண்டு நிஜ சிங்கம் ஆங்காரப்படுவது போன்ற காட்சிகளுக்கு ரொம்பவே மெனக்கெட்டிருந்தார் ஆனந்தா.

இதனால் அவ்வப்போது மனோகர் டிராமா போல் தோன்ற ஆரம்பித்து விட்டது.

ஆனால், இதையெல்லாம் செய்யாமல் முயலும் சிங்கமும் கதையையும் ஆப்ப சைத்த குரங்கின் கதையையும் ஒன்றரை மணி நேரத்துக்கு எப்படிச் சொல்ல முடியும்!

இதே காரணங்களால் நிகழ்ச்சி ஆனந்தா பெயரிட்டதைப்போல் Dance தியேட்டராக அமையாமல் Dance டூன்ஸ் ஆகிவிட்டது.

நிருத்ய சூடாமணி பட்டம் பெற ஹைதராபாத்திலிருந்து சென்னைக்கு வந்துள்ள ஆனந்தாவுக்கு நாட்டியத்தைப் பற்றித் தெரியாதது அதிகம் இருக்க முடியாது.

ரஸங்கள்தான் நாட்டியத்தின் ஜீவன். அவை மனித உணர்ச்சிகளிலிருந்துதான் பிறக்கின்றன. விலங்குகளைப் பற்றிய நீதி போதனை (உருவக) கதைகளில் ரஸங்களுக்கு இடமில்லை. புதுமை என்ற பெயரில் பழத்தைத் தூக்கிப் போட்டுவிட்டுத் தோலைத் தின்ன வேண்டுமா?

(நிகழ்ச்சி: நாரத கான சபாவில் டிசம்பர் 2-ல் நடைபெற்றது).

தனஞ்சயன் பள்ளியின் குறுத்தோலை!

ஞான சபையில் தில்லை
கானம் தனில் நின்றாடும்
ஆனந்த நடராஜனே!

ஸாரங்கா ராகத்தில் சிதம்பரேசனை வர்ணிக்கும் பாபனாசம் சிவனின் அழகான பாடல். நாட்டியக் கலைஞரின் திறமைக்குச் சவால் விடும் நிதான கதியிலான மிஸ்ர சாபு தாளம். நன்றாகவே கையாண்டு, அனுபவித்து ஆடினார் ஸ்வப்னா ஸ்ரீதரன். தில்லையின் தெய்வீகம் பாவத்தில் வெளிப்பட்டது.

தனஞ்சயன் தம்பதியுடைய பரதகலாலயா மாணவி ஸ்வப்னா. தனஞ்சயன் பாணியின் அங்க சுத்தம், ந்ருத்யத்தில் கச்சிதம் - இரண்டும் அமையப் பெற்று, நாட்டியத்துக்கான உயரமும் உடல் அமைப்பும் வாய்க்கப் பெற்றவர்.

ஹம்ஸத்வனியில் பதவர்ணம், நிகழ்ச்சியின் பிரதான ஐட்டம். குரு சாந்தா மேடையில் அமர்ந்து மேற்பார்வையிட்டார். சிறந்ததொரு நட்டுவாங்க - இசைக் குழு ஆதரவு தந்தது.

ஸ்புரிக்கும் உணர்ச்சி பாவம், அபிநய வேறுபாடுகளில் மேலும் சற்றுக் கற்பனை வளம், ஜதிகளில் இன்னும் கொஞ்சம் துணிவும் துரிதமும்... இவற்றுடன் குருவின் வழிகாட்டலும் தொடர்ந்தால் ஸ்வப்னா ஸ்ரீதரன் விரைந்து முன்னேறி மேடைகளை ஆக்கிரமிக்க வாய்ப்புண்டு.

(நிகழ்ச்சி: மைலாப்பூர் ஃபைன் ஆர்ட்ஸில் டிசம்பர் 4-ல் நடைபெற்றது)



EXCLUSIVE

கடுகடுத்த வைகோ... கைகுலுக்கிய

கரன் தாபர். பிரபலங்களைச் சாதுர்யமாகக் கேள்விகள் கேட்டு மடக்கும் மூத்த பத்திரிகையாளர். தற்போது சி.என்.என். தொலைக்காட்சியில் இவர் நடத்தும் 'டெவில்'ஸ் அட்வகேட்' நிகழ்ச்சி மிகவும் பரபரப்பானது. கடந்த ஞாயிறன்று இரவு வைகோவின் பேட்டி இப் பகுதியில்



ஒளிபரப்பாயிற்று. சனியன்று இப்பேட்டிக்காக சென்னை வந்திருந்த கரன் தாபர், நம்மிடம் பேசியவற்றில் சில முக்கியமான பகுதிகள்.

வைகோவை எதற்காகப் பேட்டி காண விரும்பினீர்கள்?

"இரண்டு காரணங்கள். ஒன்று, அவர் மற்ற அரசியல் கட்சிகளின் நிலைப் பாட்டுக்கு மாறாக, விடுதலைப் புலி களைப் பகிரங்கமாக ஆதரிக்கிறார். அதற்கு என்ன காரணம்?

இரண்டாவதாக, அவர் அடிக்கடி கூட்டணி மாறிக் கொண்டே இருக்கிறார். அதனால் அவர் சந்தர்ப்பவாதியா? இவற்றுக்குப் பதிலளிக்க அவருக்கு வாய்ப்புத் தர வேண்டும்.

கடந்த இரண்டு வருடங்களாகவே வைகோவைப் பேட்டி காண்பதற்காக முயற்சி செய்து கொண்டிருந்தேன். முதல் முறை, அவர் பொடாவில் சிறை வைக்கப்பட்டு, ஜாமீனில் வெளியில் வந்த போதும், அடுத்து அவர் ஜெயலலிதாவுடன் கூட்டணி அமைத்தபோதும் பேட்டிகாண முயன்றேன். வைகோ மறுத்து விட்டார். ஆனாலும் முயற்சியை நான் கைவிடவில்லை. சில நாட்களுக்கு முன் அவரை டெலிபோனில் தொடர்பு கொண்டபோது, பேட்டிக்கு ஒப்புக் கொண்டார்."

நீங்கள் முதலமைச்சர் கருணாநிதியைப் பேட்டி காண முயற்சி செய்யவில்லையா?

"கருணாநிதி ஆங்கிலத்தில் எழுதி வைத்துக் கொண்டு படிப்பதை சில சமயங்களில் நான் பார்த்திருக்கிறேன். சரளமான ஆங்கிலம் பேசாவிட்டால், என்னுடைய பேட்டி எடுபடாது. மேலும் கருணாநிதி ஆங்கிலத்தைவிட தமிழில் பேசுவதையே விரும்புவதாக அறிகிறேன். தயாநிதி மாறனைப் பேட்டி காண முயற்சி செய்து கொண்டிருக்கிறேன்.

இன்றைய அரசியல்வாதிகளைப் பற்றி உங்கள் கருத்தென்ன?

"கடந்த பத்தாண்டுகளாக இந்திய அரசியல்வாதிகளிடம் நிறைய மாற்றங்களை நான் பார்க்கிறேன்.



-கரன் தாபருடன் ஒரு சந்திப்பு

மீடியாவின் கேள்விகளைத் தைரியமாக எதிர்கொண்டு பதிலளிக்கிறார்கள். முன்பு மாதிரி, பேட்டி என்றதும் என்னென்ன கேள்விகள் கேட்கப் போகிறீர்கள் என்று அவர்கள் கேட்பதில்லை.

அரசியல்வாதிகள் மக்கள் மத்தியில் செல்வாக்கு பெற்று விளங்குகிறார்கள். அவர்களைக் கேள்வி கேட்பது மீடியாவின் உரிமை என்றாலும், கேள்வி கேட்கும்போது மீடியாவும் பொறுப்புணர்வைக் கைப்பிடிக்க வேண்டும்.''

நீங்கள் பேட்டி கண்டவர்களுள் மறக்க முடியாதவர் யார்?

''ஒவ்வொருவரும் ஒரு விதத்தில் மறக்க முடியாதவர். ஜெனரல் முஷாரஃப், ஜெத்மலானி, ராகுல் பஜாஜ் என்று பெரிய பட்டியல் தருவேன். ஒவ்வொன்றும் அனுபவம்.

பேட்டி ஒளிப்பதிவின்போது ஜெத்மலானி ஆவேசமாகப் பேசினாலும், முடிந்ததும் ரொம்ப கூலாக, 'வாருங்கள் விஸ்கி சாப்பிடலாம்' என்று அழைத்தது சற்று வித்தியாசமானது.

அரசியல்வாதி என்றாலே வெறுப்புடன் பலர் பார்த்தாலும், அவர்களிடம் பாராட்டத்தக்க, ரசிக்கத்தக்க பல அம்சங்களை நான் காண்கிறேன்.

ஜெயலலிதா தமிழ்நாட்டு முதலமைச்சராக இருந்தபோது பேட்டி கண்டேன். அப்போது என்ன நடந்தது என்று எல்லோருக்கும் தெரியும்.


ஆனாலும், அவரை நான் டெல்லியில் தேசிய ஒருமைப்பாட்டுக்குழு கூட்டத்தின்போது சந்தித்தேன். சிரிப்புடன் கை குலுக்கிக் கொண்டோம்.''

- மௌலி

மூடு அவுட் ஆன வைகோ!

டெவில்'ஸ் அட்வகேட் ஒளிப்பதிவின்போது, 'விடுதலைப் புலிகள், அரசியல் தலைவர்களைக் குறிவைத்துத் தாக்கி அழிப்பது தவிர்க்க முடியாதது. விடுதலைப் போராட்டத்தில் இது சகஜமான ஒன்று' என்று வைகோ கூறியபோது, கரன் தாபர், "இந்த வாதம், ராஜீவ் படுகொலைக்கும் பொருந்துமா?" என்று மடக்க, வைகோ 'மூடு அவுட்' ஆகிவிட, 'சரி, அந்தக் கேள்வியை ஒளிபரப்ப மாட்டோம்' என்று சமாதானம் செய்யும்படியானதாம். அதேபோல, 'அடிக்கடி கூட்டணி மாறும் நீங்கள் ஒரு சந்தர்ப்பவாதியா?' என்று கேட்டபோதும், வைகோ கடுகடுத்துவிட்டாராம்!

ஆனால், மறுநாள், பேட்டியளித்ததற்கு நன்றி தெரிவித்து, கரன்தாபர் கடிதம் எழுத, உடனே வைகோ டெல்லிக்கு போன் செய்து வருத்தம் தெரிவித்து, 'இனி முழு ஒத்துழைப்புத் தருகிறேன். நம் நட்பு தொடரட்டும்' என்று கரன் தாபரிடம் சொன்னாராம்.







13

மனிதர்கள் வண்டைப் போல் ஆறு கால்களை உடையவர்கள் என்றும் அந்த ஆறு கால்கள் ஐந்து புலன்களும், மனமும் என்றும் ஆதிசங்கரர் குறிப்பிடுகிறார் அல்லவா?

அவர், இதற்கான விளக்கத்தை எங்கே சொல்கிறார் என்றால், பஜகோவிந்தத்தில் **ஸேந்த்ரிய மானஸ நிய மாத்யேவம் த்ரக்ஷஸி நிஜ ஹ்ருதயஸ்தம் தேவம்** - ஸ இந்த்ரிய மானஸ நியமாத் யேவம்– என்னுடைய குருவின் காலடியில் கொண்டுவந்து நான் போடுகிறேன். எதைப் போடுகிறேன்...? ஸ இந்த்ரிய மானஸ – இந்த்ரியங்களையும் அதோடு என் மனஸையும் போடுகிறேன்.

ஆக, ஆறுகாலியாக இந்த அம்பிகையின் காலடியில் வந்து நான் விழுந்து விடுகிறேன். நான் உணர்ந்து கொள்ள வேண்டுமென்றால், ஆறுகால்களோடு போய் விழ வேண்டும் - அதாவது ஐந்து புலன்களையும் மனத்தையும் **அவளிடத்தில்** கொண்டு போய்ப் போட வேண்டும். அவற்றை அழிக்க முயன்றால், இன்னொரு இடத்தில் பண்டாசுரனைப் போல கிளம்பும்! கண்ணிடம் பார்க்காதே என்று சொன்னால், திருட்டுத்தனமாகப் பார்க்க முயற்சி செய்யும்.

அதற்குப் பதிலாக – 'இதைப் பார் அம்பிகையினிடத்திலே கொண்டு போய்க் கண்ணைப் போட்டு விடு! அம்பிகையிடத்தில் கொண்டு போய்க் காதைப் போட்டுவிடு; அம்பிகையிடத்தில் கொண்டு போய்ப் புலன்களைப் போட்டு விடு; அம்பிகையிடத்தில் கொண்டு போய் மனத்தைப் போட்டுவிடு' என்று நெறிப் படுத்தியாயிற்று என்றால், பார்க்க வேண்டியதைப் பார்த்து, செய்ய வேண்டியதை இந்த இந்த்ரியங்களும் மனமும் செய்யும்; தகாத விஷயங்களுக்குப் போகாது.

காளிதாஸர் முதல் மகாகவி வரை...


இந்த ஆறையும் கொண்டு வந்து போட்டால் என்ன கிடைக்கும்?

திரக்ஷஸி நிஜ ஹ்ருதயஸ்தம் தேவம் - உள்ளுக்குள்ளே இருக்கக்கூடிய தெய்வத் தன்மையை, தேவதையை, நிஜமான அந்தத் தேவதையைப் பார்க்க முடிகிறது. எனில், எனக்குள்ளே சிதக்னிகுண்ட ஸம்பூதாவாக இருக்கக்கூடிய அவளை

அதனால்தான் அம்பாள் கையிலே நம் மனத்தை வில்லாக வைத்துக் கொண்டு, நம்முடைய புலன்களை, தன்மாத்திரைகளை மலர் அம்புகளாக வைத்துக் கொண்டிருக்கிறாள்.

அந்தத் தன்மாத்திரைகளை எங்கு செலுத்த வேண்டுமோ அங்கு அவள் செலுத்துவாள் என்பதால்தான் 'மனோரூபேக்ஷு கோதண்டா பஞ்சதன்மாத்ர ஸாயகா' என்று, அவள் இரு கரங்களிலே சஹஸ்ரநாம வர்ணனை ஆரம்பிக்கிறது.

சுதா சேஷய்யன்


சிறுவாச்சூர்
ஸ்ரீ மதுரகாளியம்மன்



• ககபிரம்மம்

பஞ்சதன்மாத்ர ஸாயகாவாக இருக்கக்கூடிய அம்பாள், பலவிதமான திருநாமங்களால் அர்ச்சிக்கப்படக் கூடியவளாக

மழை மேகம் நீரைக் கொட்டுவதைபோல கவிதைகளைப் பொழிந்த காளமேகம் அம்பாளுடைய அனுக்ரஹத்தினால் இந்தச் சக்தியைப் பெற்றவர்.

இருக்கிறாள் என்பதுதான் ஸஹஸ்ர நாமத்தினுடைய தாத்பர்யம்.

அகஸ்தியர் ஹயக்ரீவரிடத்திலிருந்து பெற்ற மந்திரம். அகஸ்தியர், அம்பாள் உபாஸகர்களுள் மிக உயர்ந்தவர். அகஸ்தியர் மட்டுமல்ல, அவருடைய மனைவி லோபாமுத்ரையும் அம்பாள் உபாஸகர்களுள் ஒருவர்.

பன்னிரு உபாஸகர்கள்

அம்பாள் உபாஸகர்களுள் ரொம்ப பிரஸித்தியானவர்கள் என்று பன்னிரண்டு பேர் உண்டு. அவர்களுள் துர்வாஸரும் ஒருவர். கொஞ்சம் கோபமாக இருக்கக்கூடிய துர்வாஸர் அம்பாள் உபாஸகரா என்றால், அவருடைய கோபமெல்லாம் தவறுகளைக் கண்டு எழுதுவதுதான். அப்படிக் கோபசாலியாக இருந்த துர்வாஸரும் கூட அம்பாள் உபாஸகராக இருந்தார்; அம்பாளை உபாஸிக்கக்கூடியவர்களெல்லாம் நன்மைகளைப் பெறுவார்கள் என்பதற்காக இந்தப் பன்னிரண்டு பேரையும் சொல்வது வழக்கம்.

அகஸ்தியர் தொடங்கி, துர்வாஸர் வரை இருக்கக்கூடிய அந்தப் பன்னிரண்டு பேர் மட்டுமல்லாமல் அதற்குப் பின்னாலேயும் அம்பாள் உபாஸகர்களாக இருந்தவர்கள் நிறைய பேர்.

இந்த நாட்டினுடைய இலக்கியம், பரம்பரை, மரபு என்று சொன்னால், காளிதாஸரை விட்டுவிட முடியாது. காளிதாஸரே அம்பாள் உபாஸகர்தான். அதே மாதிரி, தமிழ்நாட்டுக்கு வந்தால் காளமேகப் புலவர். காளமேகம் - மழை மேகம் எப்படி நீரைக் கொட்டுமோ, அப்படி கவிதைகளைப் பொழியக் கூடியவர். அம்பாளுடைய அனுக்ரஹத்தினால் இந்த சக்தியைப் பெற்றவர்.

அடுத்து, தாயுமானவ சுவாமிகள். அத்வைதத்தின் எல்லையில் நின்று பாடியவர் தாயுமானவர். அவருக்கு எல்லாமே பரம்பொருள்தான். அது எப்படி அவருக்குத் தெரிந்தது என்று கேட்டால், அதற்கு அவர் இன்னொருவரைப் பற்றி ஒரு விஷயம் சொல்வார்.

மகான்களை மகான்கள் அறிவர்

"உன் நண்பர்கள் யாவர் என்று சொன்னால், நீ எப்படிப்பட்டவன் என்பதைச் சொல்கிறேன்'' என்று ஆங்கிலத்தில் சொல்வழக்கு உண்டு. சாதாரண, லௌகிக வாழ்க்கையிலேயே இப்படி என்றால், ஒரு மகான் இன்னொரு மகானை உயர்த்திச் சொல்கிறபோது, யாரைப் பற்றிச் சொல்கிறார் என்பதைப் பொருத்து, இவருடைய மனத்தில் என்ன இருக்கிறது என்பதைக்



* காளிதாஸர்

கண்டுபிடித்து விடலாம்.

தாயுமானவர் சுகபிரம்மத்தை ரொம்ப சிலாகித்துப் பாடுவார் - ஓர் இடத்தில் சொல்வார் : 'சுகபிரம்மம் ஒரு காட்டுப் பிரதேசத்தில் நடந்து போனார். ''கடவுளே'' என்று கூப்பிட்டபடி போனார். அவர் அப்படிக் கூப்பிட்டவுடனே செடி - கொடிகளெல்லாம் "என்ன? என்ன?" என்று கேட்டன என்பார்.

சுகபிரம்மம் 'கடவுளே' என்று கூப்பிட்டுக் கொண்டே போனாராம்; அப்போது செடி கொடிகள் அவரிடம் பதில் பேசினவாம் என்று சொல்கிறபோது, அந்தச் செடி - கொடிகளெல்லாம் கூட தெய்வம் என்பதை சுகபிரம்மம் உணர்ந்திருந்தார் என்பதை, தாயுமானவரும் உணர்ந்திருந்தால்தானே சொல்ல முடியும்! அப்படிப்பட்ட தாயுமானவர் பெரிய அம்பாள் உபாஸகர்.

அவர் திருச்சியில் ஓர் அரசியாரிடம் அமைச்சராக இருந்தபோது நடந்த சம்பவம் சுவையானது...

(தொடரும்)

போட்டிக் கதை

நியாயத்தின் வாசனை!

உமா கல்யாணி

முதுமையை எரிச்சலாக உணரும் மனோபாவம், எனது சிறிய பிராயம் முதலே இருந்து வருவதற்குக் காரணம் தேடியபடியே இருக்கிறேன் ஒவ்வொரு நாளும்.

இந்த வகை வெறுப்பு வெங்குப்பாட்டனில் இருந்து துவங்கியிருக்கலாம்.

அவர் மீது அடிக்கும் ஒருவித வீச்சத்துக்குப் பயந்து காத தூரம் ஓடியிருக்கிறேன். இன்னொருவர் வேம்புத் தாத்தா.

திருநீற்றின் மணம், சந்தனத்தின் மணம் நல்ல வாசனை யுள்ள வேம்புத் தாத்தா வாயைத் திறந்து பேசத் துவங்கினால் சகித்துக் கொள்ள முடியாது.

கோமதி ஆச்சி பால்கொண்டு வருகிறபோதே, சாண நாற்றத்தையும் கைப்பற்றி அழைத்து வந்துவிடுவாள்.

எனினும், வேறு வழியே இல்லாமல், அந்தச் சின்னஞ்சிறு வயது முதலே இவற்றையெல்லாம் சகித்துக்கொண்டு போகப் பழகி விட்டேன்.

வெங்குப்பாட்டான், வேம்புத் தாத்தா, கோமதி ஆச்சி என்று நான் வெறுப்பவர்களைப் பட்டியல் போட்டால், மிக நீளமானதாய்ப் போய்விடும்.

ஒவ்வொரு கிழடும் ஒவ்வொரு ரகமாய் என்னை இம்சை பண்ணி எரிச்சல் கொள்ள வைக்கிற ஜென்மங்கள்தான். ரொம்ப நாட்களாய் இதுகளின் தொல்லை இல்லை. காரணம் நான் நகரத்துக்கு வாழ்க்கைப்பட்டது. இப்போது மறுபடியும் கிராமத்துக்குப் போக வேண்டிய சூழல். கிழங்களை நினைத்தால் எரிச்சலாக வந்தது. கனகராஜாதான் ஊருக்கு வரச் சொல்லியிருக்கிறார்.

ஊரை ஒட்டி, குளக்கரையைத் தொட்டபடி ஒரு மானாவாரித் தோட்டம் எங்களுக்கு உண்டு. அதை ஆக்ரமிப்புச் செய்ய முயற்சிகள் நடக்கின்றனவாம். அரசியல் பின்புலம் உள்ளவர்கள் என்பதால் முன்னாடியே சுதாரிப்பாக இல்லையென்றால், விழுங்கி விடுவார்கள் என்று எச்சரித்திருந்தார்.

இப்போது சுதாரித்துக்கொண்டு அவர்களை அப்புறப்படுத்தாமல் விட்டுவிட்டால், பின்னாளில் பல லட்சங்களுக்கு விலை போகப் போகிற தோட்டம், ஏப்பம் விடப்பட்டுவிடும் என்று சிவப்பு சிக்னலைக் காட்டியிருந்தார்

திருமலை என்பவ[r] கோழிப் பண்ணை நடத்தத் தான் அந்த இடத்தை நான் இலவசமாகக் கொடுத்திரு[ந்] தேன். இப்போது அரசியல்வாதிகளோடு சேர்ந்துகொண்டு வம்பிழுப்பதும் அதே ஆள்தான். கிழங்களையே நினைத்துக் கொண்டிருந்தால் வேலைக்கு ஆகாது. நிலம் பறிபோய் விடும். ஊருக்குப் புறப்பட்டேன்.

நினைத்த மாதிரியேதான் ஆயிற்று பஸ்ஸைவிட்டு நான் இறங்கியதுமே மொலுமொலுவென்று கிழங்கள் வந்து மொய்த்துக்கொண்டு விட்டன.

இம்சைகள் ஆரம்பமாகிவிட்டன.

நாசியை மூடிக்கொள்ள வேண்டு[ம்] போல்தான் இருந்தது. எனினும் பொறு[த்] துக் கொண்டு அவசரம் அவசரமா[க] பதில் கூறி ஒப்பேற்றி விட்டுத் தப்பி ஓ[டி] வந்து விட்டேன். கனகராஜ் புதி[ர்] இடியை இறக்கினார்.

திருமலைக்கே அதை நான் குறை[ந்த] வான விலை வைத்து விற்றுவி[ட] வேண்டுமாம். அப்படிக் கொடுக்க[ா] விட்டால், தற்போது அனுபவிக்கி[...]



உரிமையைக் காட்டி அப்படியே ஏப்பம் விட்டுவிடப் போவதாகப் பயமுறுத்தியிருக்கிறான். நான் இதற்குச் சம்மதிக்காவிட்டால், 'கவனிக்கும் விதமாய்க் கவனித்து' எனக்கு எதுவுமே தராமல், 'மொங்காம்' போட்டு விடுவானாம். நன்றாய்ப் பயமுறுத்தி விட்டுப் போயிருக்கிறான்.

எனக்கு இரத்தம் கொதித்தது.

இந்த அநியாயத்தைச் சும்மாவிட்டு விடக் கூடாது என்று ஆவேசப்பட்டேன்.

இதைக் கவனித்த கனகராஜா, விரக்தியும் வேதனையுமாய்ச் சிரித்தார்.

"தும்பை விட்டுட்டு வாலைப் பிடிக்கிறாப்ல ஆய்டுச் செய்யா... திருமலை அரசியல் பிடிப்புள்ள ஆள். எதையும் அஞ்சாமல் நின்னு செய்வான். அவன்ட்ட மல்லுக்கட்ட உன்னால முடியாது. இன்னும் கொஞ்சம் இதம் பதமாப் பேசி, ஏதாவது ஒரு தொகையை வாங்கிக்கப் பார்க்கலாம். நீ யோசனை பண்ணிச் செய் எதையும்" என்றார்.

நானும் யோசித்துப் பார்த்

அமரர் கல்கி நினைவுச் சிறுகதைப் போட்டியில் பிரசுரத்துக்குத் தேர்வான கதை



தேன். யோசிப்பதே அயர்வாய் இருந்தது. ஓர் இயலாமையின் ஆதிக்கம் என்னுள் பரவலானது.

கோர்ட்டுக்குப் போகலாம். சிவில் கேஸை வதவதவென்று இழுத்துக் கொண்டு போவார்கள். அவன் ஆண்டு அனுபவிக்க, நான் நொந்து நூலாம்படையாகிப் போக நேரும். இது வல்லவனுக்கும் பொல்லாதவனுக்குமான காலம்!

என்னிடம் இருப்பது மென்மனம். அதில் போராடும் குணம் எல்லாம் கிடையவே கிடையாது. தப்புச் செய்தவன் கடவுளால் தண்டிக்கப்படுவான் என்று எண்ணும் நியாயம் தழுவுகிற மனம் எனக்கு. பணம் நஷ்டமாகும்; காலம் விரயமாகும். தொலையட்டும்; மனச் சஞ்சலமாவது இல்லாமற் போகுமல்லவா!

கனகராஜாவுக்கும் இதில் நிறைய வருத்தம்தான். அதனை ஊராரிடம் பகிர்ந்துகொண்டார்.

"என்னடா இது பெரிய அநியாயமாய் இருக்கு! ஒருத்தன் கொஞ்சம் வெள்ளந்தியாய், இளகின மனசுக்காரனாய், உதவி பண்ற குணத்தோட இருந்தான்னா, அவனை அப்படியே மொங்காம் போட்டுர்றதா?"

திருமலை அப்படி என்ன பெரிய கொம்பனா? கரை போட்ட வேட்டியைக் கட்டிட்டா, என்ன வேணாலும் பண்ணலாம், இஷ்டப்படியெல்லாம் நடக்கலாம்னு நினைச்சுக்கிட்டு அலையறானா?"

"அது மணியனோட குடும்பத்துச் சொத்து. அவனோட பாட்டனும் முப்பாட்டனும் வியர்வை சிந்தி சம்பாதிச்ச சொத்து. இந்த எத்துவாளி திருமலைப்பய, ஏரப்பாளித்தனம் பண்ணி ஒண்ட இடம் வாங்கிட்டு இப்ப அமுக்கப்பாக்கான். விட்ருவமா அவனை!

ஆட்டோகிராஃப் சாஃப்ட்வேர்


ஆட்டோகிராஃப் என்பது வெறும் கையெழுத்தல்ல... அது ஓர் ஆவணம். மனதுக்குப் பிடித்த ஹீரோ, ஹீரோயின்களிடமோ அல்லது பிரபலங்களிடமோ ஆட்டோகிராஃப் வாங்க விரும்புவது நமது இயல்பு மட்டுமல்ல, கனவும் கூட. என்றாலும் நம் எல்லோருக்குமே அந்தக் கனவு எளிதில் நிறைவேறிவிடுவதில்லை. ஆனால், இனி அந்தப் பிரச்னையில்லை.

உங்களிடம் ஒரு மொபைல் போன் இருந்தால் போதும். உலகின் எந்த மூலையில் இருந்தாலும் சரி, எந்த நேரமானாலும் சரி உங்களுக்குப் பிடித்த ஹீரோ / ஹீரோயினுடைய ஆட்டோகிராஃபை போட்டோவோடு உங்களது மொபைலில் டவுன்லோடு செய்து கொள்ள முடியும்.

www.mobileautograph.com என்கிற இணைய தளத்தின் மூலமாகவோ அல்லது எஸ்.எம்.எஸ். மூலமாகவோ இதனைப் பெறலாம். இதற்கான சாஃப்ட்வேரை வடிவமைத்திருப்பது Nexmoo solutions india pvt. ltd.

இந்த ஆட்டோகிராஃப்களுக்காக திரைத்துறை பிரபலங்களிடமிருந்து சட்டபூர்வமான அனுமதியையும் பெற்றிருக்கிறது இந்நிறுவனம்.

- உமா




ஊர்ல பெரிய மனுசங்கன்னு நாங்க நாலு பேர் எதுக்கு இருக்கோம். தப்புப் பண்ற வனை வெட்டிப் பொளந்துற மாட்டோம்?''

''இப்ப அந்தப் பய திருமலை இங்க வந்தாகணும். கனகராஜா நாங்க சொன்னம்னு சொல்லிக் கூட்டிட்டு வாப்பா அவனை! சாவடில பெரியவங்க பூராவும் கூடி நின்னு கூப்புடுறாங்கன்னு சொல்லு. வரமாட்டேன் கிரமாட்டேன்னு எடக்குப் பேசினான்னா, சாவடியே கௌம்பி வந்துரும். வீட்டை அடிச்சு நொறுக்கிப் போட்ரும். அவனையும் மாறுகால் மாறுகை வாங்கி நடுவீதில கிடத்திரும்னு எச்சரிச்சுப் போடு. ''மணியனோட நிலத்தை இந்த நிமிசமே காலி பண்ணி அவன்ட்ட ஒப்பிச்சிரணும். நியாயந் தப்புன பயலுகளை இந்த ஊர்லயே இருக்க விடமாட்டாங்கன்னு அடிச்சுச் சொல்லிப் போடு.''

எல்லோரும் கொந்தளித்துப் போய் பேசினார்கள். வெங்குப் பாட்டன், வேம்புத் தாத்தா, கோமதி ஆச்சி என்று ஊர்ப் பெருசுகள் திரண்டு விட்டன.

நியாயம் கேட்க வந்திருக்கும் இந்தக்

''எடக்குப் பேசினான்னா வீட்டை அடிச்சு நொறுக்கிப் போடுவோம்!''



கிழங்களிடமிருந்து மன்னிக்கவும், வயதானவர்களிடமிருந்து துர்க்கந்தம் எதுவும் வந்து என்னைத் தாக்குவதாகத் தெரியவில்லை.

அங்கே, நியாயத்தின் வாசனை மட்டுமே முழுவீச்சுடன் பரவி நிற்பதைப் போல் உணர்ந்தேன். ●

விமர்சனம்

இருவர் மட்டும்

அடர்ந்த காடு, சலசலக்கிற நீரோடை, சிலீரிட வைக்கற மிருகங்களின் ஓலம், பறவைகளின் இன்னிசைன்னு படம் முடியற வரைக்கும் காட்டுக்குள்ளேயே வாழற ஃபீலிங். நாயகன் அபய், யதார்த்தமான நடிப்பைத் தந்திருக்கார். தமக்குத்தாமே பேசிக்கிறதும், பறவை, விலங்குகள்கிட்ட பாசம் காட்டுறதும் இதம்.

காட்டுல வழி தவறின நாயகி சுனிதா வர்மா. நடிப்புல செயற்கைத்தனம் ஜாஸ்தி. இளாயரே போதும்னு முடிவு பண்ணிட்டாங்க போல. சிதிலமடைஞ்ச அறையில் அழுகிய பிணமா நாயகனால் அறிமுகப்படுத்தப்படுற அம்மா சீன் உறைய வைக்குது.

அருவிக்கரை மரவீட்டுக்காக கலை இயக்குநர் முரளிக்கு சபாஷ் போட்டே ஆகணும். வனாந்திரத்தையும், பயங்கரத்தையும் ஒளிப்பதிவாளரோட கேமரா அழகா, திகிலா பதிவு செஞ்சிருக்கு.

காடு விட்டா வீடு, வீடு விட்டா காடுன்னு கதை சுத்திச் சுத்தி ஒரே மாதிரி பயணிக்கிறதால கேன்டீன் விசிட்டைத் தவிர்க்க முடியல. அம்மா படத்தை வரைஞ்சு தந்த காதலிக்கு, காதலன் நார் பொம்மை செஞ்சு தர்றது போன்ற காட்சிகள்ல சென்டிமெண்ட் வாசம். விஜய் ஆண்டனி இசை படத்துக்குப் பலம். வைரமுத்து வரிகள் பளிச்.

வித்தியாசமான கதையைத் தேர்வு செய்த இயக்குநர், ரெண்டு பேர் மட்டுமே கொண்ட திரைக்கதையை நகர்த்திச் செல்ல தடுமாறியிருக்கார். விறுவிறுப்பும் மிஸ்ஸிங்.

புது முயற்சிக்காகப் பாராட்டலாம். ஆனா முயற்சி மட்டுமே வெற்றியைத் தந்துடாதுங்கறதை 'இருவர் மட்டும்' டீம் புரிஞ்சுக்கிட்டா சரி.

\- லஜ்ஜாவதி



Registered with the Registrar of Newspaper of India under No. 1041/57 * Registered No. TN/CC (S) DN/144/06-08 * Licensed to post without prepayment under PMG's Licence No. WPP TN/CC (S) DN/70/06-08* Registered as a Newspaper in Srilanka.

